2014, September 01-15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014

- பொது எதிரணியை அமைக்கும் திட்டத்தை சீர்குலைக்கும் முயற்சிகள்
- இலங்கையில் தொடரும் அவலமும் அவமானமும்
- மூன்றாம் உலக நாடுகளில் இடதுசாரிகள் தேங்கிப்போனது ஏன்?
- சமாதானத்திற்கு அஞ்சும் ஹமாஸ் இயக்கமும் இஸ்ரேலிய தலைவர்களும்
- செப்டெம்பர் 20 தீர்ப்புக்கு பிறகு தமிழக அரசியலில் அதிரடி மாற்றம் வருமா?

## மாறாத இந்திய நிலைப்பாடு



| | | |
|---|---|---|
| INDIA...............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS




**Subscribe Today**

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781
ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனித இனத்தின் வரலாறு என்பது கூடுதலான அளவுக்கு கல்விக்கும் கெடுதிக்கும் இடையிலான ஓட்டப் பந்தயமாக மாறிவிட்டது.


- எச்.ஜி.வெல்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமகாலம்
2014, செப்டெம்பர் 01 - 15
பக்கங்கள் - 68





11 டில்லியில் இருந்து வரும் தொல்லை
16 பொது எதிரணியை அமைக்கும் திட்டத்தை சீர்குலைக்கக்கூடிய முயற்சிகள்
24 பின் தொடரும் தவறுகள்
31 இந்திய நிலைப்பாட்டை ஒளிவு மறைவின்றி கூட்டமைப்பிடம் தெளிவுப்படுத்திய மோடி
34 இலங்கை விவகாரத்தில் மாறாத இந்திய நிலைப்பாடு
41 இலங்கையில் தொடரும் அவலமும் அவமானமும்
46 மூன்றாம் உலக நாடுகளில் இடதுசாரிகள் தேங்கிப்போனது ஏன்?
52 தமிழக அரசியலில் அதிர்வு அலைகளை ஏற்படுத்தும் செப்டெம்பர் 20
56 சமாதானத்துக்கு அஞ்சும் ஹமாஸ் இயக்கமும் இஸ்ரேலியத் தலைவர்களும்









*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் மோடியும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான தூதுக்குழுவினர் அண்மையில் டில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்கள். இலங்கை இனநெருக்கடிக்கு அரசியல் இணக்கத் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளில் நீண்டகாலமாகக் காணப்படுகின்ற முட்டுக்கட்டை நிலையைத் தளர்த்துவதில் அல்லது உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான இன்றைய காலகட்டத்தில் தீவிர இராணுவமயமாக்கல் போன்ற செயற்பாடுகளின் விளைவாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்கள் எதிர்நோக்குகின்ற கெடுபிடி நிலையைத் தணிப்பதில் இந்த டில்லி சந்திப்பினால் எந்தளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்ற கேள்வி ஒருபுறமிருக்க, மறுபுறத்தில்,இன்றைய அரசியல் சூழ்நிலைகளின் பின்புலத்தில் அச்சந்திப்புக்கு இருக்கக்கூடிய முக்கியத்துவத்தை எவரினாலும் மறுதலிக்க முடியாது.

இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர் என்று கொழும்பு ஆட்சியதிகார வட்டாரங்கள் நம்பிக்கொண்டிருந்த டாக்டர் சுப்பிரமணியன்சுவாமி, 'மோடி அரசாங்கத்தின் அதிகாரிகளைச் சந்திப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் புதுடில்லிக்குப் பயணமாவதற்கு முன்னதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அனுமதியைப் பெற வேண்டியிருக்கும்' என்று சொன்னார். வருடாந்த பாதுகாப்புத் துறை கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் தலைநகருக்கு வந்திருந்த டாக்டர் சுவாமி நாடு திரும்புவதற்கு முன்னதாகவே மோடி அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் சம்பந்தன் தலைமையிலான குழுவினர் டில்லிக்குச்சென்று பேச்சுவார்த்தைகளை நடத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. பிரதமர் மோடியைச் சந்திப்பதற்கு முன்னதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜுடனும் வெளியுறவுச் செயலாளர் சுஜாதா சிங் உட்பட உயர்மட்ட அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

பிரதமர் மோடி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இலங்கை நெருக்கடிக்கான அரசியல் தீர்வைப் பொறுத்தவரை இந்தியாவின் முன்னைய காங்கிரஸ் அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் பாரதிய ஜனதா தலைமையிலான புதிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் இடையே எந்தவேறு பாடுமேயில்லை. அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் அடிப்படையில் தீர்வு முயற்சிகளில் முன்னேற்றம் எட்டப்பட வேண்டும் என்றுதான் மோடி கூறியிருக்கிறார். தனது பதவியேற்பு வைபவத்தில் பங்கேற்பதற்காக கடந்த மே மாத பிற்பகுதியில் டில்லிக்குச் சென்றிருந்த ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் நடத்திய முதல் சந்திப்பிலும் மோடி இதையே வலியுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆக, இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இலங்கைத் தமிழர்கள் புதுடில்லியிடமிருந்து எதிர்பார்க்கக் கூடியவற்றின் எல்லைக்கோடுகள் மீண்டும் ஒரு முறை கூட்டமைப்பின் தலைவர்களுக்குக் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

வடமாகாண சபையின் சுமுகமான செயற்பாடுகளை உறுதி செய்வதற்கு அவசியமான விடயங்களிலும் அக்கறைகாட்டிய இந்தியப் பிரதமர் அவை குறித்து கலந்துரையாடுவதற்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை பிறிதொரு சந்தர்ப்பத்தில் தனியாகச் சந்தித்துப் பேசுவதிலும் ஆர்வம் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.


தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இந்தியத் தலைநகரில் நடத்திய உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளின்போது கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா கலந்துகொண்டமை முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒரு அம்சமாகும். வழமையாக நாடுகளுக்கிடையிலான முக்கியமான இருதரப்பு பேச்சுவார்த்தைகள், அரசாங்கத் தலைவர்களின் விஜயங்கள், வெளியுறவு அமைச்சர்கள் மட்ட பேச்சுவார்த்தைகள் போன்றவற்றின் போதே சம்பந்தப்பட்ட நாடுகள் அவற்றின் தூதுவர்களை வரவழைப்பது நடைமுறையாக இருந்துவருகிறது. பேச்சுவார்த்தைகளின் போது சின்ஹாவின் பிரசன்னம் கூட்டமைப்புத் தலைவர்களின் விஜயத்துக்கு புதுடில்லி கொடுத்த முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

மே மாதத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இலங்கையைச் சேர்ந்த தரப்பு ஒன்றுடன் மோடி நடத்தியிருக்கக்கூடிய முதன் முதலான பேச்சுவார்த்தையாக கூட்டமைப்புத் தலைவர்களுடனான சந்திப்பே அமைந்திருக்கிறது. இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளில் பங்கும் ஈடுபாடும் கொண்ட பிரதான ஒரு தரப்பினராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை இந்தியா தொடர்ந்து சம அளவில் மதிக்கும் என்ற செய்தி இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. மற்றும்படி அரசியல் தீர்வு காணும் விடயத்தில் உள்நாட்டுச் செயன்முறைகளில் குறிப்பிடத்தக்க நகர்வுகளைக் காணக்கூடியதாக இருக்கும் என்று நம்பிக்கை கொள்வதற்கான அறிகுறியேதுமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்










## சுயசரிதை எழுதுவதன் நோக்கம் என்ன?

இந்தியாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட்வார் சிங் எழுதிய சுயசரிதை நூல் தொடர்பான பல விடயங்களை விளக்கமாகத் தந்த சமகாலத்துக்கு பாராட்டுக்கள். என்னைப் பொறுத்தவரையில் இவ்வாறு புத்தகங்களை எழுதுபவர்களில் பலரும் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் நிகழ்ந்திருக்கக்கூடிய சம்பவங்களுக்கு குற்றப் பொறுப்புள்ளவர்கள்தான். ஏனெனில் தாம் அமைச்சுப் பொறுப்புகளில் இருக்கும்போது நடக்கும் அநீதிகள், தவறுகளை எல்லாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு பதவியும், பொறுப்பும் போன பின்பு இவ்வாறான நூல்களை எழுதி பிரபலமடைய நினைக்கிறார்கள். இவர்கள் நேர்மையானவர்களாக இருந்தால் அப்போதே இவற்றை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இல்லாதுவிட்டால் தொடர்ந்தும் அமைதியாக இருக்க வேண்டும்.

இதுவிடயத்தில் நட்வார்சிங் மட்டுமல்ல, இந்தியப் பிரதமராக மன்மோகன் சிங் இருந்தபோது அவரின் ஊடக ஆலோசகராகவிருந்த சஞ்சய் பாரு என்பவரும் நூல் ஒன்றை எழுதி பல ரகசியங்களை வெளியிட்டு சர்ச்சையைக் கிளப்பினார். அந்த வழியில் நட்வார் சிங்கும் 'ஒரு ஜென்மம் போதாது' என்ற நூலை எழுதி அதில் இலங்கைப் பிரச்சினை உட்பட முன்னர் வெளியில் தெரிந்திராத பல விடயங்களையும் வெளியிட்டார். அதன் பின்னர் இந்தியாவின் நிலக்கரித் துறைச் செயலாளராகவிருந்த பி.து.பராக் என்பவரும் நூல் ஒன்றை எழுதி நிலக்கரி ஊழலை அம்பலப்படுத்தினார். அடுத்ததாக முன்னாள் கணக்கு அறிக்கை தணிக்கை அறிக்கையாளரான வினோத் ராய் தனது நூலில் 2ஜி ஊழல், கொமன் வெல்த் விளையாட்டு ஊழல் தொடர்பில் பல ரகசியங்களை வெளியிட்டார்.

இவர்கள் எல்லாம் தாம் பதவிகளில் இருக்கும் போது ஏன் இவற்றை வெளியிடவில்லை? அப்படியானால் இவர்களும் நேர்மையற்றவர்கள் தானே? தற்போது நூல்களை எழுதி ரகசியங்களை வெளியிடுவது பிரபலமடைய வேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர வேறெதுவாக இருக்க முடியும்? அரசியல், உயர்பொறுப்புகளில் இருந்து தாம் விலகினாலும் ஏதோவொரு வகையில் தம்மை பிரபலப்படுத்த இவர்கள் முயற்சித்தாலும் இதிலும் ஒரு நன்மையுண்டு. அதாவது, மோசடி செய்வோருக்கு எங்கே எம்முடன் இருப்பவர் பின்னாளில் நூலை வெளியிட்டுவிடுவாரோ என்ற அச்சம் இருக்கும்.

மா.கணேசமூர்த்தி
பருத்தித்துறை

## துணிச்சலான கருத்துகள்

அரசியல் ஆய்வாளர் திஸ்ஸரணி குணசேகரவின் கட்டுரைகள் அண்மைக்காலமாக சமகாலத்தில் தொடர்ச்சியாக பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. அவரது துணிச்சலான கருத்துகளை தமிழ் வாசகர்கள் சமகாலத்தினூடாகவே பெருமளவுக்கு வாசிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆட்சியாளர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதில் அவரைப்போன்று இன்று கர்ணகடூரமாக எழுதுபவர் எவருமில்லை என்று கூடச் சொல்லலாம். திஸ்ஸரணியின் கட்டுரைகளை பிரசுரிப்பதை சில ஆங்கில ஊடகங்கள் தவிர்த்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் ஆக்கங்களை சமகாலம் தொடர்ந்து பிரசுரிக்க வேண்டும்.

முரளிதரன் சசிகரன், சிலாபம்.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் கவனத்துக்கு

சமகாலத்தில் வெளியாகும் வாக்குமூலம் பலராலும் விரும்பிப்படிக்கப்படும் பகுதி. அதில் வரும் பல வாக்குமூலங்கள் பலராலும் முகநூல் பக்கங்களில் பதிவிறக்கம் செய்யப்படுவதையும் நான் பார்த்திருக்கிறேன். இதில் நான் கூறவருவது என்னவென்றால் கடந்த சமகாலம் இதழின் வாக்குமூலம் பகுதியில் ஆச்சரியமூட்டும் வகையில் தவறுகள் இடம்பெற்றுள்ளன. வாக்குமூலத்திற்கு உரியவரின் புகைப்படம் பிரசுரிக்கப்படாமல் தொடர்பில்லாதவர்களின் படங்கள் அதிலும் ஒருவரின் படம் இருதடவைகள் கூட பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நான் சமகாலத்தின் கிரமமான வாசகன் என்ற வகையில் ஆசிரியரிடம் ஒரு வேண்டுகோள். சஞ்சிகை உலகில் சமகாலத்திற்கென கனதியானதொரு இடம் உண்டு. அதில் வரும் ஆக்கங்களுக்கு மட்டுமன்றி,பக்க வடிவமைப்பு, அச்சுத் தவறுகள் இடம்பெறாமலிருப்பதை உறுதி செய்வதில் கூடுதல் பட்ச கவனம் செலுத்துதல் என்பன குறிப்பிடத்தக்கவை. தவறுகள் தெரிந்து செய்யப்படுவதில்லைதான். ஆனாலும் சமகாலம் போன்ற இதழ்களில் எந்தத் தவறுகளும் இடம்பெறக்கூடாதென்ற ஆர்வம் கொண்ட வாசகன் என்ற அடிப்படையிலேயே இதனைச் சுட்டிக்காட்டுகிறேன். கவனத்தில் எடுங்கள்.


சு.சுதாகன், தெஹிவளை.

**ஆசிரியர் குறிப்பு:** நினையாப் பிரகாரம் இடம்பெற்றுவிட்ட அத்தவறினால் சமகாலம் வாசகர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்துக்கு வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இத்தகைய தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

## பெற்றோரின் கவனத்திற்கு

நரேந்திரமோடி இந்திய பிரதமராக பதவியேற்றுக் கொண்டதன் பின்னர் அவரது முதலாவது சுதந்திர தின உரையின் ஒருபகுதி சமகாலத்தின் கடந்த இதழில் வெளியாகியிருந்தது. வழமையாக சமகாலத்தின் முதலாவது பக்கத்தில் வெளியாகும் பிரசித்திபெற்ற பிரமுகர்களின் வாசகங்களில் நரேந்திர மோடியின் கூற்றே மிக அண்மையிலான அதுவும் தற்போது பதவியிலிருக்கும் ஒரு தலைவரது வாசகமாக பதிவாகியிருக்கிறது. அதற்கான கனமும் மோடியின் கூற்றில் இருக்கிறது. பாலியல் வல்லுறவு சம்பவங்கள் பற்றி தமதுரையில் குறிப்பிட்டுள்ள மோடி, வீட்டிலிருந்து வெளியில் செல்லும் பெண் பிள்ளைகள் எங்கு போகிறார்கள் என்று கேட்பதைப் போன்று ஆண் பிள்ளைகளையும் பெற்றோர் கண்டிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். அதுவும், குற்றத்தைச் செய்யும் ஒவ்வொருவருமே யாரோ ஒருவரது மகன் தான் என்று மோடி குறிப்பிட்டிருப்பதை கட்டாயம் பெற்றோர் அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

துரைசிங்கம் முத்துக்குமார், கைதடி.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 05

2014, செப்டெம்பர் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

தாராளமனப்பான்மை என்பது உங்களை விடவும் எனக்குக் கூடுதலாகத் தேவைப்படுகிறதை எனக்குத் தருவதல்ல, என்னைவிடவும் உங்களுக்குக் கூடுதலாகத் தேவைப்படுவதை எனக்குத் தருவதாகும்.

- கலீல் கிப்ரான்



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரக்குழமலம்....

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு பிரதியமைச்சர் பதவியை ஏற்குமாறு என்னிடம் கேட்கப்பட்டபோது அதை ஏற்பதா இல்லையா என்று தீவிரமாக யோசித்தேன். வாசுதேவ நாணயக்காரவுக்கு கீழ் பிரதியமைச்சராக இருக்கப்போகிறேன் என்பதால் அப்பதவியை ஏற்கலாம் என்ற முடிவுக்கு வந்தேன். நாணயக்காரவைப் போன்ற ஆற்றல்மிக்க ஒருவரின் கீழ் பணியாற்றுவதன் மூலம் நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம். அதனால் எந்தத் தயக்கமும் இன்றி பதவியை ஏற்றேன்.



பிரதியமைச்சர் திகாம்பரம்



இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியுடன் என்ன பேசினோம் என்பதை நாம் பகிரங்கமாகக் கூற மாட்டோம். அதேபோன்றே, இந்திய அரசாங்கத் தரப்பினரும் எங்களுடன் பேசியவிடயங்களைப் பகிரங்கப்படுத்தமாட்டார்கள். இராஜதந்திரமாகச் செயற்பட வேண்டியிருக்கிறது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எம்.பி.மாவை சேனாதிராஜா



இந்தியாவில் கூட மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. இதுதொடர்பாக பாரதிய ஜனதாவைச் சேர்ந்த தலைவர் டாக்டர் சுப்பிரமணியன் சுவாமி கருத்துத் தெரிவித்திருக்கிறார். அதனால், இலங்கை அரசாங்கம் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்க முடியாது.

கலாசார அலுவல்கள், தேசிய பாரம்பரிய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன



எமது தாய்மொழியைப் பற்றி அக்கறைப்படாமல் வெளிநாட்டு மொழிகளை மாத்திரம் கற்பதில் குருட்டுத்தனமான ஆர்வத்தை வெளிக்காட்டுவதன் விளைவாக, இலங்கையில் சிங்களவர்கள் பெரும்பான்மையினராக வாழப்போகும் கடைசி நூற்றாண்டாக இந்த நூற்றாண்டே இருக்கப்போகிறது.

தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர் சம்பிக்க ரணவக்க



காலஞ்சென்ற பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் ஐக்கிய தேசியக்கட்சியின் உறுப்பினராக இருந்து, பின்னர் அதிலிருந்து பிரிந்துதான் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பித்தார். அவர் மீண்டும் ஐ.தே.க.வில் இணையவில்லை. பண்டாரநாயக்கவைப் போன்றே நானும் மீண்டும் இணைய மாட்டேன்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன



இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி யதார்த்தவாதி. அத்துடன் மதிநுட்பமுடைய தலைவர். இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையினதும் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தினதும் தற்போதைய நிலையை நாம் விளக்கிக் கூறினால், அவர் விளங்கிக் கொள்வார். புதிய ஆரம்பம் ஒன்றை நோக்கி அவரால் நகர முடியும்.

மேல்மாகாண அமைச்சர் உதய கம்மன்பில



ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து வெளியேறியவர்களை மீண்டும் வந்து இணையுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பு ஏற்கனவே வேறு கட்சியில் அங்கத்தவர்களாகச் சேர்ந்துவிட்டவர்களுக்கு பொருந்தாது. நான் இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர். விக்கிரமசிங்க என்னை மீண்டும் இணையுமாறு அழைக்கவில்லை.

கடற்றொழில், நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன

பாராளுமன்றத்தில் சபை அமர்வுகளில் பங்கேற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை கடந்த பல வருடங்களாக மிகவும் குறைந்துவிட்டது. அரசியல் கட்சிகள் அவற்றின் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒழுங்காக வழிநடத்தாததே இதற்கு பிரதான காரணம். பாராளுமன்ற ஆலோசனைக்குழுக் கூட்டங்களுக்கு வருமாறு கேட்பதற்கு உறுப்பினர்களைத் தேடி அலைய பாராளுமன்ற உத்தியோகத்தர்களை நாம் அனுப்ப வேண்டியிருக்கிறது.



சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு


# பயங்கரவாதத்திற்கு எதிரான மேற்குலகின் 13 வருடகால போரின் 'இலட்சணம்'

9/11க்குப் பிறகு 13 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், மேற்குலகிற்கு விரோதமான பயங்கரமான ஜிஹாதி இயக்கமொன்று இன்று ஈராக்கிலும் சிரியாவிலும் பெருமளவு பகுதிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது. இந்த ஈராக்கும் சிரியாவும் ஆப்கானிஸ்தானை விடவும் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்குமே அண்மித்தானவை.

இஸ்லாமிய அரசு (Islamic State) என்ற இந்த ஜிஹாதி இயக்கம் பெருமளவு வளங்களையும் ஆயுத தளபாடங்களையும் ஏன் சிரியாவில் ஒரு இராணுவத் தளத்தையும் கூட அதன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அது தனது பிரசாரங்களை சமூக ஊடகங்கள் மூலமாக தீவிரமாக முன்னெடுத்துவருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.


கடந்தமாத நடுப்பகுதியில் அமெரிக்க ஊடகவியலாளரான ஜேம்ஸ் போலேயை சிரச்சேதம் செய்ததைக் காண்பிக்கும் வீடியோவை வெளியிட்டு மேற்குலக நாடுகளை மேலும் சினமூட்டியிருந்தது இஸ்லாமிய அரசு. ஈராக்கில் தங்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் இறங்கியிருக்கும் அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்படுகின்ற குர்திஷ் இனத்தவரை அச்சுறுத்தி அடிபணிய வைக்கும் நோக்கில் குர்திஷ்காரர் ஒருவரை மரண தண்டனைக்குள்ளாக்குவதைக் காண்பிக்கும் வீடியோவையும் சில தினங்களுக்கு முன்னர் ஜிஹாதிகள் வெளியிட்டிருந்தார்கள்.

ஜேம்ஸ் போலேயை ஜிஹாதிகள் சிரச்சேதம் செய்த செயல் அண்மைய வேறு எந்த சம்பவத்தையும் விடவும் அவர்களின் கொடூரத்தனத்தை உலகிற்கு உணர்த்தியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்தி ஆய்வு



எனலாம். ஈராக்கிய அரசாங்கத்துக்கு எதிராகப் போர்தொடுத்து அதன் பல பகுதிகளைக்கைப்பற்றி தொடர்ந்தும் முன்னேறுகின்ற இஸ்லாமிய அரசுப் படைகளுக்கு எதிராக அமெரிக்கப் போர்விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இந்தத் தாக்குதல்களுக்கு பழிவாங்கும் நோக்குடனேயே ஜேம்ஸ் போலேயை சிரச்சேதம் செய்ததாக அவர்கள் முழு உலகிற்குமே அறிவித்தார்கள். அத்துடன் தங்களிடம் பிடிபட்டிருக்கும் மேலும் பல பணயக் கைதிகளுக்கு எதிர்வரும் நாட்களில் மரண தண்டனை வழங்கப்படும் என்று ஜிஹாதிகள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

ஜேம்ஸ் போலே பல மாதங்களுக்கு முன்னர் சிரியாவில் வைத்து இஸ்லாமிய அரசு ஜிஹாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். அவரை விடுதலை செய்வதற்கு பணயமாக 10 கோடி டொலர்களைத் தங்களுக்குத் தரவேண்டுமென்ற ஜிஹாதிகளின் கோரிக்கையை அமெரிக்க அரசாங்கம் நிராகரித்ததையடுத்தே அவர் சிரச்சேதம் செய்யப்பட்டதாக பின்னர் தெரியவந்திருக்கிறது. இஸ்லாமிய அரசுக்கும் அதன் நடவடிக்கைகளுக்கும் எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சில தினங்களில் அச்சிரச்சேதம் இடம்பெற்றது என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

ஈராக்கில் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளில் கிறிஸ்தவர்கள், யதிஸிகள் மற்றும் முஸ்லிம்கள் என்று நூற்றுக்கணக்கானவர்களை இஸ்லாமிய அரசு கடந்த பல வாரங்களாக படுகொலை செய்திருக்கிறது. ஜேம்ஸ் போலே ஒரு ஊடகவியலாளர் என்பதாலும் மிகவும் காட்டுமிராண்டித்தனமாக அவர் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டிருப்பதாலுமே அவரது மரணம் உலகின் கவனத்தைக் கூடுதலான அளவுக்கு ஈர்த்தது.

மேற்காசியாவில் இன்று செல்வாக்குச் செலுத்துகின்ற அரசு சாரா அமைப்புகளில் பலம் பொருந்தியதாக இஸ்லாமிய அரசு விளங்குகிறது. இது முன்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். என்று (Islamic state in Iraq and Syria) அழைக்கப்பட்டது. அமெரிக்க ஊடகவியலாளரை சிரச்சேதம் செய்தவர் பிரிட்டனில் வாழ்ந்தவர் என்று அடையாளம் கண்டிருப்பதாக பிரிட்டிஷ் புலனாய்வுத்துறையினர் கூறியிருக்கிறார்கள்.

சுமார் 800 பிரிட்டிஷ் முஸ்லிம்கள் ஜிஹாதிகளுடன் இணைவதற்காக சிரியாவுக்கும் ஈராக்கிற்கும் சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. பிரான்ஸில் இருந்து சென்றவர்களின் எண்ணிக்கை சுமார் 900 என்று தெரியவருகிறது. மத்திய கிழக்கையும் உலகையும் பீடித்துள்ள புற்றுநோயே இஸ்லாமிய அரசு என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வர்ணித்திருக்கிறார்.

2001 செப்டெம்பர் 11 இல் நியூயோர்க்கிலும் வாஷிங்டனிலும் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களையடுத்து அமெரிக்கா தலைமையில் மேற்குலகம் பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போரைப் பிரகடனம் செய்து 13 வருடங்கள் கடக்கின்ற நிலையில், அன்று எதிர்நோக்கியதையும் விடவும் படுமோசமான ஆபத்துக்கு இன்று முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது.

ஆப்கானிஸ்தானில் உள்ள அல்கயெடா முகாம்களை அழிப்பதற்காக போரைத் தொடுத்த அமெரிக்காவும் அதன் நேச அணி நாடுகளும் மத்திய கிழக்கில் கையாண்ட தந்திரோபாயங்களே இன்று இஸ்லாமிய அரசு இயக்கம் இந்தளவுக்கு பலம்பொருந்தியதாக மாறுவதற்குக் காரணம் என்பதில் சந்தேகமில்லை. இதுதான் அமெரிக்கா தலைமையிலான பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போர் முன்னெடுக்கபட்ட இலட்சணம்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

திஸ்ஸரணி குணசேகர



# டில்லியில் இருந்து வரும் தொல்லை

நரேந்திரமோடி பேசிவிட்டார். அவரின் வார்த்தைகள் மன்மோகன் சிங்கின் வார்த்தைகளில் இருந்து வேறுபட்டவையல்ல.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தனது நிருவாகத்தினால் விரும்பப் படுகின்ற தீர்வின் வரையறைகள் எவை என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடனான சந்திப்பின்போது அவர் தெளிவுபடுத்திக் கூறியிருக்கிறார். ஐக்கியப்பட்ட இலங்கைக்குள், அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் மீது கட்டமைக்கப்படுகின்ற ஒரு தீர்வுத்திட்டமே அதுவாகும். அதன் அர்த்தம் அந்தத் திருத்தத்திற்கு அப்பால் (13 +) சமஷ்டி வரை என்பதைத் தவிர, இதுகாறும் உள்ளவாறான 13க்குக் குறைவான ஏற்பாடுகள் (13-) அல்ல என்பதாகும். பிரிவினையோ, சமமேளனமோ அல்ல.

முன்னைய காங்கிரஸ் நிருவாகத்தின் நிலைப்பாட்டில் இருந்து பாரதிய ஜனதாவின் நிலைப்பாடு பண்பு அடிப்படையில் வேறுபட்டதல்ல. அவ்வாறு ஏதாவது வேறுபாடு இருப்பதாக இருந்தால், அது நடைமுறைப் படுத்தலுக்கான பொறிமுறையாகவே இருக்கக்கூடும். குறித்துரைக்கப்பட்ட ஒரு கால வரையறைக்குள் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி அதற்கு அப்பாலும் செல்லுமாறு கொழும்புக்கு மோடி தொடர்ச்சியாக நெருக்குதலைக் கொடுப்பாரா? ஏதாவது ஒரு பயணத் திட்டம் (Road Map) இருக்குமா? அல்லது பெய்ஜிங்குடனான கொழும்பின் உற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுகள் மற்றும் மோடியின் சொந்த அரசியல் - தேர்தல் தேவைகள் போன்ற விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்திய நெருக்குதலில் ஏற்றமும் இறக்கமும் காணப்படுமா?

கடந்த மே மாத பிற்பகுதியில் மோடியின் பதவியேற்பு வைபவத்திற்குப் பின்னர் உடனடியாக டில்லியில் இரு தலைவர்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் கூறப்பட்டதைப் போன்ற கருத்துகளே தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடமும் கூறப்பட்டிருக்கின்ற போதிலும், மோடியின் நிலைப்பாடு கொழும்புக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது என்பதிற் சந்தேகமில்லை. இரு சந்திப்புகளுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் ராஜபக்ஷாக்கள் தங்களைப் போன்றே பெரும்பான்மையினவாத உணர்வு (முஸ்லிம் விரோதமும் சேர்ந்து) கொண்ட பாரதிய ஜனதாவுடன் விசேடமான உறவு முறையை தங்களால் ஏற்படுத்திக் கொள்ள முடியுமென்று நம்பிக்கையை வளர்த்திருந்தார்கள். இந்தத் தவறான எண்ணத்தை வளர்த்துக் கொள்வதில் அவர்களுக்கு சுப்பிரமணியன் சுவாமி பெருமளவுக்கு உதவியும் ஒத்தாசையும் செய்திருந்தார்.

முன்னர் தனது சொந்தத்தில் ஜனதா கட்சியின் தலைவராக இருந்த கலாநிதி சுவாமி கடந்த வருடமே பாரதிய ஜனதாவில் இணைந்தார் என்ற போதிலும், மோடி அரசாங்கத்தின் இலங்கைக் கொள்கையை வகுப்பதில் அவருக்கு தீர்க்கமான ஒரு பங்கு இருக்கிறது என்று சகோதரர்கள் உண்மையில் நம்பினார்கள். கடந்தமாத நடுப்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புத்துறைக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய கலாநிதி சுவாமி இலங்கையில் இருப்பது மொழிப்பிரச்சினையே தவிர, இனப்பிரச்சினையல்ல என்று கூறிய போது அவர் மோடிக்காகவே பேசுகிறார் என்று ராஜபக்ஷாக்கள் நினைத்திருக்கக்கூடும். 13+க்கு மாத்திரமல்ல 13க்கே எதிராக குரல் கொடுத்த சுவாமி வடமாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரங்கள் தேவையில்லை என்று சொன்ன போது ராஜபக்ஷாக்களும் சிங்கள- பௌத்த பேரினவாத வகையறாக்களும் பெருமகிழ்ச்சியடைந்தார்கள் என்பது வெளிப்படையானது.

ஜனாதிபதி ராஜபக்ஷவிடமிருந்து அனுமதியைப் பெறாதபட்சத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் டில்லிக்கு விஜயம் செய்ய முடியாது என்று கலாநிதி

> “ராஜபக்ஷாக்கள் தங்களைப் போன்றே பெரும்பான்மையினவாத உணர்வு கொண்ட பாரதிய ஜனதாவுடன் விசேடமான உறவு முறையை தங்களால் ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்று நம்பிக்கை வளர்த்திருந்தார். இதற்கு சுப்பிரமணியன் சுவாமி பெருமளவிற்கு உதவியும் ஒத்தாசையும் செய்திருந்தார். மோடி அரசாங்கத்தின் இலங்கைக்கொள்கை வகுப்பதில் சுவாமிக்கு தீர்க்கமான பங்கு இருக்கின்றது என்று சகோதரர்கள் உண்மையில் நம்பினார்கள்”



சுவாமி கூறியபோது அவர் புதிய மோடி கோட்பாடொன்றை வெளிப்படுத்துகிறார் என்று கொழும்பு நம்பியிருக்கக்கூடும். பாரதிய ஜனதா அரசாங்கத்தின் கொள்கைகளை வகுப்பதில் கலாநிதி சுவாமிக்கு வல்லமைமிக்க பங்கொன்று இருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள பிரிவுகள் கருதிய போதிலும், கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையேயான முக்கிய விவகாரங்களில் அவருக்கு சம்பந்தம் இல்லை என்பதை அவர் கொழும்பில் வெளியிட்ட கருத்துகள் தெளிவாக உணர்த்தின. முன்கூட்டியே திட்டமிடப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களின் டில்லி விஜயம் அவர்கள் புறப்படுவதற்கு இரு நாட்கள் முன்னர் வரை கடுமையான இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது.

நீங்கள் ஒரு சிங்கள - பௌத்த பேரினவாதியாக அல்லது ஒரு தமிழ்த்தீவிரவாதியாக இல்லாத பட்சத்தில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பிலான மோடியின் நிலைப்பாட்டில் குற்றங்காணமாட்டீர்கள். 13+க்கான மோடியின் ஆதரவு ராஜபக்ஷாக்களுக்கும் புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் மத்தியில் உள்ள கடும் போக்காளர்களுக்கும் சமமான அளவுக்கு ஏற்புடையதாக இருக்காது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைவர்களின் டில்லி விஜயம் குறித்து ஜனாதிபதி ராஜபக்ஷ ஆத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமுற்றிருக்கிறார் என்று அறியக்கூடியதாக இருந்தது. ஆனால், ராஜபக்ஷாக்கள் எவ்வளவு தான் ஆத்திரமுற்றிருந்தாலும், (பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட கட்டுரை ஏற்படுத்திய சர்ச்சைக்குப் பிறகு) டில்லியிடமிருந்து விடுக்கப்பட்டிருக்கும் பிந்திய செய்திக்கு கடுந்தொனியில் உரசல்தனமாக அவர்கள் தங்களின் பிரதிபலிப்பை வெளிக்காட்டுவது சாத்தியமில்லை. உரத்த குரலிலான உத்தியோகபூர்வ பிரதிபலிப்புக்குப் பதிலாக, ராஜபக்ஷாக்கள் மௌனமான அல்லது தாழ்ந்த தொனியிலான உத்தியோக பூர்வமற்ற பிரதிபலிப்பை வெளிக்காட்டக்கூடும். இந்திய தலைமீட்டுக்கு எதிராக சகோதரர்கள் தங்கள் 'பயனுடைய' தீவிரவாதப் பகடைக்காய்களை (அமைச்சர்கள் விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, பொதுபலசேனா/ சிஹல ராவய) கட்டவிழ்த்துவிட்டு கூச்சல் போட வைக்க முயற்சிக்கக் கூடும்.

ராஜபக்ஷாக்கள் அதிகாரப் பங்கீட்டை (Division of power) அல்லது அடிப்படை மனித உரிமைகளை எந்தக் காரணத்துக்காக எதிர்க்கிறார்களோ அதே காரணத்துக்காகவே அதிகாரப் பரவலாக்கத்தையும் (Devolution) எதிர்க்கிறார்கள். இந்த ஜனநாயக நடவடிக்கைகளையெல்லாம் உயர்வதிகாரத்தைச் செலுத்தி நீண்ட காலம் ஆட்சி செய்வதற்கான தங்களது நிலையான விருப்பத்துக்கு குந்தகமானவையாக அவர்கள் நோக்குகிறார்கள். (பிரதானமாக தமிழ்ப் பகுதிகளில் வாக்களிப்பை பகிஷ்கரிக்க நிர்ப்பந்தித்த வேலுப்பிள்ளை பிரபாகரனின் அறிவற்ற செயல் காரணமாக) 2005 நவம்பரில் ஜனாதிபதி பதவியை வென்றெடுத்த பிறகு சகோதரர்கள் கேள்விக்கிடமின்றிய முறையில் வடக்கில் மாத்திரமல்ல, தெற்கிலும் தாங்கள் நினைத்தைச் செய்வதற்கு ஏதுவான வகையில் இலங்கையின் சகல நிறுவனங்களையும் இரக்கமற்ற முறையில் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மையினத்தவர்களுடன் மாத்திரமல்ல, பெரும்பான்மையினத்தவர்களுடனும் கூட (பௌத்த பிக்குமார் உட்பட) இச்சகோதரர்கள் தாங்கள் நினைத்த பிரகாரம் செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

> ஆளும் சகோதரர்கள் இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இருப்பதாக ஏற்றுக் கொள்வதேயில்லை. இலங்கையை அவர்கள் சிங்கள பௌத்த புனித பூமியாக கருதுகிறார்கள். சிறுபான்மையினத்தவர்கள் விருப்பமானால் எதிர்த்து பேசாமல் அடக்கஒடுக்கமாக வாழலாம் என்பதே சகோதரர்களின் நிலைப்பாடு

## இனப்பிரச்சினை இருப்பதை ஏற்றுக்கொள்வதேயில்லை

ஆளும் சகோதரர்கள் இலங்கையில் இனப்பிரச்சினை என்று ஒன்று இருப்பதாக ஏற்றுக்கொள்வதேயில்லை. இலங்கையை அவர்கள் 'சிங்கள - பௌத்த புனித பூமியாக' கருதுகிறார்கள். அங்கு சிறுபான்மையினத்தவர்கள் விருப்பமானால், எதிர்த்துப் பேசாமல், உரிமைகளைக் கேளாமல் அடக்க ஒடுக்கமாக வாழலாம் என்பதும் சிறுபான்மையினத்தவர்களின் மனக்குறைகள் எனப்படுபவையெல்லாம் நியாயப்பாடு இல்லாதவை - தீங்கானவை என்பதே சகோதரர்களின் நிலைப்பாடு. சிறுபான்மையினத்தவர்களின் எந்தவொரு பிரச்சினையையுமே கடுமையான சட்டங்கள் மற்றும் பொலிஸ்-இராணுவ நடவடிக்கைகள் மூலமாகத் தீர்க்கப்படவேண்டிய தேசியபாதுகாப்புப் பிரச்சினையாகவே அவர்கள் பார்க்கிறார்கள். அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் பெருமளவுக்கு துண்டாடப்பட்ட நிலையில் என்றாலும் நிலைத்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அரசியல் அதிகாரப் பரவலாக்கலுக்கான தேவையை ராஜபக்ஷாக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதல்ல, மாறாக, இந்தியாவை கடுமையாகப் பகைத்துக் கொள்வதற்கு அவர்கள் விரும்பவில்லை. உள்நாட்டில் வகுக்கப்படக்கூடிய தீர்வுகள் (Home Made Solutions) பற்றி ராஜபக்ஷாக்கள் பேசுவதெல்லாம் வெறுமனே தாக்காட்டும், ஏமாற்றும் முயற்சிகளேயாகும்.

## கோதாபயவின் கோட்பாடு

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற Centre for complex operations (CCO)என்ற அமைப்பினால் வெளியிடப்படுகின்ற 'PRISM' என்கின்ற சஞ்சிகையில் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ எழுதிய கட்டுரையொன்று அண்மையில் வெளியாகியிருக்கிறது.தந்திரநுட்பமுடைய தனது சகோதரர்கள் திட்டமிடுகின்ற மாற்றங்களின் முன்னோடி அறிவிப்பாளராக எப்போதுமே கோதாபய விளங்கிவந்திருக்கிறார். அக்கட்டுரையில் அவர் வெளியிட்டிருக்கும் கருத்துகள் ராஜபக்ஷவின் மூன்றாவது ஒரு பதவிக்காலத்தில் இலங்கைக்கு என்ன நேரும் என்பதை விளங்கிக் கொள்வதற்கு முக்கியமானவையாகும்.

இலங்கை அதன் கடந்த காலத்தில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் சரித்திரம் திரும்பிவராதிருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும் என்றும் கோதாபய கூறுகிறார். உண்மையில் அது சந்தேகத்திற்கிடமின்றியதே. கடந்தகாலம் எவ்வாறு விளங்கிக் கொள்ளப்படுகிறதோ அதிலேயே சகலதும் தங்கியிருக்கிறது. ராஜபக்ஷவின் விளக்கத்தின்படி இலங்கையின் கடந்தகாலம் 'சிங்களம் மட்டும் சட்டத்தை, பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் முறையை அல்லது சிங்கள மேலாதிக்கத்தின் அத்துமீறல்களைக் கொண்டிருக்கவில்லை; ஈழப்போருக்கு அரசியல் மூலகாரணிகள் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பிரிவினைவாதம் முற்றிலும் நாட்டுப் பிரிவினைக்கான தமிழர்களின் விருப்பத்தின் விளைவே'.

கடந்தகாலத்தைப் பற்றிய இந்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, மேலும் கடுமையான சட்டங்களையும் இராணுவமயமாக்கத்தின் அதிகரிப்பையும் கூடுதல் ஒடுக்குமுறையையுமே வரும் நாட்களில் இலங்கை காணப் போகிறது என்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கிறது.

## பயங்கரவாதம் மீண்டும் தலைகாட்டும் சாத்தியம்

'பிரதான ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இருக்கக்கூடிய குழுக்கள் கூட விடுதலைப் புலிகளின் சர்வதேச கட்டமைப்பில் இருந்தும் வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகள் ஆதரவுச் சக்திகளிடமிருந்தும் நிதியுதவியைப் பெறுகின்றன. இந்தக் குழுக்களுக்கு ஒரு ஜனநாயக முகம் இருப்பதுபோல் தோன்றுகின்ற போதிலும், அவற்றின் செயற்பாடுகளும் கருத்துகளும் தீவிரபிரிவினை வாதக் கோட்பாடு இன்னமும் மறைந்துவிடவில்லை என்பதையே வெளிக்காட்டுகின்றன. இக்குழுக்களின் இறுதி இலக்கு இலங்கையைத் துண்டாடுவதேயாகும். அவற்றின் செயற்பாடுகள் மற்றும் கருத்துகளின் விளைவாக, பிரிவினைவாதத்தின் பெயரில் மீண்டும் ஒரு தடவை ஆயுதமேந்தக்கூடிய வல்லமை தங்களுக்குக் கிட்டும் என்று குறிப்பிட்ட சில தீவிரவாதச் சக்திகள் உணரக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. இது உச்சபட்ச அக்கறையுடன் கையாளப்படவேண்டிய அவசியத்தைக் கொண்ட ஒரு முக்கியமான தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலாகும்' என்று கோதாபய எழுதியிருக்கிறார்.

> " சந்தேகமும் சகிப்புத்தன்மையின்மையும் வெறுப்புணர்வும் தேசப்பற்று என்று போற்றப்பட்டு இலங்கை பிணியுற்ற ஒரு சமூகமாக ஒரு அரசியல் மற்றும் இன, மத மட்டங்களில் தனக்கு எதிராக தானே போராடுகிற ஒரு சமூகமாக மாறப்போகிறது "

அவரின் இந்தக் கருத்தின் உண்மையான இலக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் ஏனைய ஜனநாயக தமிழ்க் கட்சிகளுமாகவேயிருக்க முடியும்.

ராஜபக்ஷவின் கூட்டாளி பேராசிரியர் ரொஹான் குணரத்ன போரின் முடிவுக்குப் பிறகு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசியலில் ஈடுபட அனுமதித்தது தவறு என்று அரசாங்கத்தை அண்மையில் கண்டனம் செய்ததை தற்செயலானதென்று கருதமுடியாது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு 'இந்தத் தவறு' திருத்தப்படக்கூடும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பயங்கரவாதக் குற்றச்சாட்டுகளின் பேரில் தடைசெய்யப்பட்டாலும் கூட ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

## தீவிரவாதக் குழுக்களின் தோற்றம்

'முன்னைய கிளர்ச்சிகளில் சம்பந்தப்பட்ட தீவிரவாதக்குழுக்களின் எச்சசொச்சங்களாக சில குழுக்கள் இருக்கின்றன. இவற்றில்.... சில தங்களது தீவிர இடதுசாரி இலட்சியங்களுக்காக போராடுவதற்கு அணிதிரட்டலுக்கு முயற்சிக்கின்றன. விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய முகவர்களுடன் இக்குழுக்கள் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பதாகவும் தகவல் இருக்கிறது. மாணவர்களை தீவிர அரசியல் செயற்பாடுகளுக்கு ஊக்கப்படுத்தி வீதிகளில் ஆர்ப்பாட்டங்களில் இறங்கச் செய்வது உட்பட பல செயற்பாடுகளை இக்குழுக்கள் முன்னெடுக்கின்றன' என்று கோதாபய கூறுகிறார்.

இதன் உண்மையான இலக்கு ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி)யும் தென்னிலங்கை எதிரணியுமாகவே இருக்கும்.

அடுத்த தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு ராஜபக்ஷாக்கள் அரசியல், தொழிற்சங்க மற்றும் மாணவர் இயக்க செயற்பாட்டாளர்களை இலக்குவைத்து அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிடக்கூடும். மிகவும் துடிப்பாகச் செயற்படுகின்ற ஐ.தே.க. உறுப்பினர்கள் கூட இதனால் பாதிக்கப்படக்கூடும். ராஜபக்ஷாக்களுக்கு ஆதரவான எதிரணி மாத்திரமே செயற்பட அனுமதிக்கப்படும்.

## இனப்பிளவும் இனவன்செயலும் அதிகரிப்ப

'போர்க் காலகட்டத்தின் போது விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதப் பயங்கரவாதத்தால் சிங்களவர்களும் தமிழர்களும் மாத்திரமல்ல, முஸ்லிம்களும் கூட பாதிக்கப்பட்டார்கள். அந்தச் சூழலில் முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஏற்பாடுகளைச் செய்தார்கள். விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகு, இந்த முஸ்லிம் குழுக்களில் சில, சொந்தப்பாதுகாப்புக்கு அப்பாற்பட்ட வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பித்திருக்கின்றன. இக்குழுக்கள் உலகளாவிய இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கும் கூட முயற்சித்திருக்கின்றன. 'இலங்கை முஸ்லிம்கள் தங்களை உலகளாவிய முஸ்லிம் சமூகத்துடன் அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சில வெளிநாட்டுக் குழுக்கள் உற்சாகப்படுத்துவதாகவும் தகவல்கள் உள்ளன. அமெரிக்காவில் 2001 செப்டெம்பர் 11 நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பின்னரான காலகட்டத்தில் இத்தகைய போக்கு பரவலாகக் காணப்படுகிறது. உலகளாவிய முஸ்லிம் சமூகத்தை மதத் தீவிரவாதத்தை நோக்கி கவர்ந்திழுப்பதில் குறிப்பிட்ட சில குழுக்கள் ஈடுபட்டுவருவது வெளிப்படையானது' என்றும் கோதாபய கட்டுரையில் எழுதியிருக்கிறார்.

## இதன் உண்மையான இலக்கு முஸ்லிம்களே

பொருளாதார ரீதியில் பெரும் கஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


டத்துக்குள்ளாகியிருக்கும் சிங்களப் பெரும்பான்மையினத்தவர்களை பேசாமல் அடங்கிக் கிடக்கவைப்பதற்காக முஸ்லிம்களுக்கு விரோதமான வெறித்தனமான உணர்வு பயன்படுத்தப்படும். தற்போது ஈராக்கில் பலபகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். இஸ்லாமிய ஜிஹாதி இயக்கத்தின் செல்வாக்கினால் இலங்கையிலும் அச்சுறுத்தல் ஏற்படக்கூடுமென்று போலித்தனமாகப் பிரசாரம் செய்து ராஜபக்ஷ தானாகத் தெரிந்தெடுத்த 'தாயகமான' அமெரிக்காவுக்கும் தங்களுக்கும் இடையில் ஒரு 'இஸ்லாமிய எதிர்ப்புப்' பாலத்தை கட்டியெழுப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படக் கூடும்.

### சமூக ஊடகங்களின் அச்சுறுத்தல்

'ஃபேஸ்புக்,ருவிட்டர் மற்றும் இணையத்தளங்கள் போன்ற சமூக ஊடகங்கள் உட்பட புதிய தகவல் தொழில்நுட்பத்தின் விளைவாக தோன்றிய ஊடகங்களின் அச்சுறுத்தல் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. இணையத்தளங்களில் குறிப்பிட்ட சில கோட்பாடுகளைப் பிரசாரப்படுத்துவதன் மூலமாக அணிதிரட்டல்களை மேற்கொண்டு தங்களது நலன்களை மேம்படுத்துவதற்கு சில பிரிவினர் சமூக ஊடகங்களை பயன்படுத்தக்கூடிய ஆபத்து இருக்கிறது. இந்தக் காரியங்களை சாத்தியமானளவுக்கு குறைந்தபட்ச ஆள்நிலை பிரசன்னத்துடன் மேற்கொள்ள முடியுமென்பதால் இந்த அச்சுறுத்தலை பாரம்பரியமான தேசியபாதுகாப்பு கருவிகளையோ நடைமுறைகளையோ பயன்படுத்தி கட்டுப்படுத்த முடியாது' என்றும் பாதுகாப்புச் செயலாளர் கூறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதன் உண்மையான இலக்கு ராஜபக்ஷாக்களை விமர்சிப்பவர்களும் எஞ்சியிருக்கக்கூடிய எதிரணியுமேயாகும்.

'முடிவாக, தாக்குதலை முன்னெடுக்கின்ற வகையிலான இராணுவ நடவடிக்கைகளின் உடனடித்தேவை இலங்கைக்கு இன்று இல்லையென்ற போதிலும், பாதுகாப்பு ஏற்பாடுகள் தளர்த்தப்படாமல் இருக்கவேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இலங்கை பூராகவும் கேந்திர முக்கியத்துவ இடங்களில் இராணுவம் நிலைகொண்டிருக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். குறிப்பாக வடக்கு, கிழக்கில்...' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

எத்தகைய கெடுதிகள் எல்லாம் வந்து சேரப் போகின்றன என்பதை விளங்கிக் கொள்வது பெரிய சிரமமான காரியம் அல்ல. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு ராஜபக்ஷாக்கள் தங்களது குடும்ப ஆட்சிக்கு ஏற்படக்கூடிய சகல அச்சுறுத்தல்களையும் இல்லாமற் செய்வதற்கும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்ற பெயரில் தங்கள் வம்சத்தைச் சேர்ந்தவர்களின் ஆட்சியே தொடர்ந்து நிலவக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தவும் உச்சபட்ச கொடூரத்தனத்துடன் செயலில் இறங்குவார்கள். சந்தேகமும்சகிப்புத்தன்மையின்மையும் வெறுப்புணர்வும் தேசப்பற்று என்று போற்றப்பட்டு, இலங்கை பிணியுற்ற ஒரு சமூகமாக அரசியல் மற்றும் இன -மத மட்டங்களில் தனக்கு எதிராக தானே போரிடுகிற ஒரு சமூகமாக மாறப்போகிறது. ■



உள்நாட்டு அரசியல்



தரிஷா பஸ்ரியன்ஸ்

# பொது எதிரணியை அமைக்கும் திட்டத்தை சீர்குலைக்கக்கூடிய முயற்சிகள்

முரண்பட்டுக் கொண்டிருக்கும் ரணில் பிரிவினருக்கும் சஜித் பிரிவினருக்கும் இடையே ஏற்படக்கூடிய இணக்கப்பாடு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஐக்கியம் தோன்றுவதற்கான நம்பிக்கையைக் கொடுக்கக் கூடும். ஆனால், 2015 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு பொதுவான எதிரணியொன்று அமைக்கப்படும் என்று அரும்புகின்ற நம்பிக்கைகளை அது தகர்த்துவிடுமா?

கொழும்பு கிறீன் பாத்தில் அமைந்துள்ள புதிய நகரமண்டபத்தில் கடந்த ஜூலை 24 ஆம் திகதி வியக்கத்தக்க அரசியல் காட்சிகளைக் காணக்கூடியதாக இருந்தது. அரசியல் உணர்வு மிகுந்ததாக இருந்த அந்த நிகழ்வில் அரசியல்வாதிகள் அல்ல, கல்விமான்களும் தொழில்சார் நிபுணர்களும் சிவில் சமூகப் பிரமுகர்களும் தான் உரையாற்றினார்கள். அரசியலமைப்பு, தேசத்தைக் கட்டியெழுப்புதல், தலைவிரித்தாடுகின்ற அதிகார துஷ்பிரயோகம் மற்றும் தற்போதைய ஆட்சி முறையில் காணக்கூடியதாக இருக்கும் சீரழிவுத் தனங்களைப்பற்றியே அவர்கள் பேசினார்கள். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு வழிவகுக்கக்கூடிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்காக குரல் கொடுத்துவருகின்ற ஒரு இயக்கத்துக்கு தலைமை தாங்குகின்ற புலமை வாய்ந்த பௌத்த மதகுரு மாதுளுவாவே சோபித தேரோவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த அமைவடக்கமான நிகழ்வில் இரு முக்கிய அம்சங்களை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. முதலாவது அம்சம், சமூக நீதிக்கான தேசிய இயக்கமும் அதனுடன் இணைந்து செயற்படுகின்ற சட்டவல்லுநர்களும் அரசியலமைப்பு நிபுணர்களும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான உருப்படியான திட்டமொன்றை தாங்கள் வகுத்திருப்பதாக அறிவித்தார்கள். ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது தொடர்பான வாதங்கள் பல வருடங்களாக நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது. ஆனால் அதில் பல தடவைகள் தோல்வியே ஏற்பட்டது. என்றாலும் சோபித தேரோவின் நிபுணர்கள் முதற்தடவையாக அந்த வாதத்தை கோட்பாட்டு நிலையில் இருந்து நகர்த்துவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள். காலக்கெடுக்களை நிர்ணயித்திருக்கிறார்கள். அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு ஆறு மாதங்களில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான நம்பகத் தன்மையான செயற்திட்டமொன்றை வரைந்திருக்கிறார்கள்.

ஆனால், புதியநகர மண்டபத்தில் அந்த நிகழ்வைப் பார்க்க வந்த எதிரணிக் கட்சிகளின் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள் பட்டாளமே சகலரினதும் கவனத்தையும் பெரிதும் ஈர்த்தது. மறுநாள் காலை பத்திரிகைகளில் அந்தத் தலைவர்கள் அருகருகாக அமர்ந்திருந்த படங்களை நாட்டு மக்கள் பார்த்தார்கள். அந்தத் தலைவர்கள் பட்டாளத்தில் ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா குமாரதுங்க, சரத்பொன்சேகா, ஆர். சம்பந்தன், கருஜெயசூரிய மற்றும் ஜே.வி.பி. யின் சுனில் ஹந்து நெத்தி மாத்திரமல்ல, பதவியில் இருந்து அகற்றப்பட்ட பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்காவும் கூட இருந்தார். அவரை வழமையாக அந்தமாதிரியான பொதுநிகழ்வுகளில் காண்பது அரிது. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ஜெயசூரியவும் வந்திருந்தார். ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அரசாங்கத் தரப்பினரால் கொண்டுவரப்பட்ட குற்றப் பிரேரணைக்கு எதிராக கடுமையான நிலைப்பாடுகளை எடுத்த காரணத்தினால், நாட்டின் சட்டத்துறைச் சமூகத்திற்கு தலைமைதாங்கும் அந்தஸ்துக்கு அவரால் வரக்கூடியதாக இருந்தது.

எதிரணி இயக்கத்தில் ஷிராணி பண்டாரநாயக்கவும் உபுல் ஜெயசூரியவும் முக்கியமான சின்னங்கள். ஷிராணி ஆட்சியாளர்களினால் தவறாகப் பயன்படுத்தப்பட்டு பிறகு பழி கூறப்பட்டவர். ஜெயசூரிய நீதித்துறையின் சுதந்திரத்தின் மதிப்பை மீள நிலைநாட்டுவதற்கும் சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பதற்குமான போராட்டத்தில் ஒரு உறுதியான போராளியாக மாறியிருக்கிறார்.

அன்றைய புதிய நகர மண்டபக் காட்சி பல வட்டாரங்களில் சஞ்சலத்தை ஏற்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை. இலங்கை அரசியலைப் பொறுத்த வரை, ஒரே எதிரிக்கு எதிராகப் போராடுவதென்றாலும் அரசியல் சக்திகளிடையே ஐக்கியத்தைக் காண்பது அரிதாகும். அதனால், எதிரணித் தலைவர்கள் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த அந்தக்காட்சி ராஜபக்ஷ நிருவாகத்தின் மீதும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சி மீதும் ஒரு இனம் புரியாத தாக்கத்தை ஏற்படுத்தியது.

அடுத்தடுத்து நடைபெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் உள்ளூராட்சித் தேர்தல்களும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அதன் செல்வாக்கை நன்கு வலிதாக்கிக் கொண்டுள்ளது என்பதை வெளிக்காட்டின என்று தான் கூற வேண்டும். மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் கடந்த 9 வருடங்களில் அரசாங்கம் அதன் தேர்தல் வெற்றிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

விடுதலைப் புலிகளுடனான போரில் கண்ட வெற்றி, எதிர்க்கட்சி அரசியல்வாதிகளை வென்றெடுத்தல், சகல எதிரணிக்கட்சிகளுக்குள்ளும் உட்பூசல்களை வளர்த்துவிடுதல் மற்றும் கொடுமையான சட்டங்களை இயற்றுதல் போன்ற செயற்பாடு



**தேர்தல்களில் தங்களை தோற்கடிக்க முடியாது என்ற தோற்றப்பாட்டை பேணிப் பாதுகாத்துக்கொள்வதற்காக அரசாங்கத் தரப்பினர் ஊவா மாகாண சபைத் தேர்தலில் பெருமளவு வாக்குகள் வித்தியாசத்திலான வெற்றியொன்றை பெற்றுக் காட்ட வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கிறார்கள்.**

களின் மூலமாக அது சாத்தியமானது.

என்றாலும் கூட, ஜனாதிபதித் தேர்தல் முற்றிலும் வித்தியாசமானது என்பதையும் மாகாணசபைத் தேர்தல்களில் கண்டிருக்கும் வெற்றிகள் பிரதானமான தேசியத் தேர்தல்களிலும் நேரடியான தீர்க்கமான வெற்றியாகப் பிரதிபலிக்காமல் போகலாம் என்பதையும் ஜனாதிபதி ராஜபக்ஷவும் அவரது முக்கிய ஆலோசகர்களும் கூட அறிவார்கள்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெறுகின்ற சாத்தியத்தைக் குறைவாகக் கொண்ட ஒருவராகவே அவநம்பிக்கையுடன் போட்டியிட்டார். தேசிய ரீதியில் 50.29 சதவீதமான வாக்குகளைப் பெற்றே அவர் ஜனாதிபதிப் பதவியை சொற்ப பெரும்பான்மை வாக்குகளுடன் கைப்பற்றக் கூடியதாக இருந்தது. விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அடுத்தடுத்து மூன்றாவது தடவையாகவும் இலங்கையின் அரசியல் விதியின் போக்கை மாற்றியமைத்தார். வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் தேர்தலைப் பகிஷ்கரிக்க மக்களை பிரபாகரன் நிர்ப்பந்தித்த கார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்க வேண்டிய சிறுபான்மையின மக்களின் வாக்குகள் கிடைக்காமல் போயிற்று, அந்தப்பகுதிகளின் மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் விக்கிரமசிங்கவினால் அத்தேர்தலில் வெற்றிபெறக் கூடியதாக இருந்திருக்கும். ஒரு அந்தரங்கமான தேர்தல் உடன்பாடு 2005ஆம் ஆண்டில் விக்கிரமசிங்கவின் வாய்ப்புகளை அபகரித்துவிட்டது. ஆனால் அதே உடன்பாடு பிரபாகரன் மீதும் திரும்பிப்பாய்ந்தது. ராஜபக்ஷ நிருவாகம் போரை முழுமூச்சுடன் முன்னெடுத்து விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்ததுடன், 2009 மேயில் அவ்வியக்கத்தின் உயர்மட்டத் தலைவர்கள் சகலரையும் கொன்றொழித்தது. 2010 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா எதி ரணியின் பொதுவேட்பாளராக களமிறக்கப்பட்டார். அப்போது ஜனாதிபதி ராஜபக்ஷ அவரின் மக்கள் செல்வாக்கின் உச்சத்தில் இருந்தார். என்றாலும் கூட, அவரால் தேசிய ரீதியில் 57.8 சதவீதமான வாக்குகளை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்தது.

போரின் முடிவுக்குப் பின்னரான 6ஆவது வருடத்தை 2015 குறித்து நிற்கப்போகிறது. இடைப்பட்ட வருடங்களில் அரசியல் செல்வாக்கையும் மக்கள் ஆதரவையும் அரசாங்கத்தினால் நிலை நிறுத்தி வைத்திருக்க முடிந்தாலும் கூட, ஆட்சியாளர்களு க்கு நெருக்கடிகள் நிறைந்தனவாகவே இருந்தன. சமாதானத்தின் விளைவாகக் கிடைக்க வேண்டிய பொருளாதாரப் பலாபலன்கள் பெரும்பான்மையான இலங்கையருக்கு கிடைக்கவில்லை. அதே நிலைமையே தொடருகிறது. ஊழல் தலைவிரித்தாடுகிறது. குடும்ப ஆட்சி மேலும் மேலும் வலுவடைந்துகொண்டு போகிறது. பதவியில் இருக்கும் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு வெறுப்பும் சலிப்பும் தோன்ற ஆரம்பித்து விட்டது. சிறுபான்மையினத்தவர்கள் மீதான ஒடுக்குமுறையும் அரசியல் எதிராளிகளுக்கு எதிரான கொடுமைகளும் பிரதான போக்கு ஊடகங்கள் உட்பட சிவில் சமூகத்தின் மீதான அடக்குமுறையும் ஜனநாயகச் சுதந்திரங்களை மீள நிலைநிறுத்துவதற்காகப் போராடும் சக்திகள் ஐக்கியப்படுகின்ற சூழ்நிலைக்கு வழிவகுத்துக்கொண்டிருக்கின்றன என்றாலும் இச்சக்திகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு தங்களை முனைப்புறுத்திச் செயற்படத் தொடங்கவில்லை.

### கீழ்நோக்கிய போக்கு

இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற மேல் மாகாணசபை மற்றும் தென்மாகாண சபைக்கான தேர்தல்களின் முடிவுகள் அரசாங்கத்தின் மக்கள் ஆதரவு கீழ்நோக்கிய திசையில் செல்லத் தொடங்கிவிட்டது என்பதைக்காட்டியது. அத்தேர்தல்கள் நடைபெற்ற வேளையிலேயே ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. அதைக் காட்டி இலங்கைக்கு எதிராக 'சர்வதேச சதிமுயற்சிகள்' மேற்கொள்ளப்படுவதாக ஆளும் கட்சியினர் பிரசாரங்களைத் தீவிரப்படுத்திய போதிலும், செல்வாக்குச்சரிவை தடுக்க முடியாமற் போய்விட்டது.

**ஊவா தேர்தலே ஜனாதிபதித்தேர்தலுக்கு முன்னராக நடைபெறப்போகின்ற கடைசி சிறிய தேர்தல் எதிரணிக் கட்சிகளைப் பொறுத்தவரையிலும் கூட பந்தயங்கள் கடுமையானவை. ஏனென்றால் தேசிய தேர்தலுக்கு முன்னரான தங்களின் ஆதரவாளர்கள் மத்தியில் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் அக்கட்சிகளுக்கு இருக்கிறது**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அனுகூலமாக அமையக்கூடியதாக் மொனராகலை மாவட்டத்தின் ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரித்ததன் மூலம் 'பந்தயத்தின் முடிவெல்லையை' நகர்த்துவதில் அரசாங்கம் வெளிக்காட்டிய உறுதியை ஊவா மாகாணத்தில் அதன் பாதிக்கப்படக்கூடிய தன்மையின் ஒரு குறிகாட்டியாகக் கருதலாம். ஊவா மாகாண சபைத் தேர்தலே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நடைபெறப்போகின்ற கடைசி சிறிய தேர்தலாகும். இத்தேர்தலில் எதிரணிக்கட்சிகளைப் பொறுத்தவரையிலும் கூட, அவற்றுக்கான பந்தயங்கள் கடுமையானவையாகும். ஏனென்றால் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக தங்களின் ஆதரவாளர்கள் மத்தியில் உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் அக்கட்சிகளுக்கு இருக்கிறது. அதே வேளை, தேர்தல்களில் தங்களைத் தோற்கடிக்க முடியாது என்ற பிரதிமையை பேணிக்காத்துக் கொள்வதற்காக அரசாங்கத்தரப்பினரும் ஊவாவில் பெருமளவு வாக்குகள் வித்தியாசத்திலான வெற்றியொன்றைப் பெற்றுக்காட்ட வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதும் உண்மையே. வாக்காளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டம் தொடர்பில் அரசாங்கம் காட்டிய அருவருக்கத்தக்க வகையிலான பிரதிபலிப்பு, வெளிநாடுகளின் நிதியுதவியுடன் நாட்டில் இயங்குகின்ற அரசுசாரா நிறுவனங்கள் தொடர்பில் அரசாங்கம் கொண்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறித்தனமான குரோத உணர்வு எல்லாமே முக்கியமானதொரு தேர்தல் சமருக்கு முன்னதாக அரசாங்கத்தரப்பினர் மத்தியில் அதிகரித்திருக்கும் பதற்ற உணர்வை உணர்த்துகின்றன. இவையெல்லாமே வெற்றியில் உச்ச நம்பிக்கை கொண்டிருக்கின்ற ஒரு அரசாங்கத்தின் பிரதிபலிப்புகளாக இருக்கக்கூடியவையல்ல.

### பிரச்சினைக்குரிய இடங்கள்

மக்கள் செல்வாக்கு குறித்து அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய ஆய்வுகள் பல பிராந்தியங்களில் அரசாங்கத்துக்கு பிரச்சினையாக உள்ள இடங்களை அடையாளம் காட்டியிருக்கின்றன. போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் சிறுபான்மையினத்தவர்களின் விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் கடைப்பிடித்துவருகின்ற கொள்கைகள் காரணமாக, இலங்கை பூராகவும் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் வாக்குகளை மொத்தமாக அது இழக்கப்போகின்றது என்பது உறுதியாகத் தெரிகிறது. எத்தனை வீதிகளு க்கு கார்பெட் போட்டாலும், நடைபாதைகளை அழகுபடுத்தினாலும், பூங்காக்களை அமைத்தாலும் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட ஆரம்பித்துவிட்டால் அதைத் தடுத்து நிறுத்த முடியாது.எதிரணிக் கட்சிகள் ஒன்றுபட்டு செயற்படக்கூடிய சாத்தியங்கள் தோன்றுவதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிராகக் கிளம்புவதன் மூலமாக அரசாங்கத்தின் அதிகாரத்தின் மையப்பகுதியை இலக்கு வைக்கின்ற சூழ்நிலை தோன்றுவதும் ராஜபக்ஷ நிருவாகத்தைப் பொறுத்தவரை ஆழமான மன உலைவைக் கொடுக்கின்ற விடயங்களாகும்.

அதிருப்தியுற்றிருக்கும் சமூக- அரசியல் பிரிவுகளை ஒன்றிணைத்து ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிராக அமைக்கப்படக்கூடிய பரந்த ஒரு எதிரணிக் கூட்டமைப்பு (முன்னைய ஜனாதிபதிகள் சகலரையும் விட நிறைவேற்று அதிகாரப் பதவியின் கருவிகள் சகலதையும் மிகவும் சாதுரியமாகத் தன் வசப்படுத்திக் கையாளுவதற்கு கற்றுக்கொண்டி(ருக்கும்) ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதற்கான ஆற்றலைக் கொண்டிருக்கும். அரசாங்கத்தின் மதிப்பீட்டின்படி, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்து கொண்டு வரப்படக்கூடிய ஒரு பிரதான வேட்பாளருக்கு எதிராக தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ மீண்டும் தெரிவாவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கின்றன. தலைவர் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதையே அரசாங்கம் பெரிதும் விரும்பும். ஏனென்றால் சமாதான முயற்சிகளில் அக்கறைகாட்டிய அவர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசாங்கத்தினால் துரோகி என்று வர்ணிக்கப்பட்டு வந்தவர். அத்துடன்



**அரசாங்கத்தின் மதிப்பீட்டின் படி ஐக்கிய தேசியக்கட்சிக்குள் இருந்து கொண்டு வரப்படக்கூடிய பிரதான வேட்பாளருக்கு எதிரான போட்டியில் ஜனாதிபதி ராஜபக்ஷ மீண்டும் தெரிவாவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதையே அரசாங்கம் விரும்பும்**

பெரும்பான்மைச் சிங்களச் சமூகத்தின் மத்தியில் அவரின் செல்வாக்கு தற்போதுள்ளதைப் போன்று முன்னர் ஒரு போதுமே பலவீனமாக இருந்ததில்லை.

2015 ஆம் ஆண்டு நடத்தப்படக்கூடிய ஒரு தேர்தலில் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக எதிரணியின் சார்பில் தனியொரு வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்படுகின்ற சோபித தேரோவின் (ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான) இயக்கத்தின் விளைவாக அரசியல் அரங்கில் ஏற்பட்டிருக்கும் உற்சாகம் விக்கிரமசிங்க முகாமில்கூட, சிலவகை அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பொதுவேட்பா ளர் விடயத்தில் ஐ.தே.க.தலைவர் முதலாவது தெரிவாகவோ அல்லது இரண்டாவது தெரிவாகவோ ஒருபோதும் இருக்கப்போவதில்லை. இதற்குக் காரணம் சிங்கள வாக்காளர்களுடனான அவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனமான பிணைப்பு மாத்திரமல்ல, ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதில் தனக்குள்ள கருத்து உறுதிப்பாட்டை அவர் இன்னமும் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்தாமல் இருந்து வருகின்றமையுமாகும். இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் தெளிவான முன்னோடி வேட்பாளராக விளங்கிய போதிலும் விக்கிரமசிங்க தோல்வியைத் தழுவ வேண்டியேற்பட்டது. 1999 தேர்தலின் போது பிரசாரக் கூட்டமொன்றில் ஜனாதிபதி திருமதி குமாரதுங்க மீது தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய அவர்மீது ஏற்பட்ட அனுதாப அலை அவர் மீண்டும் தெரிவாவதை உறுதிப்படுத்தியது. 2005 தேர்தலைப் பொறுத்தவரை தமிழ்ப்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நிர்ப்பந்தத்தின் விளைவாக மேற்கொள்ளப்பட்ட தேர்தல் பகிஷ்கரிப்பு விக்கிரமசிங்கவிடமிருந்து வெற்றியை அபகரித்தது.

விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை ஜனாதிபதிப் பதவி என்பது எப்போதுமே மிக அண்மித்தானதாக இருந்து வந்திருக்கின்ற போதிலும், இதுவரை சாத்தியமற்றதாகவே உள்ளது. ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு கோரிக்கை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தீர்க்கமான ஒரு விவகாரமாக வரப்போகிறது என்பது தெளிவாகத் தெரிந்த பின்னர் மாத்திரமே அவர் அந்தக்கோரிக்கையை முக்கியத்துவப்படுத்தி முன்னெடுக்கப்படுகின்ற இயக்கத்துக்கு ஆதரவளிக்க முன்வந்தார். ஜனாதிபதி ராஜபக்ஷவின் மக்கள் செல்வாக்கு சரிந்து கொண்டு போகும் நிலையில், சிறுபான்மையினத்தவர்களின் வாக்குகள் தனக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற நிலையில் மூன்றாவது தடவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் தனக்கு வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்று நம்புகின்ற ஐ.தே.க.தலைவர் பொதுவேட்பாளராக வேறு ஒருவர் களமிறக்கப்படும்பட்சத்தில் மீண்டும் ஒரு தடவை தனது நம்பிக்கைகள் சிதறடிக்கப்படுமென்று அஞ்சுகிறார்.

2015 தேர்தலில் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிரான பிரதான போட்டியாளராக விக்கிரமசிங்க களமிறக்கப்படக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு வசதிசெய்யக்கூடிய காரியங்களிலேயே அரசாங்கம் தீவிரமாக இறங்கியிருக்கிறது. கடந்த இருமாதங்களாக அரசாங்க அமைச்சர்களும் எம்.பி.க்களும் செய்தியாளர் மகாநாடுகளிலும் அரசியல் விவாதங்களிலும் விக்கிரமசிங்கவை கிரமமாகத் தாக்கிப் பேசுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பட்டலந்த விவகாரத்தையும் அவரின் ஏனைய கடந்த கால முறைகேடுகளையும் நினைவு மீட்டும் அவர்கள் அவரை அரசாங்கத்துக்கு ஒரு நம்பகமான அச்சுறுத்தலாகக் காட்டுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதேவேளை, எதிரணியில் இருந்து பொதுவேட்பாளராக களமிறக்கப்படக்கூடிய வாய்ப்பைக் கொண்டவர்கள் என்று கருதப்படுகின்றவர்கள் பற்றிய செய்திகளை இருட்டடிப்புச் செய்யுமாறு ராஜபக்ஷ நிருவாகம் அதன் செல்வாக்கின் கீழ் உள்ள ஊடகங்களுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

**ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராக எதிரணியின் சார்பில் தனி ஒரு வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்படும் சோபித தேரோவின் இயக்கத்தின் விளைவாக அரசியல் அரங்கில் ஏற்பட்டிருக்கும் உற்சாகம் விக்கிரமசிங்க முகாமில் சில அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது**

அதேவேளை ஐக்கியதேசியக் கட்சிக்குள் ரணில் பிரிவுக்கும் சஜித் பிரிவுக்கும் இடையே மீண்டும் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படுகின்ற திடீர் முயற்சிகள் கவனத்தை ஈர்க்கின்றன. ஐ.தே.க.தலைவர் பதவியையும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் துறந்துவிடுமாறு ஒன்பது மாதங்களுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை வலியுறுத்திய பிரேமதாச மீண்டும் ஒருதடவை தனது பரமவைரியின் கீழ் பிரதித் தலைவராக பணியாற்றுவதற்கான வாய்ப்புக் குறித்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். இத்தகைய திடீர் மாற்றத்தை ஏற்படுத்தியது எது என்பது உடனடியாக தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், கட்சியின் தலைவரைப்பற்றியும் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவைப்பற்றியும் கடந்த 9 மாதங்களில் பிரேமதாச வெளியிட்ட கருத்துகளை மனதிற்கொண்டு நோக்கும் போது பிரேமதாச விளக்கமளிக்க வேண்டிய சில விடயங்கள் இருக்கின்றன.

மிகவும் விசித்திரமான ஒரு திருப்பமா, (பிரேமதாசவினால் கடுமையாக பழித்துரைக்கப்பட்ட) அத்தநாயக்க திடீரென்று பிரேமதாசாவுக்கு ஆதரவாகப் பேசியிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. பிரேமதாசாவை கட்சியின் பிரதித் தலைவராக மீண்டும் நியமிக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

### ரணிலின் முயற்சிக்கு ஆதரவு

ஆனால், முக்கியமாக கடந்த ஒருவருடகாலமாக பிரேமதாச அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. யானைச் சின்னத்தின் கீழ் அதன் சொந்த வேட்பாளரைக் களமிறக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்திருக்கிறார். விக்கிரமசிங்க கட்சியின் தலைவர் பதவியை தனக்கு விட்டுக்கொடுத்தால் கட்சியின் வே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்பாளராக நிற்பதற்குத் தயாராயிருப்பதாக 47 வயதான பிரேமதாச அறிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பிரதித் தலைவராக பிரேமதாச மீண்டும் வந்து விக்கிரமசிங்கவின் கீழ் செயற்படுவதற்குத் தயாராக இருப்பாரேயானால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தலைவரின் முயற்சியை ஆதரிக்கும் முக்கியமான ஆளாக அவர் விளங்குவார். ஏனென்றால் எதிரணிக்கட்சிகளின் கூட்டணியை விடுத்து சுதந்திரமாக தனித்துப் போட்டியிடவேண்டுமென்று வலியுறுத்திவருபவர் அவர். பிரேமதாசாவின் மீள்வருகை அடிமட்டத்தில் ஐ.தே.க.வினர் மத்தியில் உத்வேகத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு மீள் ஐக்கியத்தைக் குறிப்பதாக அமையும். ஊவா மாகாணசபைத் தேர்தலிலும் கட்சிக்கு பெரும் தூண்டுவிசையாக அமையும். ஆனால், அதனால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்த முடியாமல் போகும்.

பிரேமதாசாவும் அவரை ஆதரிப்பவர்களும் இந்தக் கணிப்பீட்டையே செய்துகொண்டிருக்கிறார்கள். அதாவது ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவை எதிர்த்து நின்று விக்கிரமசிங்க நிச்சயமாகக் காணக்கூடிய தோல்வி அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி.யை தலைமைப் பதவிக்கு உந்திவிடும். கட்சிக்குள் தலைமைத்துவத்துக்கு எதிரான கிளர்ச்சியை ஆரம்பித்த நாள் முதலிருந்து பிரேமதாச கண்வைத்திருக்கும் ஒரே பதவி கட்சியின் தலைமைப் பதவியேயாகும். ஆறு வருடங்களுக்குப் பிறகு வரக்கூடிய அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், பெருமளவுக்கு பலவீனமடைந்துவிடக்கூடிய, பெருமளவுக்கு மக்களின் செல்வாக்கை இழந்துவிடக்கூடிய ஜனாதிபதி ராஜபக்ஷவை எதிர்த்து தேர்தலில் களம் இறங்கும் போது தன்னால் சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்த முடியும் என்று பிரேமதாச நினைக்கிறார் போலும். அவரின் 2021 ஆட்டம் இங்கு தான் ஆரம்பிக்கிறது. இந்த நீண்ட ஆட்டத்தில் பல அதிகார நலக்குழுக்களுக்கும் கைப்பொம்மைகளு க்கும் முக்கியமான பந்தயங்கள் இருக்கின்றன. 2015ஆம் ஆண்டில் நடைபெறக்கூடிய தேர்தல் ராஜபக்ஷவுக்கும் விக்கிரமசிங்கவுக்கும் இடையே போட்டியாக அமைய வேண்டுமென்று அரசாங்கம் கொண்டிருக்கும் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது ஐ.தே.க. எம்.பி.க்கள் கிளப்புகின்ற ஒரு கேள்வியை முக்கிய கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திற்குள் இருக்கும் வலிமை பொருந்திய பிரிவினரின் கெடுநோக்குடனான நிகழ்ச்சி நிரலுக்கு வசதியான முறையில் அமைந்துவிடக்கூடிய விளையாட்டில் பிரேமதாச இறங்கியிருக்கிறாரா என்பதே அக்கேள்வியாகும்.

சகலதையும் குழப்பியடித்து தகர்க்கின்ற அரசியல் சஜித் பிரேமதாசவுக்கு கைவந்த கலையாக



பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் தொடர்ந்து ஐ.தே.க.வின் முதலமைச்சர் வேட்பாளராக களம் இறங்கியிருப்பதன் மூலமாக இளம் அரசியல்வாதியாக ஹரின் பெர்னாண்டோ அக்கட்சியின் மூத்த பாராளுமன்ற உறுப்பினர்களை தலை குனிய வைத்திருக்கிறார்.

மாறிவிட்டது. கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் கருஜெயசூரிய தலைமையில் அமை க்கப்பட்ட தலைமைத்துவப் பேரவையின் விளைவாக பெறக் கூடிய எந்தவொரு வெற்றியையும் பிரேமதாச பாழடித்துவிட்டதாக ஐ.தே.க. எம்.பி.க்களும் மிதவாதிகளும் குற்றஞ்சாட்டுகிறார்கள். அற்பத்தனமான காரணங்களைக் கூறி பிரேமதாசா தலைமைத்துவ பேரவையில் இணைந்து கொள்வதற்கு மறுத்தார். தலைமைத்துவத்துக்கான போட்டியில் விக்கிரமசிங்கவுக்கு வெளிப்படையாக சவால் விடுக்க பிரேமதாச ஒருபோதும் இணங்கியதில்லை. கருஜெயசூரியவையே அவர் முன்னுக்குத் தள்ளிவிட்டார். சிரேஷ்ட அரசியல்வாதியான ஜெயசூரிய அதனால் பிரதித் தலைவர் பதவியையும் செயற்குழுவில் தனது ஆசனத்தையும் இழக்கவேண்டியேற்பட்டது. ஒவ்வொரு தேர்தல் போட்டியிலும் அவர் ஓரங்கட்டப்பட்டதையே காணக்கூடியதாக இருந்தது. ராஜபக்ஷாக்களை எதிர்த்துப் போட்டியிட்ட அனைத்துத் தேர்தல்களிலும் ஐ.தே.க. கடுமையான தோல்வியையே சந்திக்க வேண்டியிருந்தது. இத்தேர்தல்களில் பிரேமதாச தீவிரமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசாரப்பணிகளில் பங்கேற்காமல் இருந்ததன் மூலமாக குற்றப்பொறுப்பில் இருந்து தன்னை விலக்கிக் கொள்ள முடிந்தது. தோல்விக்கான பொறுப்பை இவர் ஏற்க வேண்டியிருக்கவில்லை.

இம்மாதம் நடைபெறுகின்ற ஊவாமாகாண சபைத் தேர்தலிலும் பிரேமதாசாவின் மனப்போக்கு மிகவும் வேறுபட்டதாக இருக்கவில்லை. பாராளு மன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து முதலமைச்சர் வேட்பாளராக களத்தில் நிற்பதற்கு முன்வந்ததன் மூலமாக இளம் அரசியல்வாதியான ஹரின் பெர் னாண்டோ சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் களைத் தலைகுனிய வைத்திருக்கிறார்.

தலைமைத்துவப் பேரவையில் அங்கம் வகிப்ப தற்கு மறுத்த நாளில் இருந்து பிரேமதாச மக்களின் மனங்களில் இருந்து அகன்று கொண்டே வந்திருக் கிறார். பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் அவரின் இடத்தை ஜே.வி.பி.யின் தலைவர் அநுரா குமாரதிசாநாயக்க பிடிக்கத் தொடங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது. வேறு முக்கிய எதி ரணி அரசியல்வாதிகளும் ஊடகங்களில் பிரபல் யம் பெறத் தொடங்கினார்கள்.

பொது எதிரணி மேடையொன்று தனது பொருத் தமில்லாத்தன்மையை மேலும் அதிகரிக்கவே செய் யும் என்பதை பிரேமதாச அறிவார். ஐ.தே.க. விற் குள்ளேயே முக்கியமற்றவராக இருக்கும் நிலை யில், எதிரணியின் கூட்டமைப்பில் அவரின் இடம் மேலும் கூடுதலான அளவுக்கு நொய்தானதாகிப் போய்விடும்.

முற்றிலும் விக்கிரமசிங்கவைப் போன்றே சஜித் பிரேமதாசாவும் ஜனாதிபதிப் பதவிக்குரிய கதிரை யில் அமர்வதில் மாத்திரமே ஆர்வத்தைக் காட்டி வந்திருக்கிறார். ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப் பதில் அக்கறையில்லை. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவி னால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட விக்கிரமசி ங்க ஜனாதிபதிப் பதவியை ஒழிப்பது தொடர்பில் ஒருபோதுமே பகிரங்கமாக உறுதிப்பாட்டுடன் கருத்துத் தெரிவித்ததில்லை.

### ஆபத்தான வேட்பாளர்கள்

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான செயன்முறைகளை முன் னெடுப்பதற்காக, நாட் டின் கடைசி நிறைவேற்று அதிகார ஜனாதிபதியா கத் தெரிவு செய்யப்படுவதற்கு எதிரணியின் பொது வேட்பாளராக நிறுத்தப்படுவதற்கு பொருத் தமானவர்களாக விக்கிரமசிங்கவோ அல்லது பிரேமதாசாவோ இல்லை. அதுவிடயத்தில் ஆபத் தான வேட்பாளர்களாகவே தங்களை இருவரும் இறுதியில் நிரூபிப்பர். ரணில்-சஜித் கூட்டு எவ்வா றுதான் பயனுடையதாக இருந்தாலும், ஜனாதிபதி



கட்சிக்குள் தலைமைத்துவத்துக்கு எதிரான கிளர்ச்சியை ஆரம்பித்த நாள் முதலிருந்து சஜித் பிரேமதாச ஒரே பதவி தலைவர் பதவியேயாகும். ஆறு வருடங் களுக்கு பிறகு வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில், பெருமளவுக்கு மக்களின் செல்வாக்கை இழந்துவிடக்கூடிய ஜனாதி பதி ராஜபக்ஷவை எதிர்த்து களமிறங்கும் போது தன்னால் சிறப்பாக செயற்பட்டு வெற்றிப்பெற முடியும் என்று சஜித் நினைக்கிறார் போலும்

ஆட்சிமுறையை ஒழிப்பதென்ற எதிரணியின் பொது இலட்சியத்திலிருந்து கட்சியை நிச்சயமாகத் தூரவிலக்கும். பிரதான எதிர்க்கட்சியிடமிருந்து அர சியல் தலைமை த்துவம் இல்லாவிட்டால் ஜனாதி பதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான இயக்கம் தேர்தலில் எடுபடாமல் போய்விடும் என்பதால், பொது எதிரணி மேடையை உருவாக்குவதற்கான முயற்சிகளுக்கு கிடைக்கின்ற உத்வேகத்தை அக் கட்சிக்கு எதிரணியில் இருந்து நண்பர்கள் யாருமே இருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். எதிர்க்கட்சி யாகவே தொடர்ந்து ஐ.தே.க.தன்னைப் பின்தள்ள வேண்டியிருக்கலாம். தனித்துப் போட்டியிடுவத ற்கு தீர்மானித்தால் பாராளுமன்றத்தில் குறைந் தளவு ஆசனங்களையே கைப்பற்றக்கூடியதாகவும் இருக்கும்.

இறுதியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரு மளவு இழப்புகளே காத்திருக்கும். ஜனாதிபதி ஆட் சிமுறையை முடிவுக்குக் கொண்டுவருவதில் எதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணி கவனத்தைக் குவிக்கின்ற எந்தத் தேர்தலிலும் எவரினதும் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவாக விக்கிரமசிங்க இருக்காமல் போகக்கூடும். இருந்தாலும், வெஸ்ட் மினிஸ்டர் முறையொன்றில் பிரதமர் பதவிக்கான பெறுமதியான தெரிவாக அவர் இருக்கிறார் என்பது பரவலாக ஏற்றுக்கொள் ளப்பட்ட ஒரு விடயமாகும். பாராளுமன்றம் விக்கிரமசிங்கவின் சௌகரியமான வலயம். பதவியில் எந்தவொரு தனிநபரும் நீண்டகாலத்துக்கு ஆழக் கால்பதிப்பதைத் தடுக்கின்றதாகவும் பதவியில் இருந்து துரிதமாக அகற்றப்படுவதை உறுதி செய்யக்கூடியதாகவும் வெஸ்ட்மினிஸ்டர்முறை இருக்கிறது.

ஒரு கொள்கை வகுப்பாளர் என்ற வகையிலும் அரசாங்கத் தலைவர் என்ற வகையிலும் விக்கிரமசிங்க தனது திறமையை, ஆற்றலை ஏற்கனவே நிரூபித்திருக்கிறார். 2001-2004 காலகட்டத்தில் ஆட்சியில் இருந்தபோது தேசியவாதச் சக்திகளின் விருப்பங்களுக்கு இசைவான முறையில் செயற்படுவதற்கு அவர் தவறியதன் விளைவாக அவரின் பதவிக்காலம் குறுக்கப்பட்ட போதிலும்கூட, ஒரு திறமையான அரசாங்கத்தலைவர் என்பதை நிரூபித்தார்.

எனவே, அடுத்த தேர்தலைத் தொடர்ந்து ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதென்பது விக்கிரமசிங்கவின் நலன்களுக்கே உகந்ததாக இருக்கும். அவ்வாறாக அமையும் பட்சத்தில் அடுத்து நடத்தப்படக்கூடிய பொதுத்தேர்தல் பிரசாரத்தில் எதிரணியின் தலைவராக அவரால் மேற்கிளம்பக்கூடியதாக இருக்கும். பெயரளவிலான ஜனாதிபதியின் கீழ் பொதுத் தேர்தல் பிரசாரங்களில் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு இடமில்லாமல், சமத்துவமான களம் தோன்றக்கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

அவ்வாறு இருந்தும்கூட, சில காரணங்களுக்காக ஐ.தே.க.தலைவர் எதிர்க்கட்சிகள் கூட்டமைப்பில் தனக்குரிய வாய்ப்பைப் பெறுவதற்கு விருப்பமில்லாதவராக இருக்கிறார். பதிலாக கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து தன்னை அகற்றுவதற்காக பல வருடங்களாக கிளர்ச்சிசெய்துகொண்டிருக்கும் உறுப்பினர் ஒருவருடன் சேர்ந்து செயற்படுவதில் விருப்பம் காட்டுகிறார்.

கணித மதிப்பீடு ஒன்றை விக்கிரமசிங்க செய்கிறார் போலத் தோன்றுகிறது. எதிரணி வேட்பாளர்கள் பலர் போட்டியிடும் பட்சத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷ '50 சதவீதவாக்குகள் + 1' என்ற மந்திர எல்லையைத் தாண்டுவதைத் தடுக்கக்கூடியதாக இருக்குமென்பது இந்த மதிப்பீட்டின் அடிப்படை போலும். ஆனால் ஜனாதிபதி ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டின் கீழ் அரசு இயந்திரத்தின் பலம் இருக்கும் நிலையில், இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கைக்கு போவதென்பது எதிரணி வேட்பாளருக்கு சாதகமான விளைவைக் கொண்டு வராமல் போகக்கூடும். நேர்மையான போட்டியொன்றுக்கான வாய்ப்பு எதிரணிக்கு உத்தரவாதப் படுத்தப்பட்டால், இந்த ஊகங்கள் சாத்தியப் படக்கூடும்.

**தற்போதைய ஜனாதிபதி தோற்கடிக்கப் பட முடியாதவர் என்ற பகட்டு தோற்றம் ஒன்பது வருடங்களில் முதல் தடவையாக சிறிது ஆட்டம் கண்டிருக்கிறது ஆனால் எதிரணி ஐக்கியப்பட்டு களத்தில் இறங்காத பட்சத்தில் பெரும் நெருக்கடிகளை சந்திக்கவேண்டியிருக்கும்**

பதவியில் இருக்கும் ஜனாதிபதி போட்டியிடும் தேர்தல்கள் நேர்மையான போட்டிகளாக நடைபெறும் என்று நிரூபிக்கப்பட்டது அரிது.

தற்போதைய ஜனாதிபதி தோற்கடிக்கப்பட முடியாதவர் என்ற பகட்டுத் தோற்றம் 9 வருடங்களில் முதற் தடவையாக சிறிது ஆட்டங் கண்டிருக்கிறது. ஆனால், எதிரணி ஐக்கியப்பட்டு களத்தில் இறங்காதபட்சத்தில் பெருமளவு நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

சக்திமிக்க ஆளும் குடும்பத்தை உச்சியில் வைத்து ஒரு மினி இராச்சியமே கட்டியெழுப்பப் பட்டிருக்கும் நிலையில், ராஜபக்ஷ நிருவாகத்தினால் அடுத்த தேர்தலில் தோல்வியென்பதை நினைத்துப்பார்க்க முடி யாது. அது தன் உயிரைக் கொடுத்து போராடத் தயாராகின்றது என்பதை புரிந்துகொள்ளாவிட்டால் அது மிகப் பெரிய தவறாகும். ■

வியாபாரம் சிறக்க... விளம்பரம் தேவை



Advertise with us
சமகாலம்
உங்கள் விளம்பரங்களை பிரசுரித்திட
அழையுங்கள்
Surenth 0715678954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பின்தொடரும் தவறுகள்

## நட்வார் சிங் கிளப்பியிருக்கும் சர்ச்சைகள் தொடர்பில் ஒரு அவதானம்

இந்தியாவின் முன்னைநாள் வெளிவிவகார அமைச்சரும் அரை நூற்றாண்டுகால அரசியல்வாதியுமான நட்வார் சிங் 'ஒரு ஜென்மம் போதாது' (One life is not enough) என்னும் தலைப்பில் தன்னுடைய சுயசரிதையை வெளியிட்டிருக்கின்றார். பல அரசியல் தலைவர்களும் தங்களது வாழ்வின் கடைக்கூறில், இது போன்ற சுயசரிதைகளை எழுதுவதுண்டு. நட்வார் சிங்கின் சுயசரிதையும் அது போன்ற ஒன்றே. ஆனால் சிங் தனது சுயசரிதையில் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் குறிப்பிட்டிருக்கும் தகவல்கள், தமிழர் தரப்பில் சலசலப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. அதே போன்று சிங், சோனியா காந்தி தொடர்பில் குறிப்பிட்டிருக்கும் அபிப்பிராயங்கள் இந்திய அரசியல் வட்டாரங்களில் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு அரசியல்வாதியின் சுயசரிதையில் பல்வேறு விடயங்கள் இருக்கின்ற போதிலும், ஒவ்வொருவரும் தங்களுக்குத் தோதான விடயங்களை முன்னிலைப்படுத்துவது இயல்பே. அந்த வகையில்தான் சிங்கின் 'ஒரு ஜென்மம் போதாது' என்னும் சுயசரிதையில் இந்திய-இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சமாதான ஒப்பந்தம் தொடர்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்கள் தமிழ்ச் சூழலில் அடிக்கோடிடப்படுகிறது.

முதலில் யார் இந்த நட்வார் சிங் - என்றும் சிறிது குறித்துக்கொள்வது அவசியம் ஆகும். 83 வயதான, நட்வார் சிங் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மிக மூத்த தலைவர்களில் ஒருவர். அத்துடன் காந்தி குடும்பத்திற்கு மிகவும் நெருக்கமானவர். 1953 இல் அரசாங்க சேவையில் இணைந்து கொண்ட சிங், இந்திய வெளிவிவகார சேவையில் (Indian Foreign Service) இரண்டு தசாப்தகாலமாகப் பணியாற்றிய ஒருவர். இதன் தொடர்ச்சியாக 1966இல் காங்கிரஸ் அரசாங்கத்தில் இந்திரா காந்தியின் செயலாளராக நியமிக்கப்பட்டார். இதிலிருந்தே சிங்கிற்கும் காந்தி குடும்பத்திற்குமான உறவு ஆரம்பிக்கின்றது. 1984 இல் தனது வெளிவிவகார சேவையிலிருந்து விலகிக்கொள்ளும் சிங், காங்கிரஸ் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு அரசியலில் பிரவேசிக்கின்றார்.

ராஜீவ் காந்தி காலத்தில் வெளியுறவு இணை அமைச்சராகவும் பின்னர் சோனியா காந்தி - மன்மோகன்சிங் காலத்தில் வெளிவிவகார அமைச்சராகவும் இருந்த சிங், 2005இல் ஒரு ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகினார். சிங் மற்றும் அவரது புதல்வனான ஜெகட் சிங் மீது குற்றச்சாட்டு எழுகிறது. எண்ணெய்க்காக உணவு (Oil for Food) என்னும் திட்டத்தின் கீழான ஏற்றுமதி நடவடிக்கையில் சட்டவிரோத வியாபாரத்திற்கு உறுதுணையாக இருந்ததாகவே சிங் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. 'எண்ணெய்க்காக உணவு' என்னும் திட்டமானது ஈராக்கின் மீதான பொருளாதாரத் தடையை கருத்தில் கொண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட விசேட தீர்மானம் ஒன்றிற்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். நட்வார்சிங் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, அமெரிக்க பொருளாதார நிபுணரான போல் வொல்கர் (Paul Adolph Volcker) என்பவரின் தலைமையில் விசாரணை இடம்பெற்றது. போல் வொல்கர் அறிக்கை (Paul Volcker report of 2005) என்றழைக்கப்படும் மேற்படி விசாரணையறிக்கையில், சிங் குடும்பமும் காங்கிரஸ் கட்சியும் மேற்படி ஊழலின் ஊடாக நன்மை பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து சிங், காங்கிரஸ் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். இதன்போது சோனியா காந்தி தனக்கு பக்கபலமாக இருக்கவில்லையென்று அதிருப்தியடைந்த சிங், பின்னர் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறினார். தனது



யதீந்திரா

சுயசரிதையில் தன் மீதான குற்றச்சாட்டுகளை நிராகரித்திருக்கும் சிங், அதனை வொல்கர் சதி (The Volcker Conspiracy) என்று குறிப்பிடுகின்றார். சிங்கின் சுயசரிதையும் அதனைத் தொடர்ந்து அவர் வழங்கிய நேர்காணல்களின் போதும், தெரிவித்திருக்கும் அபிப்பிராயங்கள் தொடர்பில் பதிலளித்திருக்கும் சோனியா காந்தி உண்மைகளைச் சொல்லும் நோக்கில் தானும் ஒரு நூலை எழுதவுள்ளதாகத் தெரிவித்திருக்கின்றார். காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறிய சிங், தற்போது பாரதிய ஜனதாக்கட்சி சார்பான ஒருவராகவே இருக்கின்றார். அவரது மகன் தற்போது, ராஜஸ்தானில் பாரதிய ஜனதா சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிறார். காங்கிரஸ் கட்சி மிகவும் மோசமாகத் தோல்வியடைந்திருக்கின்ற தருணம் பார்த்து, சிங் தன்னுடைய சுயசரிதையை வெளியிட்டிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நட்வார் சிங் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்த காலத்தில் முக்கிய பொறுப்பில் இருந்த ஒருவர். அந்த வகையில், அவரது தகவல்கள் அதிக கவனிப்புப் பெறுவது ஆச்சரியமான ஒன்றல்ல. தனது சுயசரிதையில், இலங்கையின் அனர்த்தம் (The Tragedy of Sri Lanka) என்னும் தலைப்பில் தன்னுடைய அனுபவங்களை அவர் பதிவு செய்திருக்கின்றார். இந்தியா தன்னுடைய நலன்களுக்காக ஈழத்தமிழ் மக்களை நிர்க்கதிக்கு உள்ளாக்கியது என்னும் கோணத்தில் எழுத முற்படுவோருக்கு உற்சாகம் அளிப்பதாக சில தகவல்களை சிங் வெளியிட்டிருக்கின்றார். அவற்றின் சாரம்சம் இதுவே:

ராஜீவ் காந்தி இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் போதிய தெளிவின்றி இருந்தார். இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட வேண்டுமென்பதில் அவர் மிகவும் அவசரப்படுபவராக இருந்தார். அசாம் மற்றும் பஞ்சாப் பிரச்சினைகளை வெற்றிகரமாகக் கையாண்ட அனுபவத்தைக் கொண்டு, இதனையும் மிகவும் இலகுவாகக் கையாண்டுவிடலாம் என்றே அவர் எண்ணினார். ஆனால் அவருக்கு இலங்கை இனப் பிரச்சினையின் வரலாறு குறித்து போதிய புரிதல் இருந்திருக்கவில்லை. அவரைத் தவறான அறிவுரைகள் வழிநடத்தியிருந்தன. இதன் விளைவாகவே அவரின் படுகொலை நிகழ்ந்தது. தனது பதிவில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனான தனது சந்திப்பு குறித்தும் சிங் குறிப்பிட்டிருக்கின்றார். பிரபாகரனுடன் பேசிய அனுபவம் கனமான ஒன்றாக இருக்கிறது. நான் அவரிடம் குறிப்பிட்டேன் - நேரம் வரும்போது நீங்கள் இலங்கை-இந்திய இராணுவத்திற்கு முகம் கொடுக்க நேரிடலாம். ஆனால் பிரபாகரனோ நெஞ்சுறுதிகொண்டவராக இருந்தார். அவரது பதில் மறைமுகமாக அச்சுறுத்துவதாக இருந்தது. 'நான் இறக்க நேரினும் கூட நான் ஒருபோதும் தமிழீழத்தைக்கைவிட மாட்டேன்'. நான் அந்தச் சந்தர்ப்பத்தில் பிரபாகரனது வெறித்தனமான உறுதியை குறைவாக மதிப்பிட்டுவிட்டேன். அதே வேளை சிங், ராஜீவ் காந்தி பிரபாகரனை அப்பாவித்தனமாக (Rajiv naively trusted Prabhakaran) நம்பியதாகவும் குறிப்பிடுகின்றார். பிரபாகரன் குறித்து நட்வார் சிங் கூறியிருக்கும் தகவல்கள் சிலருக்கோ மெல்லுவதற்கு அவல் கிடைத்துவிட்ட உற்சாகத்தைக் கொடுத்திருக்கலாம்.

தமிழர் அரசியலில் ஏதோவொரு வகையில் அவ்வப்போது மெல்லுவதற்கு அவலுக்கு மட்டும் பஞ்சமில்லை. எவராவது அதைக் கொடுத்து விடுகின்றனர். இலங்கையில் இந்தியாவின் தலையீடு மற்றும் அதன்போது இடம்பெற்ற விடயங்களை முன்னிறுத்தி பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில தகவல்கள் சர்ச்சைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன. இதில் குறிப்பாக 2012இல் வெளிவந்த ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கான சதி: சி.பி.ஐ. கோப்புகளிலிருந்து (Conspiracy to Kill Rajiv Gandhi from CBI Files) என்னும் கே. ராகோத்தமனின் (K.Ragothaman) நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில தகவல்கள் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பில் விசாரணைகளை நடத்திய மத்திய புலனாய்வுப் பணியகத்தின் பொறுப்பாளரான ராகோத்தமன், அதுவரை வெளியில் கசியாதவொரு தகவலை வெளியிட்டிருந்தார். அதாவது அப்போது இந்திய உளவுத்துறையான றோவின் (RAW) தலைவராக இருந்த கௌரி சங்கர் பாஜ்பாய், (Gauri Shankar Bajpai) விடுதலைப் புலிகள் அமைப்பின் இரண்டாம் நிலைத் தலைவர்களில் ஒருவரான கிட்டு என்றழைக்கப் படும் சதாசிவம் கிருஸ்ணகுமார் இராணுவ நோக்கில் தங்களது உளவாளியாகத் தொழிற்பட்டதாக (Colonel Kittu Sathasivam Krishnakumar, the LTTE commander, was India's mole in the militant outfit) குறிப்பிட்டதாக தனது நூலில் தெரிவித்திருக்கின்றார். ராகோத்தமன் தனது நூலில் அதனை தான் நம்பவில்லை என்றே குறிப்பிட்டிருக்கின்றார். ராகோத்தமனது நம்பிக்கையல்ல இங்கு விடயம். இங்கு கவனிக்க வேண்டியது மிகவும் சக்திவாய்ந்த பொறுப்பொன்றை வகிக்கும் உளவுத் துறைத் தலைவர் ஏன் அவ்வாறு கூற வேண்டும்? புலிகளின் இரண்டாம் மட்டத் தலைவரான மாத்தையா எனப்படும் மகேந்திரராஜா இந்திய உளவுத்துறையுடன் இணைந்து சதி செய்தார் என்னும் குற்றச்சாட்டின் பேரிலேயே பிரபாகரனால் கொல்லப் பட்டிருந்தார். ஆனால், தற்போது,

**இன்று எல்லாமே முடிந்துவிட்ட பின்னர் ஓய்வு பெற்ற அரசியல்வாதியொருவர் வெளியிடும் தகவல்களின் அடிப்படையில் ராஜீவ் காந்தியின் அவசரத்தாலும் அறியாமையாலும் அனைத்து அனர்த்தங்களும் நேர்ந்தன என்று கூறிவிட்டு ஆறுதலாக நாம் அமர்ந்துவிட முடியாது. இதில் தமிழர் தரப்பின் தவறுகள் என்ன என்பதுதான் முக்கியமானது. ராஜீவ்காந்தி இந்திய நலன்களின் நிலை நின்றுதான் விவகாரங்களை பார்த்திருப்பார் என்று சொல்வதற்கு சுயசரிதைகள் தேவையில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கிட்டு தங்களின் உளவாளியாகப் பணியாற்றியதாக றோவின் தலைவர் குறிப்பிட்டிருக்கின்றார். இன்னும் எத்தனை ஆச்சரியங்கள் நமக்காகக் காத்திருக்கின்றன? இதே போன்று பிறிதொரு நூலும் இவ்வாண்டு வெளிவந்திருக்கிறது. ராஜீவ் காந்தி நிர்வாகத்தில் அவரது உள்துறை ஒருங்கிணைவுச் செயலாளராகவும் (Union home secretary) பின்னர் சோனியாவின் அலுவலகத்திற்கான பொறுப்பாளராகவும் இருந்த ஆர்.டி.பரதன், 'ராஜீவ் மற்றும் சோனியாவுடனான என்னுடைய வருடங்கள்' (My years with Rajiv and Sonia) என்னும் தலைப்பில் தனது அனுபவங்களைத் தொகுத்திருக்கிறார். பரதன் தனது நூலில், காந்தியின் குடும்பம் வசித்து வந்த ஜன்பாத் (Janpath) பகுதியில் அகதிப் போர்வையில் தங்கியிருந்த புலிகளின் உளவாளியொருவரைக் கண்டுபிடித்ததாக குறிப்பிட்டிருக்கின்றார். இதுபற்றி அபிப்பிராயம் தெரிவித்திருக்கும் முன்னைநாள் இராணுவப் புலனாய்வு அதிகாரியான கேணல் ஹரிகரன், இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஏனெனில் புலிகள் இந்தியாவிற்குள் அதிக அளவில் ஊடுருவியிருந்தனர் என்கிறார்.

ராஜீவ் காந்தியின் படுகொலையை விசாரிப்பதற்கென ஜெயின் மற்றும் வெர்மா தலைமையில் இரு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு, விசாரணை அறிக்கைகள் வெளிவந்த பின்னரும் கூட இன்றுவரை காந்தியின் கொலை தொடர்பில் சர்ச்சைகள் தொடர்ந்தவாறே இருக்கின்றன. தொடர்ந்தும் ஒரு கவர்ச்சிமிக்க அரசியல் உரையாடலாகவே ராஜீவ் விவகாரம் தொடர்கிறது. இப்போது நட்வார் சிங்கின் சுயசரிதை, மீண்டும் ராஜீவ் விடயத்தை அரசியல் அரங்கிற்குள் கொண்டு வந்திருக்கிறது. நட்வார்சிங் ஒரு அரசியல்வாதி என்னும் வகையில், ராஜீவ் காந்தியுடனான தனது அரசியல் அனுபவங்களை அவர் பதிவு செய்திருக்கின்றார். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தாங்கள் வகித்த பொறுப்புகளைச் செவ்வனே செய்துமுடித்த பின்னர், அதன் குற்றம் குறைகளை அம்பலப்படுத்துவதில் கவர்ந்திழுக்கும் ஏதுமொன்று இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால் இதுபோன்ற எழுத்துக்கள் சுவாரசியமும் விறுவிறுப்பும் தருவதுண்டு. ஏனெனில் இரகசியங்களை அறிந்து கொள்வதில் எப்போதுமே, மனித மனத்திற்கு ஆர்வம் அதிகம். உண்மையில் இதுபோன்ற தங்களின் அரசியல் அனுபவங்களை எழுத்தாக்குபவர்கள், ஒரு வரலாற்றுக் காலகட்டத்தின் தவறுகளுக்கு தங்களையும் பொறுப்பாளர்களாக்கும் துணிவுகொண்டவர்களாக இருக்க வேண்டும். மாறாக மற்றவர்களை மட்டுமே குற்றம்சாட்டுவதாக இருக்கக்கூடாது. சிங் எழுதியிருப்பது போன்று பலரும் தங்களின் பதவி ஓய்வுக்குப் பின்னர் அல்லது பதவியிலிருந்து விலகிய பின்னர், தங்களுக்குத் தெரிந்த சிலவற்றைச் சொல்வதுண்டு. அவை பல சர்ச்சைகளை எழுப்புவதுமுண்டு இப்போது சிங்கின் சுயசரிதை எழுப்பியிருப்பது போன்று.

சிங் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் தொடர்பில் வெளியிட்டிருக்கும் தகவல்களை தமிழ்நிலை நோக்கில் எவ்வாறு பார்க்கலாமென்னும் கேள்விக்கு விடை காண்போம். நட்வார் சிங்கின் தகவல்களின்படி ராஜீவ் காந்தியின் தவறான அணுகுமுறைகளால்தான், ஈழத் தமிழர் நிர்க்கதிக்கு ஆளாக நேர்ந்தது என்னும் முடிவுக்கே ஒருவர் வர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனால் விடயங்களை சற்று பின்னோக்கி ஆராய்ந்தால் வேறு ஒரு படமே நமக்கு கிடைக்கும். உண்மையில் இந்தியாவின் தலையீட்டிற்கான அடித்தளமானது, ராஜீவ் காந்தியின் தாயாரான இந்திரா காந்தியால் போடப்பட்ட ஒன்றாகும். இந்திரா காந்தி கொல்லப்பட்ட பின்னர்தான் ராஜீவ் அரங்கிற்குள் வருகிறார். எனவே ராஜீவ் காந்திக்கு இலங்கை இனப்பிரச்சினை வரலாறு தொடர்பில் போதிய புரிதல் இருக்கவில்லையென்று சிங் குறிப்பிட்டிருப்பதில், ஒரு தர்க்க நியாயம் இருப்பதாகக் கொள்ள முடியாது, என்பதே எனது அபிப்பிராயம்.

ஏனென்றால் இது ஏலவே தொடக்கி வைக்கப்பட்ட ஒன்று. அதனை வெற்றிகரமாக முடித்து வைப்பதொன்றே தன்னுடைய கடமையென ராஜீவ் நினைத்திருக்கலாம். ஈழ ஆயுதக் குழுக்களுக்குப் பயிற்சியளிக்கும் தீர்மானம் தொடக்கம், ஆயுதங்கள் வழங்கப்படுவது வரையில், அனைத்துமே இந்திரா காந்தி காலத்தில் எடுக்கப்பட்டவைகளாகும். ராஜீவ் காந்தி இலங்கை விவகாரத்திற்கு மத்தியஸ்தம் வகிப்பதன் மூலம், பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரவே முயற்சித்தார். அதன் முதல் கட்டமாக (1985) தமிழ் ஆயுத அமைப்புகளுக்கு இந்தியா வழங்கிவந்த பயிற்சிகள் மற்றும் உதவிகளை உடனடியாக நிறுத்துகின்றார். இங்கு நட்வார் சிங் ராஜீவ் காந்தி பிரச்சினையை தீர்த்து விட வேண்டுமென்று அவசரப்பட்டதாகக் குறிப்பிடுவது சரியாக இருக்கலாம். இலங்கையில் இராணுவப் பதற்றம் தொடருமானால் அந்நிய இராணுவத் தலையீடுகள் இலங்கைக்குள் அதிகரிக்கலாம் என்று ராஜீவ் சார்ந்தவர்கள் கணித்திருக்கலாம். நான் இவ்வாறு கூறுவதற்கு பிறிதொரு காரணம் உண்டு - இந்தக் காலத்தில் இலங்கை இராணுவத்திற்கு இஸ்ரேலிய உளவுப் பிரிவு மொசாட் பயிற்சிகளை வழங்குவதான செய்திகள் வெளியாகியிருந்தன. இந்திரா காந்தி கொல்லப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் அவர் இந்திய நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையொன்றில் இது பற்றி குறிப்பிட்டிருந்தார்.

இது சரியான தகவல்தான் என்பது பின்னர் உறுதியானது. ஆனால் இதன் மறுபக்கம் என்னவென்றால் மொசாட் இலங்கை இராணுவத்திற்கு மட்டும் பயிற்சியளித்திருக்கவில்லை. மாறாக தமிழ் ஆயுதக்குழுக்களுக்கும் பயிற்சியளித்திருக்கிறது. இது பற்றி மொசாட்டின் முன்னைநாள் உத்தியோகத்தரான விக்டர் ஒஸ்ரோவ்ஸ்கி (Victor John Ostrovsky) எழுதியிருக்கும் மோசடியின் ஊடாக (By Way of Deception) என்னும் நூலில் இதனை பதிவு செய்திருக்கிறார். அவர் தனது நூலில், பொதுவாக தமிழ்ப் புலிகள் (Commonly known as Tamil Tiger) என்று அழைக்கப்படும் இலங்கைத் தமிழ் ஆயுதக் குழுவினர் என்றே குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பே அப்போது மொசாட்டிடம் பயிற்சி பெற்றதாகப் பரவலாக நம்பப்படுகிறது. அதேவேளை இந்தக் காலத்தில் பிரபாகரன் தன்னுடைய உறுப்பினர்களை பலஸ் தீனம், லிபியா, சிரியா ஆகிய இடங்களுக்கெல்லாம் பயிற்சிக்காக அனுப்பியிருந்தார். இதனைக் கருத்தில் கொண்டே, ஒரு தீர்வுக்கு பிரபாகரனை சம்மதிக்க வைக்கும் பட்சத்தில், நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படலாமென்று ராஜீவ் அவசரப்பட்டிருக்கலாம்.

பிரச்சினைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஒரு இணக்கத்தை ஏற்படுத்துவதென்று ராஜீவ் முடிவெடுத்ததும், அன்றைய சூழலில் பலமாக இருந்த பிரபாகரனைச் சம்மதிக்க வைக்கவேண்டும் என்னும் முயற்சியில் அவர் இறங்கினார். அப்போது இந்தியத் தூதுவராக இருந்தவரும், இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்திற்காக முக்கியமாகப் பங்காற்றியவருமான ஜே.என்.டிக்ஷித் தனது கொழும்புப் பணிகள் (Assignment Colombo) என்னும் நூலில், இது பற்றி விபரித்திருக்கின்றார். முதலில் ஒப்பந்தம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் வைத்து பிரபாகரனுக்கு விளக்கப்பட்டிருக்கிறது. அப்போது இந்தியத் தூதரகத்தில் முதல் நிலை அரசியல் செயலராகப் பணியாற்றிக்கொண்டிருந்த ஹர்திப் சிங் பூரியின் ஊடாகவே ஒப்பந்தத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் பிரபாகரனுக்கு எடுத்து ரைக்கப்பட்டது. டிக்ஷித்தின் தகவல்க ளின்படி இரண்டு முன்நிபந்தனைகளு டன் பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதாகவும், அது குறித்து ராஜீவ் காந்தியுடன் பேசுவதற்கு இணங்கியதாகவும் மேற்படி நூலில் பதிவாகியிருக்கிறது. அந்த இரண்டு நிபந்தனைகள் இவைதான்: வடம ராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்டி ருக்கின்ற அனைத்து இராணுவ

**தமிழர் தரப்பு என்னதான் பேசினாலும் இன்றும் தமிழர் அரசியல் புதுடில்லியை சுற்றிதானே வட்டமிடுகிறது. இந்தியாவை தவிர்த்து தமிழர் தரப்பால் அதிக தூரம் ஓட முடியாது. தற்போதைய சூழ்நிலையில் இந்தியா புதிதாக எந்தவொரு அழுத்தத் தையும் கொழும்பின் மீது பிரயோகிக்கக் கூடிய சாத்தியமில்லை.**

முகாம்களும் மூடப்பட வேண்டும், அத்துடன் இராணுவம் தங்களது முன் னைய நிலைகளுக்குச் செல்ல வேண் டும். இரண்டு, விடுதலைப்புலிகளை அங்கீகரிக்கும் வகையில் தன்னை இந்தியக் கடற்படை விமானத்தில் சென்னை மற்றும் டில்லிக்கு அழைத் துச்செல்ல வேண்டும். இதனைத் தொடர்ந்து டில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்ட பிரபாகரன் அசோக்கா ஹோட்டலில் தங்கவைக்கப்பட்டு, ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் வரிக்கு வரியாக விளக்கிச் சொல்லப்பட்ட தாக டிக்ஷித் குறிப்பிடுகின்றார். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில் திடீ ரென்று முகத்தை கடுமையாக்கிக் கொண்ட பிரபாகரன், இந்த ஒப்பந் தத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலை யில் நான் தற்போது இல்லை என்று குறிப்பிட்டதாகவும், ஏனெனில் இலங்கை அரசாங்கத்திற்கும் இந்தி யாவிற்கும் இடையில் இந்த ஒப் பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாக தான் அறிந்திருக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். அதற்குப் பதி லாக, பிரபாகரன் இத்துடன் நீங்கள் நான்காவது தடவையாக பிரதமரை ஏமாற்றிவிட்டீர்களென்று தான் குறிப் பிட்டதாகவும் டிக்ஷித் தன்னுடைய 'கொழும்புப் பணிகளில்' பதிவு செய் திருக்கின்றார். ஏற்கனவே திம்புவி லும், பெங்களூரிலும் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது இணக் கம் காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில்தான் அனைத்து முடி வுகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

டிக்ஷித்தின் குறிப்புகளிலிருந்து ஒன்று தெளிவாகிறது. அதாவது, பிரபாகரன் ஒப்பந்தத்தை நிராகரித் தது அதன் உள்ளடக்கம் கருதியல்ல மாறாக அதில் இலங்கை அரசாங்கத் திற்கு நிகரான சரியாசனம் தனக்குத் தரவில்லை என்பதற்காகவே. பிரபாக ரன் இறுதிவரை கடைப்பிடித்துவந்த ஏகப்பிரதிநிதித்துவ வாதந்தான் இந்த இடத்திலும் பிரபாகரனை வழிநடத்தி யிருக்கிறது. அதன் பிறகு பிரபாகரன் நிபந்தனைகளை அதிகரித்திருக்கின் றார்.

இந்த இடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்தியாவுடன் இணங் கிச் செல்லும் முடிவையே பிரபாகரன் எடுத்திருக்க வேண்டும். ஆனால் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்னும் நிலைப்பாட்டில் பிரபாகரன் உடும்பாக இருந்ததால், இறுதியில் பிரபாகரனை தள்ளிவிட்டுவிட்டு விட யங்களைக் கையாளுவதற்கான முயற்சியில் இந்தியா இறங்கியது. இனிப்பிரபாகரனுடன் பேசிப் பய னில்லை என்னும் முடிவிலிருந்தே பிறிதொரு இயக்கமான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஊடாக ராஜீவ் விடயங்களை நகர்த்த எத்தனித்தார். இப்படியொரு முடிவுக்கே நாம் வரவேண்டியுள்ளது.

இன்று எல்லாமே முடிந்துவிட்ட பின்னர், ஒரு ஓய்வுபெற்ற அரசியல் வாதி குறிப்பிடும் தகவல்களின் அடிப் படையில், ராஜீவ் காந்தியின் அவச ரத்தாலும் அறியாமையாலும்தான் அனைத்தும் நடக்க நேர்ந்தன என்ற வாறு குறிப்பிட்டுவிட்டு, சிவனே என்று நாம் அமர்ந்துவிட முடியாது. இதில் தமிழர் தரப்பின் தவறுகள் என்ன என்பதுதான் முக்கியமானது. ராஜீவ், இந்திய நலன்களிலிருந்து தான் விடயங்களை பார்த்திருப்பார் என்பதை சொல்வதற்கு சுயசரிதைகள் தேவையில்லை. அது இலகுவில் புரிந்துகொள்ளக் கூடியதொரு விடய மே. ஆனால் ஒரு பலவீனமான சிறிய இனத்திற்கு தலைமை தாங்கிய தரப்பு கள் அல்லவா நிலைமைகளை நிறுத் துப் பார்த்து விடயங்களைக் கையாண் டிருக்க வேண்டும்.

இன்று நிலைமைகளை திரும்பிப் பார்த்தால் இதில் ராஜீவ் என்னும் ஒரு மனிதன் அழிந்து போனார் என்பது உண்மையே. அதனை அவரது அரசி யல் தோல்வியின் விளைவு என்று சொல்லிவிட்டுப் போகலாம். ஆனால் இந்தியா என்னும் நாட்டிற்கு இந்த ஒப்பந்தம் முளையிலேயே செய லற்றுப் போனதால் என்ன தீங்கு ஏற் பட்டுவிட்டது? அவர்களது நலன் களை வெற்றிகொள்வதில் என்ன இடையூறு ஏற்பட்டுவிட்டது? எது வுமே இல்லை. ஒரு வல்லரசுக்கு தன் னுடைய நலன்சார் அரசியலை முன் னெடுக்க எத்தனையோ வழிகள் உண்டு. ஆனால் எங்களுக்கு?

இன்று தமிழர் தரப்பு என்னதான் பேசினாலும், இன்றும் தமிழர் அரசி யல் புதுடில்லியை சுற்றித்தானே வட் டமிடுகிறது. அதனைத் தாண்டி தமிழர் தரப்பால் பயணிக்க முடிய வில்லையே! பிரபாகரனின் இறுதி மாவீரர்தின உரையிலும் அவர் இந்தி யாவை நோக்கித்தான் நேசக்கரம் நீட்டியிருந்தார். இந்தியா பிரபாக ரனை நோக்கி நேசக்கரம் நீட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, அவர் அதனை உதாசீனம் செய்தார். ஆனால், அவரது வாழ்வின் இறுதியில், வெறுத்தொதுக்கிய இந்தியாவை நோக்கியே அவர் திரும்ப வேண்டியிருந்தது. இதன் பொருள் என்னவென்றால், இந்தியாவைத் தவிர்த்து தமிழர் தரப்பால் அதிக தூரம் ஓட முடியாது என்பது தான். எனவே இந்தப் பின்புலத்தில் இலங்கையின் உடனடி அயல்நாடென்னும் வகையிலும் ஏற்கனவே தமிழர் பிரச்சினையைக் கையாளும் நோக்கில் ஒரு நேரடித் தலையீட்டைச் செய்த நாடென்னும் வகையிலும், இந்தியாவே மீண்டும் மீண்டும் தமிழர் முன்தோன்றும்.

இந்தியாவை தவிர்த்துவிட்டுச் செல்ல வேண்டும் என்பது ஒரு வேளை தமிழர் தரப்பின் விருப்பமாக இருப்பினும் கூட, அது நடைமுறையில் சாத்தியமான ஒன்றல்ல. எனவே இந்தியா தொடர்பிலுள்ள கடந்தகால அனுபவங்களைத் துல்லியமாக மதிப்பிட்டே, தமிழர் தரப்பு தன்னுடைய ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டியுள்ளது. இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போது, கூட்டமைப்பு - மோடி சந்திப்பு தொடர்பான செய்திகள் வெளியாகியிருந்தன.

அந்தச் செய்திகளின் சாரம்சம் மீண்டும் இந்திய- இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச்சட்டம் பற்றியதாகவே இருக்கிறது. ஒன்றில் 13ஆவது அல்லது 13ஆவதை அடிப்படையாகக் கொண்டு இல்லாவிட்டால் 13ஆவதற்கு அப்பால் செல்வது அங்கும் 13ஐ அடிப்படையாகக் கொண்டு அதிலிருந்து முன்செல்வது. இதிலிருந்து இந்தியாவின் மத்தியில், எந்த ஆட்சி இருந்தாலும் அவர்கள் மீண்டும், மீண்டும் எதனைக் கூறுகின்றனர்?

இவ்வாறான குரல்களின் பின்னால் வெறுமனே 13ஆவது திருத்தச் சட்டம் பற்றி மட்டும் புதுடில்லி பேசவில்லை. மாறாக மறைபொருளில் இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் மீது இந்தியா கொண்டிருக்கும் கரிசனையே அங்கு வெளிப்படுகிறது. எனவே இந்தியாவின் கரிசனை பழைய ஒப்பந்தத்தின் மீது இருக்குமானால் அதுதானே இந்தியா தமிழர் பிரச்சினையில் அக்கறையெடுத்துக் கொள்வதற்கான இறுதி எல்லையாக இருக்க முடியும். இங்கு ஒரு விடயத்தை அடிக்கோடிடுவது அவசியம். அதாவது, இந்தியா புதிதாக எந்தவொரு அழுத்தத்தையும் கொழும்பின் மீது பிரயோகிக்கக் கூடிய சூழல் இல்லை.

இதன் காரணமாகவே புதுடில்லி (அரசாங்கங்களின் வேறுபாடுகளுக்கு அப்பால்) எப்போதெல்லாம் தமிழர் விவகாரம் தொடர்பில் பேச விழைகிறதோ, அப்போதெல்லாம் 13 ஆவது திருத்தம் பற்றியே பேசுகிறது. ஏனெனில் அதுதான் தமிழர் தொடர்பான இந்திய வெளிவிவகார அணுகுமுறை. இதனை விளங்கிக் கொள்ளாமல், விளங்கிக் கொண்டாலும் சில தேவையற்ற அச்சங்களுக்கு ஆட்பட்டு, தொடர்ந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 13ஆவதில் ஒன்றுமில்லை, அதனை நாங்கள் அன்றும் ஏற்றுக்கொள்ளவில்லை இன்றும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றவாறு சொல்ல முற்படுமாயின் முன்னர் இந்தியா கரம்கொடுத்த போது பிரபாகரன் உதாசீனம் செய்து வாய்ப்புகளை வீணாக்கியது போன்றதொரு நிலைமையே மீண்டும் ஏற்படும்.

எனவே இந்த விடயத்தில் இரா.சம்பந்தன் தலைமையில் இயங்கிவரும் கூட்டமைப்பு தன்னுடைய வரலாற்றுப் பொறுப்பை உதாசீனம் செய்யுமாயின் மீண்டும் தமிழ் மக்கள் அரசியல் நிர்க்கதிக்கே முகம்கொடுக்க நேரிடும். எனவே கூட்டமைப்பு 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் பேசுவதற்கு தயார் என்று பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். அதற்கான வேளை வந்துவிட்டது. அவ்வாறு அறிவிக்காதுவிட்டால், புதுடில்லியால் கொழும்புடன் தமிழர் பிரச்சினை தொடர்பில் பேச முடியாது போகும்.

கூட்டமைப்பு இந்தியாவின் ஆர்வங்கள் தொடர்பில் வெளிப்படையாக இல்லாவிட்டால், புதுடில்லி தமிழர் விவகாரத்தை கையில் எடுக்க முடியாததவொரு நிலைமையே இறுதியில் தோன்றும். இதனால் புதுடில்லிக்கு எந்தவிதமான தீங்கும் நிகழப்போவதில்லை. இதுதான் தமிழர் உற்றுநோக்க வேண்டிய இடம். இன்றைய நிலைமைகளை தமிழர் தரப்பால் கையாள முடியாமல் போகுமாயின் அதற்கு வேறு எவரும் பொறுப்பல்ல, மாறாக தமிழர் தரப்பே பொறுப்பு.

முன்னர் நடந்தவைகளுக்கும் தமிழர் தரப்புத்தான் பொறுப்பு, இனி நடைபெறப்போகும் விடயங்களுக்கும் அவர்களே பொறுப்பாக இருப்பர். இந்த இடத்தில் நட்வார் சிங் தன்னுடைய சுயசரிதையின் முன்னுரையில் எடுத்தாண்டிருக்கும் ஒரு வாக்கியத்தையே தமிழர்கள் உச்சரித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அமெரிக்க எழுத்தாளர் பிராங் ஹேர்குலஸ் (Frank Hercules)தன்னுடைய பார்வையில் 'மனித வாழ்வில் பிரதான தடையென்பது இறைசார் பாவமோ அல்லது ஆத்மார்த்த பலவீனங்களோ இல்லை மாறாக பிறவி முட்டாள்தனமாகும்' என்று குறிப்பிடுகிறார். தமிழர் தரப்புகள் கடந்த அறுபது வருடங்களுக்கும் மேலாக இரத்தம் சிந்தாமலும், இரத்தம் சிந்தியும் எத்தனையோ காரியங்களை நிகழ்த்தியிருக்கிறது. ஆனால் ஆனது ஒன்றுமில்லை.

அனைத்தும் தோல்வியே! எனவே இது தமிழர்களின் பிறவி முட்டாள்தனம்தானா? இந்தியா தொடர்பில் தமிழர் தரப்பின் அணுகுமுறைத் தவறு ஏதோவொரு வகையில் தமிழர்களது விருப்பு வெறுப்புகளைக் கடந்தும் தொடரத்தானே செய்கிறது. அதனையே இக்கட்டுரை பின்தொடரும் தவறுகள் என்கிறது. தமிழர் தரப்புகள், தவறுகளிலிருந்து கற்றுக் கொண்டு, வாய்ப்புகளை கணித்து முன்னகராது, வெறும் வீரச் சுலோகங்களில் சுகம்காணுமாயின், தமிழர் அரசியல் என்பது தவறுகள், பின்னரும் தவறுகள் இறுதியில் மீண்டும் தவறுகள் என்பதாகவே சுருங்கிப்போகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# இந்திய நிலைப்பாட்டை ஒளிவு மறைவின்றி கூட்டமைப்பிடம் தெளிவுபடுத்திய மோடி




என்.சத்தியமூர்த்தி

கடந்த மே மாதம் இந்திய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்ற பின், முதல் முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தலைமை புதுடில்லி சென்று வந்துள்ளது. தலைவர் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் அறுவர் குழு, பிரதமர் மோடி, வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், வெளியுறவுச் செயலர் சுஜாதா சிங் மற்றும் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் டோவல் ஆகியோரை சந்தித்துள்ளது.

இதில், பிரதமர் மோடி மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் டோவல் ஆகியோரை, கூட்டமைப்புத் தரப்பு சந்திப்பது இதுவே முதல் முறையாகும். பிரதமர் மோடியின் பதவியேற்பு வைபவத்தில், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொண்டமையும் அது போன்றே, முன்பு இலங்கை வந்துசென்ற அமைச்சர் சுஷ்மா மற்றும் செயலர் சுஜாதா சிங் ஆகியோரும், ஜனாதிபதி உள்ளிட்ட அரசு தரப்பினரைச் சந்தித்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் டோவலை இலங்கைத் தரப்பினரில், கூட்டமைப்புக்குழுவினரே முதல் முறையாகச் சந்தித்து பேசியுள்ளனர். எதிர்வரும் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள வருடாந்தர 'காலி கருத்தரங்கு' எனப்படும் உலக நாடுகளின் கடற்படையினரின் கூட்டத்தில் டோவல் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது தான், அவரும், இலங்கை பாதுகாப்புச் செயலர் மற்

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் புதுடில்லி விஜயம் ஒரு உணர்வுபூர்வமான வெற்றி. இது கூட்டமைப்பிற்கும் இலங்கை தமிழ்ச்சமூகத்திற்கும் கிடைத்த வெற்றி எனலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகரு மான ஜனாதிபதியின் சகோதரர் கோதாபய ராஜபக்ஷ ஆகியோர் சந் தித்துப் பேசுவார்கள். அந்த விஜயத் தின் போது, டோவல் ஜனாதிபதி மகிந்தவையும் மரியாதை நிமித்தம் சந்தித்து, பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் எதிர்பார்க்கலாம்.

இதனால் மட்டுமே இலங்கை அரசு தரப்பை விட, கூட்டமைப்பை இந்தி யாவின் புதிய அரசு ஒரு படி மேலே வைத்துப் பார்க்கிறது என்பதல்ல பொருள். அரசு தரப்பினரிடையே பல்வேறு காரணங்களுக்காக, பல் வேறு அதிகாரிகள் மற்றும் அமைச்சர் களிடையே கருத்துப் பரிமாற்றம் நிகழ்வது சராசரியான விடயம். அது பல்வேறு நிலைகளில் நடந்து கொண் டுதான் இருக்கும். மாறாக, புதிதாக மத்திய அரசு தலைமைப் பொறுப்பை நரேந்திர மோடி ஏற்றுக்கொண்ட பிற கு, அவர் தங்களை அழைத்துப் பேச் சுவார்த்தை நடத்துவதில் உள்ள கால தாமதத்தை கூட்டமைப்புத் தலைமை உணர்ந்தே இருந்தது. அதற்காக கவலைப்பட்டோரும் அந்தக் கட்சி யில் இருந்தனர். ஆனால், புதிய அர சும் புதிய அரசு தலைமையும் பதவி யேற்ற பின்னர், முதல் சந்திப்பில் ஏற் படும் காலதாமதம் தவிர்க்க முடியா ததும் கூட.

டும் தெரிவித்தனர் என்றும் பத்திரி கைச் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்தக் கருத்துகள், முந்தைய மன்மோகன் சிங் அரசின் கருத்துக ளோடு ஒத்திருந்தமை குறிப்பிடத்தக் கது என்பதையும் இலங்கையின் அரசு மற்றும் கூட்டமைப்பு சாரார் உணர்ந்தே இருந்தனர். இனப்பிரச்சி னையின் முக்கிய அலகான, அரசி யல் தீர்வு விடயத்தில் இந்தியாவின் கருத்துகளோடு, கூட்டமைப்புத் தலைமையின் கருத்துகளும் ஒத்திருந் தன என்ற காரணத்தினால், எந்தவித மான கருத்து வேறுபாடுகளும் இந்தச் சந்திப்பின் போது எதிர்பார்க்கப்பட வில்லை என்பதும் உண்மை.

ஆனால், அறிவுபூர்வமான விடயத் தில் முந்தைய இந்திய மத்திய அரசு

மைப்புத் தரப்பினர் இருவருமே பரஸ்பரம் விட்டுக்கொடுத்து, பங்க ளிப்பு மனப்பான்மையுடன் செயற் பட வேண்டும்' என்றும் பிரதமர் மோடி, கூட்டமைப்புத் தலைமை யிடம் தெளிவுபடுத்தியதாக இந்திய அரசு செய்திக்குறிப்பு தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

### 'காப்பி, டீ, விஸ்கி'

இரு தரப்பு பேச்சுவார்த்தைகளில், அடுத்தடுத்து பதவியில் இருந்துள்ள இலங்கை அரசு தலைமைகள், தமிழர் களைத் தொடர்ந்து வஞ்சித்து வந் துள்ளதாக அந்தச் சமூகத்தின் அரசி யல் தலைமைகள் தசாப்தங்களாகக் கூறிவந்துள்ளன. அதில் உண்மை உள்ளது. ஆனால், தமிழர் தரப்பும்

> ஐக்கிய இலங்கைக்குள் 13ஆவது திருத்தத்தினை அடிப்படையாக வைத்து அரசியல் தீர்வு முயற்சிகளில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற விதமாக பிரதமர் மோடி கூட்டமைப்புத் தலைமையிடம் கூறியிருக்கிறார். இது முன்னைய மன்மோகன்சிங் அரசாங்கத்தின் நிலைப் பாட்டின் தொடர்ச்சியே. ஆனால், இலங்கையில் இரு தரப்பினரும் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசு வதை கட்டாயம் தவிர்க்க வேண்டும் என்பதில் இந்தியா நிர்ப்பந்தமாக இருக்கப்போகிறது என்று மோடியின் கருத்துகள் தெளிவு படுத்துகின்றன

### உணர்வும் அறிவும்

கூட்டமைப்பினரின் புதுடில்லி விஜ யம் உணர்வுபூர்வமான வெற்றி என்று கருத இடமிருக்கிறது. ஒவ் வொரு சந்திப்பின் போதும், கூட்ட மைப்புத் தலைவர்கள் கூறிய ஒவ் வொரு கருத்தையும் பிரதமர் மோடி உள்ளிட்ட இந்தியத் தலைவர்கள் மிக உன்னிப்பாக கேட்டுக்கொண்டு ஆத ரவான கருத்துகளை முன்வைத்தா கச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது கூட்டமைப்பிற்கும், இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்கும் கிடைத்த வெற்றி எனலாம்.

ஆனால், அறிவுபூர்வமான கருத்துப் பரிமாற்றத்தில், இந்திய அரசு தலைவர்கள், நரேந்திர மோடி அரசு பதவியேற்ற கடந்த மாதங்க ளில் கூறி வந்த கருத்துகளையே மீண்

களை விட நரேந்திர மோடி தலைமை, கூட்டமைப்பிற்கும் ஒரு 'செய்தியை' தெரிவித்ததாகக் கருத இடமிருக்கிறது. 'ஐக்கிய இலங்கைக் குள், பதின்மூன்றாவது திருத்தத் தினை அடிப்படையாக வைத்து அர சியல் தீர்வு முன்னேற்றம் காணவேண் டும்' என்ற விதமாக பிரதமர் மோடி, கூட்டமைப்புத் தலைமையிடம் கூறி யதாக இந்திய அரசு செய்திக் குறிப்பு தெரிவித்தது. இது, முந்தைய மன்மோகன் சிங் அரசின் நிலைப் பாட்டின் தொடர்ச்சியே.

ஆனால், இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து, மோடி அரசு புதியதாக ஒரு கருத்தையும் கூட்டமைப்புத் தலைமையின் முன்னால் வைத்துள் ளது. அந்த வகையில், 'தீர்வு விடயத் தில், இலங்கை அரசு மற்றும் கூட்ட

இது போன்று இரட்டை வேடம் போடுவதாக இலங்கை அரசு தரப்பி னர் தொடர்ந்து காலம் காலமாகக் கூறி வந்துள்ளனர். இதிலும் உண்மை இல்லாமல் இல்லை. இதனை மனதில் வைத்தே, பிரதமர் மோடி இது போன்ற உண்மை பொதிந்த அறிவு ரையை கூட்டமைப்புத் தலைமைக்கு வழங்கியுள்ளார் என்று கருத இடமி ருக்கிறது.

கடந்த காலங்களிலும் சரி, தற் போது மகிந்த ராஜபக்ஷ தலைமையி லான அரசுடனான பேச்சுவார்த்தைக ளிலும் சரி, கூட்டமைப்புத் தலைமை இது போன்ற நிலைப்பாட்டையே எடுத்து வந்துள்ளதாக இந்திய அரசு கருதுவதாகவே பிரதமர் மோடியின் இந்த அறிவுறுத்தலைக் கொள்ள வேண்டும். இதன் பொருள் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம், மோடி அரசு கூட்டமைப்புத் தலைமையிடம் கூறிய செய்தி என்ன?

'இரு தரப்பு பேச்சுவார்த்தைகளின் போது, தமிழர்களின் கோரிக்கைகளில் பத்தில் ஐந்தை அரசு தனது முடிவை அறிவித்துவிட்டு, மற்றவை குறித்து கருத்துப் பரிமாற்றத்தைத் தொடரும் போது, தமிழர் தரப்பு மீண்டும் புதிதாக இரண்டு-மூன்று கோரிக்கைகளை முன்வைக்கும்' என்ற கருத்தை மோடி அரசும் ஆமோதிப்பதாகவே இதனைக் கொள்ள வேண்டும். 'இந்தப் புதிய கோரிக்கைகளை இலங்கை அரசு நிறைவேற்ற முடியாது என்று கூறும் போது, ஒட்டுமொத்த பேச்சுவார்த்தையும் முறியும். அப்போது, அரசுத்தரப்பு ஏற்றுக்கொண்ட முடிவுகளில் இருந்து கூட பின்வாங்கிவிட்டது என்று தமிழர் தரப்பு குற்றம் சாட்டும். இதுவே, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் காலகட்டத்திலும் தொடந்து இருந்து வந்தது. தற்போது, கூட்டமைப்புத் தலைமையின் கீழும் இந்த நிலைமையே தொடர்கிறது.'

இதுவே, தசாப்தகாலங்களாக இந்திய அரசின் கருத்தாக இருந்து வந்துள்ளது. மோடி அரசு தலைமை அதற்கு வரிவடிவம் கொடுத்துள்ளது. ஆனால், அதுவும் குறிப்பிடத் தக்கது. அதாவது, இரு தரப்பு நேரடி பேச்சுவார்த்தை என்று வந்துவிட்டால் அதில் பங்குபெறாமல் வெளி நபர்களும் சரி, நட்பு நாடுகளும் சரி உண்மை என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. பேச்சுவார்த்தை முடிந்து அது முறிந்த பின்னர், இரு தரப்பினரையும் தொடர்ந்து சந்தித்துப் பேசி வந்தால் மட்டுமே இடையில் விட்டுப்போன மற்றும் போக்கடிக்கப்பட்ட விடயங்களை கோர்வையாகச் சேர்த்து ஆலோசித்தால் மட்டுமே வெளி நபர்கள் உண்மையில் நடந்த விடயங்கள் குறித்து ஒரு முடிவிற்கு வரமுடியும். இது தான் கடந்த காலம் வெளியுலகிற்குச் சொல்லி வந்துள்ள பால பாடம்.

இனப்பிரச்சினைக்கு, இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் முடிவு பேச்சுவார்த்தைகள் மூலம் வர வேண்டும் என்று மோடி அரசும் தெளிவாக இருக்கிறது. அத்தகைய முடிவு, இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளையும், நியாயமான எதிர்பார்ப்புகளையும், அவற்றின் காரணமாக முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளையும் பிரதிபலிக்க வேண்டும் என்றும் இந்தியாவின் புதிய அரசும் விரும்புகிறது. அதேசமயம், அத்தகைய முடிவை எட்டுவதற்கு, தமிழர் தரப்பும் தங்களது கோரிக்கைகளில் சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் இந்தியா உணர்ந்துள்ளது.

குறிப்பாக, இலங்கையில் இருதரப்பினருமே உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதை கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும் என்பதிலும் இந்தியா நிர்ப்பந்தமாக இருக்கப்போகிறது என்பதையும் பிரதமர் மோடியின் கருத்து தெளிவுபடுத்துகிறது. இதுவரை, இலங்கை அரசு தரப்பின் மீது மட்டுமே சர்வதேச சமூகம் இது போன்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. இப்பொழுது இந்தியா, தமிழர் தரப்பையும் அந்த சந்தேக வட்டத்திற்குள் கொண்டு வந்துள்ளது என்பதே உண்மை.

கூட்டமைப்புத் தலைமை, இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, இலங்கைத் தமிழர் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா ஒரு கருத்தைக் கூறியுள்ளார்: ''கூட்டமைப்பினர், காப்பி கேட்டார்களே என்று காப்பி கொடுத்தால், அது வேண்டாம் என்று கூறி 'டீ' (தேனீர்) கேட்பார்கள். சரி என்று தேனீர் கொடுத்தால், 'விஸ்கி' கேட்பார்கள்.'' அமைச்சர் டக்ளஸின் இந்தக் கருத்து, கூட்டமைப்புத் தரப்பினரும் கூட, தங்களது கோரிக்கைகளைத் தொடர்ந்து மாற்றி வருவார்கள் என்ற பொருள்படும்படி அமைந்துள்ளது. இது வரை, இதுபோன்ற குற்றச்சாட்டு இலங்கை அரசு தரப்பினருக்கு எதிராக தமிழர் தரப்பும், அவர்கள் மூலமாக மட்டுமே இலங்கை இனப்பிரச்சினை குறித்து செய்தி அறிந்து வந்துள்ள சர்வதேச சமூகத் தரப்பினரில் சிலரும் கூறிவந்துள்ளனர்.

## ஐ.நா விசாரணையும் கூட்டமைப்பு அரசியலும்

ஆட்டைக் கடித்து, மாட்டை கடித்து, மனிதனை கடித்த கதையாக இனப்பிரச்சினை அரசியல் மீண்டும் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு இடையே குழப்பத்தை விளைவிப்பதாக உருவெடுத்து வருகிறது. அல்லது, அவ்வாறு நடந்துவிடுமோ என்று கவலைப்படும் வகையில் அமைந்துள்ளது.

கூட்டமைப்புத் தலைமை இந்தியா செல்ல இருப்பதற்கான எதிர்பார்ப்புகளும் செய்திகளும் பரவத் தொடங்கியவுடனேயே, 'போர்க் குற்றங்கள்' குறித்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் விசாரணையை கடந்த 1974-ஆம் ஆண்டு தொடக்கம் நடத்த வேண்டும் என்ற கோரிக்கையும் உடன் எழுந்தது எனலாம். அத்தகைய விசாரணை, அப்போதைய யாழ். மேயர் ஆல்பிரட் துரையப்பாவின் படுகொலையை உள்ளடக்கியதாக அமைந்திருக்கும். அதேசமயம், அத்தகைய் விசாரணை, கடந்த 1987-89 இடையில், இலங்கைத் தமிழர் பகுதிகளில், இந்திய அமைதிப் படை' பணிசெய்த காலகட்டத்தையும் உள்ளடக்கியதாகவும் இருந்திருக்கும்.

இந்தக் கோரிக்கையின் பின்னாலிருந்த அரசியல் தான், தமிழர் தரப்பு கவலைப்பட வேண்டிய விடயம் என்று கூட கூறலாம். காரணம், இத்தகைய கோரிக்கை முதலில் வட மாகாண சபையில் தீர்மானமாக முன்வைப்பதற்கான முயற்சி நடந்தது. ஆனால், மாகாண முதல்வர் நீதியரசர் விக்னேஸ்வரனின் நிலைப்பாடு காரணமாக, அது முன்னெடுக்கப்படவில்லை. அதேசமயம், அந்தக் கோரிக்கையை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டமைப்பைச் சேர்ந்த சபை உறுப்பினர்கள், கையெழுத்திட்டு, அப்போது மனித உரிமைகள் பேரவையில் தலைவராக இருந்த, நவநீதம் பிள்ளையிடம் சமர்ப்பித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மொத்தமுள்ள 41 கூட்டமைப்பைச் சேர்ந்த

(51ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை விவகாரத்தில் மாறாத இந்திய நிலைப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டில்லி டயறி



எம்.பி.வித்தியாதரன்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொண்ட போது இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆத்திரமும் கவலையும் அடைந்திருப்பார் என்பது நிச்சயம். இரா.சம்பந்தன் தலைமையிலான தூதுக் குழுவின் வேண்டுகோள்களுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி எவ்வாறு தனது பிரதிபலிப்பை வெளிக்காட்டுவார் என்பது குறித்து ராஜபக்ஷ யோசித்துப் பார்த்திருப்பார். விடுதலைப் புலிகளின் போர் நாட்களில் இருந்து இந்திய பிரதமர்கள் நடந்துகொண்ட முறைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரதமர் மோடியின் வெளிப்படையான பேச்சு தமிழ்த்தேசியக்கூட்டமைப்புத் தலைவர்களுக்கு ஏமாற்றத்தை தந்திருக்கக்கூடும். சீன தலைவர்களுடன் சமத்துவமான அந்தஸ்துடன் பேசவல்ல ஒரு பலம் பொருந்திய பிராந்திய தலைவராக மாற விரும்புகின்ற மோடியை பொறுத்தவரை ராஜபக்ஷவை மகிழ்ச்சிப்படுத்துவது ஒரு மூலோபாயத் தேவையாக இருக்கக்கூடும்**

ஜனாதிபதியின் கவலைகள் தவிர்க்க முடியாதவை.

மூன்று மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ராஜபக்ஷ மோடியுடன் தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். மோடியின் பதவி யேற்பு வைபவத்துக்குப் பிறகு இது நடந்தது. அப்போது இருதரப்பு உறவு களைப் பாதிக்கின்ற பிரச்சினைகள் குறித்தும் உறவுகளை மேம்படுத்துவ தற்கான வழிவகைகள் குறித்தும் இரு தலைவர்களும் மனந்திறந்து கலந்து ரையாடினார்கள். தமிழர்கள் மீதான பாரபட்சங்களை அகற்ற வேண்டிய தேவை குறித்து மோடி ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் வலியுறுத்தினார். தமிழர்களுக்கு நீதி வழங்க வேண்டு மென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மோடி அனேகமாக பிராந்திய ஒத்து ழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் (சார்க்) உறுப்புநாடுகளின் சகல தலை வர்களையும் சந்தித்தார். அவர்களில் பெரும்பாலானவர்கள் அரசாங்கத் தலைவர்கள். வெற்றிகரமான அச்சந் திப்புகளைத் தொடர்ந்து பிராந்தி யத்தை சமாதானம் மற்றும் சுபிட்சம் நோக்கி வழிநடத்த விரும்புகின்ற ஒரு தன்னம்பிக்கை கொண்ட தலைவராக மோடி தன்னை வெளிக்காட்டிக் கொண்டார். பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் உட்பட சகல தலைவர் களுமே அவரைப் பற்றி உயர்வாகப் பேசினர்.

அடுத்து இந்தியப் பிரதமர் சீன ஜனாதிபதி சி ஜின் பிங்கையும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினையும் 'பிரிக்ஸ்' அமைப்பின் உறுப்பு நாடுக ளின் ஏனைய தலைவர்களையும் சந் தித்தார். இங்குகூட மோடி துணிச்ச லான உடல்மொழியை வெளிக்காட்டி வெளிப்படையாகப் பேசியதைக் காணக்கூடியதாக இருந்தது.



இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜுடன் சம்பந்தன்

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரியுடனும் ஏனைய முக்கிய அதிகாரிகளுடனும் நடத்திய சந்திப்பு களின் போது உலகவர்த்தக நிறுவனத் தின் உடன்படிக்கையை ஏன் தனது அரசாங்கம் தடுக்கிறது என்று தைரி யத்துடன் கூறத்தயங்கவில்லை. மானி யங்கள் மற்றும் உணவுத்தானிய சேகரிப்பு தொடர்பில் இந்தியாவும் ஏனைய நாடுகளும் முன்வைத்திருக் கின்ற கோரிக்கைகளை தனவந்த நாடு கள் ஏற்றுக்கொள்ளாதபட்சத்தில் தொடர்ந்தும் உலக வர்த்தக நிறுவனத் தின் உடன்படிக்கைக்கு முட்டுக் கட்டைபோடப்போவதாக மோடி அறிவித்தா.ர்.

எனவே, வெளிப்படையாகவும் துணிச்சலாகவும் பேசுகின்ற அவரின் சுபாவம் தெளிவாகத் தெரிந்தது. தனக் குச் சரி என்று தெரிவதை நம்புவதி லும் அதை நியாயப்படுத்துவதிலும் எப்போதுமே உறுதிப்பாட்டை அவர் வெளிக்காட்டி வந்திருக்கிறார். மோடி நெருக்குதல்களுக்கு அடிபணிந்ததாக உதாரணங்களைக் காட்ட முடியாது. அத்தகைய ஒரு தலைவர் என்ற வகை யில் அவர் முற்றிலும் தேசிய நலனை அடிப்படையாகக் கொண்ட நல்ல தொரு வெளியுறவுக் கொள்கை யையே பின்பற்றுவார் என்பது எதிர் பார்க்கப்பட்டதேயாகும்.

தனது பதவியேற்பு வைபவத்துக்கு சகல தெற்காசிய நாடுகளின் தலைவர் களையும் அழைத்ததன் மூலமும் முத லில் பூட்டானுக்கும் அடுத்து நேபாளத் துக்கும் மேற்கொண்ட விஜயங்களின் மூலமும் அயல் நாடுகளே தனது முன்னுரிமைக்குரியவை என்பதை மோடி வெளிக்காட்டினார். அயல் நாடுகளும் முன்னேற்றம் அடைந்து பிராந்தியத்தில் சமாதானம் நிலவி னால் மாத்திரமே இந்தியா முன்னேற் றமடைய முடியும் என்று பல தடவை கள் அவர் கூறியிருக்கிறார். தெற்காசியப் பிராந்தியத்தை சமா தானமும் சுபிட்சமும் கொண்டதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவதே அவரது நோக்கு.

இந்த குறிக்கோளை மனதில் தெளிவாகக் கொண்டிருந்த நிலையில், மோடி தனது வாசஸ்தலத்தில் தன்னைச் சந்திக்க வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழுவிடம் ஒளிவுமறைவின்றி மனந்திறந்து பேசினார். இரா. சம்பந்தன் தலைமையிலான அத்தூதுக்குழுவில் எம்.பி.க்களான மாவை எஸ். சேனாதிராஜா, கே.சுரேஷ்பிரேமச்சந்திரன், பி.செல்வராஜா, செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

அந்த 45 நிமிடச் சந்திப்பின் போது மோடி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை மான சீகமாக நடைமுறைப்படுத்தவும் தமிழர்களுக்கு எதிரான எந்தவொரு பாரபட்சத்தையும் நீக்கவும் ஜனாதிபதி ராஜபக்ஷவை இணங்கவைப்பதற்கு தன்னாலியன்ற முயற்சிகளைச் செய்வதாக உறுதியளித்தார். எந்த நாட்டினதும் எந்தவொரு பிரஜைக்கும் எதிரான பாரபட்சத்தை எதிர்ப்பதாகக் கூறிய மோடி அதேவேளை, ஒவ்வொரு நாட்டினதும் சுயாதிபத்தியத்தை தனது அரசாங்கம் முற்றுமுழுதாக மதிக்கும் என்று குறிப்பிடத்தவறவில்லை.

பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகளின் ஊடாகவும் ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஒத்துழைப்புடனும் மாத்திரமே தீர்த்துக்கொள்ள முடியும் என்று கூறிய மோடி இலங்கையின் மத்திய அரசாங்கத்துடன் நெருக்கமாக ஒத்துழைக்குமாறு கூட்டமைப்பின் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

பிரதானமாக மோடி மூன்று முக்கிய விடயங்களைத் தெளிவுபடுத்தினார். முதலாவது, பாரபட்சத்தையும் அநீதியையும் இலங்கை அரசாங்கத்தின் உதவியுடன் தான் இல்லாமற் செய்ய முடியும் என்பதாகும். பாரபட்சங்களை முடிவுக்குக் கொண்டுவர தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனும் அதன் மாகாண அரசாங்கத்துடனும் சேர்ந்து செயற்படுமாறு ஜனாதிபதி ராஜபக்ஷவை இணங்கவைப்பதற்கு தனது அரசாங்கம் அதனாலியன்றதைச் செய்யும் என்று கூறிய மோடி, ஒரு எல்லைக்கு அப்பால் தங்களால் செல்ல முடியாது என்று குறிப்பிடத்தவறவில்லை.

இரண்டாவது, இலங்கையில் ஒரு பலமான மத்திய அரசாங்கம் பதவியில் இருப்பதையே விரும்புகின்ற மோடி அரசாங்கம், மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசுடன் சேர்ந்து மக்களின் மேம்பாட்டுக்காகப் பாடுபட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அதனால், மத்திய அரசைப் பலவீனப்படுத்துவதற்கு ஒருபோதும் அவரது அரசாங்கம் முயற்சிக்கப் போவதில்லை. ஏனென்றால் பலம்பொருந்திய மத்திய அதிகாரத்தில் நம்பிக்கை கொண்டவர் அவர்.

மூன்றாவது, 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்ற புதிய இந்திய அரசாங்கம், அந்தத் திருத்தத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை எதிர்க்கிறது. அத்தகைய எந்தவொரு கோரிக்கையையும் இந்தியா ஆதரிக்கப் போவதில்லை என்பதை மோடியும் அவரது வெளியுறவு அமைச்சரும் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

ஒருவகையில் நோக்குகையில் தங்களது தேசிய அரசாங்கங்களின் செயற்பாடுகளில் புது டில்லி தலையிட வேண்டுமென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அல்லது வேறு எந்தவொரு நாட்டையும் சேர்ந்த தரப்பினர்களுக்கு இந்தியத் தலைமைத்துவம் தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

பிரதமர் மோடியும் அவரது அரசாங்கமும் எடுத்திருக்கும் இந்த நிலைப்பாட்டில் புதிதாக எதுவுமில்லை. நேபாளம், பங்களாதேஷ் போன்ற ஏனைய நாடுகளைப் பொறுத்தவரையிலும் கூட, இதே நிலைப்பாட்டைத்தான் அவர் எடுத்திருந்தார். கடந்த மூன்று தசாப்தங்களில் டில்லியில் அதிகாரத்தில் இருந்த கடந்த அரசாங்கங்களைப் போலன்றி, மோடியின் அரசாங்கம் பிராந்திய அரசியல் கட்சிகள் மீதோ மாநில அரசாங்கங்கள் மீதோ அதன் உயிர்வாழ்வுக்காகத் தங்கியிருக்க வேண்டிய தேவையில்லை. அரசாங்கம் கவிழ்ந்துவிடுமே என்ற பயமின்றி மோடி அரசாங்கத்தினால் எந்தவொரு துணிச்சலான தீர்மானத்தையும் எடுக்க முடியும். துணிவாற்றல் கொண்ட ஒரு தலைவர் என்ற அவரின் ஆளுமையும் இதற்கு உறுதுணையாக அமையும்.

உண்மையில், தனிப்பட்ட முறையில் நோக்குகையில் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங்கும் பெரும்பாலும் இதே நிலைப்பாட்டைத் தான் கொண்டிருந்தார். ஆனால், அவர் உறுதிவாய்ந்த ஒருவராக இருக்கவுமில்லை. அவரது கட்சி



தமிழக பாரதிய ஜனதா கட்சித்தலைவர்கள் இல.கணேசன், தமிழிசை சௌந்தரராஜன், மத்திய இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் ஆகியோருடன் சென்னையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கு சொந்தத்தில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலமும் இருக்கவில்லை. எனவே, அரசியல் உயிர் வாழ்வுக்காக அவர் தனது சொந்த நம்பிக்கைகளுக்கு எதிரான தீர்மானங்களை மாத்திரமல்ல, வெளியுறவு அமைச்சு நியாயப்படுத்திய நிலைப்பாடுகளுக்கு எதிரான தீர்மானங்களையும் கூட எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இந்திய அரசாங்கத்திடமிருந்தும் பிரதமர் மோடியிடமிருந்தும் இத்தகையதொரு பிரதிபலிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்த்திருக்காது என்பது நிச்சயம். கூட்டமைப்பின் தலைவர்கள் பெரும் எதிர்பார்ப்புகளுடன்தான் டில்லிக்கு வந்தார்கள். அந்த எதிர்பார்ப்புகளில் பெரும்பாலானவை நிறைவேறாத நிலையிலேயே அவர்கள் டில்லியிலிருந்து கிளம்ப வேண்டியதாயிற்று.

மோடியும் அவரது வெளியுறவு அமைச்சரும் தங்கள் மனதில் உள்ளதை வெளிப்படையாகப் பேசியிருந்தாலும் கூட, உண்மையில் பேசப்பட்ட விடயங்களில் பெருமளவானவை ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. பேச்சுவார்த்தைகள் பெருமளவுக்கு வெற்றிகரமானவையாக அமையவில்லை என்ற ஒரு எண்ணம் ஏற்படுவதை அரசாங்கம் விரும்பவில்லை என்பது நிச்சயமானதாகும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தூதுக்குழுவினரும் கூட, டில்லியில் இருந்தபோது பெருமளவுக்கு கவனத்தை ஈர்க்காத வகையிலேயே நடந்துகொண்டனர். இந்திய ஊடகங்கள் தமிழர் விவகாரத்துக்கு மிகவும் ஆதரவாக எப்போதும் செயற்பட்டு வந்திருக்கின்ற போதிலும், மோடியுடனான கூட்டமைப்புத் தலைவர்களின் சந்திப்புக்குப் பிறகு பெரிதாக செய்திகள் வெளியாகவில்லை.

கூட்டமைப்புடனான சந்திப்புக்குப் பிறகு மோடியின் அலுவலகம் அதன் சமூக ஊடகத்தளத்தில் பின்வருமாறு பதிவு செய்திருந்தது.

'இலங்கையில் இருந்து வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அறுவர் கொண்ட குழுவை இன்று பிரதமர் ஸ்ரீ நரேந்திரமோடி வரவேற்றார். அக்குழுவினர் தற்போது இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்துடனும் அந்நாட்டின் அரசியல் கட்சிகளுடனுமான இந்தியாவின் தொடர்ச்சியான ஊடாட்டங்களின் ஒரு அங்கமே தமிழ்த்தேசியக்கூட்டமைப்புத் தலைவர்களின் விஜயமாகும்'.

இலங்கையில் உள்ள நிலைவரம் குறித்தும் அதிகாரப் பரவலாக்கல் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பிலான தங்கள் மதிப்பீடு மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்தும் பிரதமர் மோடிக்கு கூட்டமைப்புத் தலைவர்கள் விளக்கிக் கூறினார்கள். ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சமத்துவம், கௌரவம், நீதி மற்றும் சுயமரியாதைக்கான தமிழ்ச் சமூகத்தின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வொன்றுக்கான தேவையை பிரதமர் வலியுறுத்தினார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளில் குறிப்பாக, வீடமைப்பு, வாழ்வாதார பெருக்கம், ஆற்றல் மேம்பாடு, கல்வி, சுகாதாரச் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய திட்டங்களுக்கான இந்தியாவின் ஆதரவும் ஒத்துழைப்பும் தொடர்ந்து கிடைக்கும் என்றும் மோடி உறுதியளித்தார்.

மோடியைச் சந்திப்பதற்கு முதல் நாள் கூட்டமைப்புத் தலைவர்கள் வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜைச் சந்தித்தனர். அவரும் இந்தியாவின் நிலைப்பாட்டை அவர்களுக்கு விளக்கிக்கூறியதுடன் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுப்பணிகளுக்கான இந்தியாவின் நிதி உதவி குறித்து உறுதியுமளித்தார். என்றாலும்கூட, அவர் மோடியைப் போன்று வெளிப்படையாகப் பேசவில்லை. சுஷ்மாவைச் சந்தித்தபிறகு, பிரதமருடனான தங்களது சந்திப்பு பெருமளவுக்கு வெற்றிகரமானதாக அமையும் என்று கூட்டமைப்பினர் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

சுஷ்மாவுடனான பேச்சுவார்த்தைகளையடுத்து கருத்துத் தெரிவித்த சம்பந்தன் 'இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் ஈடுபாடு மிகவும் முக்கியமானது. இலங்கையில் வாழுகின்ற மக்கள் இந்தியாவில் தங்களது வேர்களைக் கொண்டவர்கள். அவர்களது கலாசாரம் இந்தியாவின் கலாசாரம். சகலதுமே இந்தியத்தன்மை கொண்டது. ஆகவே, பிரதான பாத்திரத்தை வகிக்கக்கூடிய ஒரு நாடு என்றால் அது இந்தியா என்றே நான் நினைக்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கில் தற்போது நிலவுகின்ற சூழ்நிலைகளை, மக்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்களை, இருமாகாணங்களிலும் இனப்பரம்பலை மாற்றியமைக்க கலாசாரம், மொழி தனித்துவத்தை இல்லாமற் செய்ய இலங்கை

**மக்களுடன் தொடர்பாடலை வளர்த்துக் கொள்வதில் மோடி கையாளுகின்ற அணுகு முறைகளே இதுநாள் வரையில் பிரதமர் என்ற வகையில் அவர் நிகழ்த்தியிருக்கக்கூடிய மிகப்பெரிய சாதனையாகும். இளம் தலைமுறையினர் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்த நிலையில் பதவிக்கு வந்த அரசாங்கத்தை மதிப்பீடு செய்வதற்கு 100 நாட்கள் ஒரு குறுகிய காலகட்டமேயாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற ஆக்கிரமிப்புத்தனமான செயற்திட்டங்களைப் பற்றியெல்லாம் தாங்கள் விளக்கிக் கூறியதாகவும் சம்பந்தன் சொன்னார்.

அரசியல் தீர்வு எதையும் காண்பதில் இலங்கை அரசாங்கத்துக்கு அக்கறையே கிடையாது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். தமிழ்ச் சிறுபான்மையினத்தவர்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதற்காக 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கு அக்கறையுடைய வேறுபல விடயங்கள் குறித்தும் தாங்கள் பேசியதாகவும் இந்தியாவினால் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் கூறினார். இந்த விடயங்களைக் கையாளுகின்ற அணுகுமுறைகளைப் பொறுத்தவரை, இந்தியா முனைப்புடன் செயற்பட வேண்டும் என்பதே சம்பந்தனின் நிலைப்பாடு.

ஆனால், பிரதமர் மோடியின் வெளிப்படையான பேச்சு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஏமாற்றத்தைத் தந்திருக்கக்கூடும். அதேவேளை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கக்கூடும்.

சீனத்தலைவர்களுடன் சமத்துவமான அந்தஸ்துடன் பேசவல்ல ஒரு பலம் பொருந்திய பிராந்தியத் தலைவராக மாறவிரும்புகின்ற மோடியைப் பொறுத்தவரை, ராஜபக்ஷவை மகிழ்ச்சிப்படுத்துவது ஒரு மூலோபாயத் தேவையாக இருக்கக்கூடும்.

## மோடியின் 100 நாட்கள்

பிரதமர் நரேந்திரமோடி பதவிக்கு வந்து செப்டெம்பர் 2 ஆம் திகதியுடன் 100 நாட்கள் பூர்த்தியாகிவிட்டது. குறிப்பாக, இளந்தலைமுறையினர் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்த நிலையில் பதவிக்கு வந்த ஒரு அரசாங்கத்தை மதிப்பீடு செய்வதற்கு 100 நாட்கள் என்பது ஒரு குறுகிய கால கட்டமேயாகும்.

மக்களுடன் தொடர்பாடலை வளர்த்துக் கொள்வதில் மோடி கையாளுகின்ற அணுகுமுறைகளே இதுநாள் வரையில் பிரதமர் என்ற வகையில் அவர் நிகழ்த்தியிருக்கக்கூடிய மிகப் பெரிய சாதனையாகும். ஆகஸ்ட் 15 அவர் நிகழ்த்திய முதலாவது சுதந்திர தின உரையின் தொனியிலும் உள்ளடக்கத்திலும் இதைக் காணக்கூடியதாக இருந்தது. தன்னைச்சுற்றி குண்டு துளைக்காத கண்ணாடிக் கூண்டு இல்லாமலேயே டில்லி செங்கோட்டையில் இருந்து மோடி அன்றைய தினம் உரையாற்றினார்.



பாரதிய ஜனதாவின் தேசியத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அமித்ஷாவை கைலாகு கொடுத்து வாழ்த்தும் பிரதமர் நரேந்திர மோடி

நல்லகாலம் பிறக்கும் என்ற மோடியின் உறுதிமொழி இந்திய கைத்தொழில் துறையை மகிழ்ச்சியடையச் செய்திருக்கிறது. பதவியில் மோடியின் முதல் நூறு நாட்களை, பிரதானமாக அவரின் நோக்கங்களுக்காகவே 'நல்ல நாட்கள்' என்று உயர்மட்ட தொழிலதிபர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், பொருளாதார நிலையை மாற்றியமைக்கக் கூடியதாகவோ அல்லது பணவீக்கத்தைக் குறைக்கக் கூடியதாகவோ குறிப்பிடத்தக்க தீர்மானங்களோ அல்லது கொள்கைச் சீர்திருத்தங்களோ மேற்கொள்ளப் படவில்லை என்பதை அவர்கள் தனிப்பட்டமுறையில் ஒத்துக்கொள்கிறார்கள். எதுஎவ்வாறிருப்பினும், மோடி தனது ஆற்றலை நிரூபித்துக் காண்பிப்பதற்கு போதிய காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும் என்பதே அனேகமாக ஏகமனதான அபிப்பிராயமாக இருக்கிறது.

திட்டக் கமிஷனை (Planning Commission) இல்லாமற் செய்வது இதுவரையில் மோடி அரசாங்கம் மேற்கொண்டிருக்கக்கூடிய தீர்மானங்களில் மிகப்பெரியதாகும். திட்ட ஆணைக்குழுவுக்குப் பதிலாக 'சிந்தனைக் குழாம்' (Think Tank) ஒன்று அமைக்கப்படும். அந்தக் குழாமின் தலைவராக முன்னாள் மத்திய அமைச்சரும் சிவசேனை தலைவருமான சுபாஷ் பிரபு நியமிக்கப்படலாம் என்று வதந்திகள் கிளம்புகின்றன. மாநிலங்களை அபிவிருத்தி செய்வதற்கு பயனுறுதியுடைய முறையில் உதவுவதில் திட்டக்கமிஷன் வெளிக்காட்டிய இயலாமை பல வருடங்களாக கண்டனத்திற்குள்ளாகி வந்திருக்கிறது. மாநிலங்களின் முதலமைச்சர்கள் திட்டக்கமிஷன் முன்னால் பிச்சைக்காரர்கள் போன்று பாத்திரம் ஏந்தி நின்றதைத் தவிர வேறு எதுவும் நடந்ததில்லை என்று குறை கூறப்பட்டது. பலவருடங்களாக குஜராத்தின் முதலமைச்சராக இருந்தவர் என்ற வகையில் திட்டக் கமிஷன் முன்பாக முதலமைச்சர்கள் பட்ட அவமானம் பற்றிய அனுபவம் மோடிக்கும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல குடியிருப்பாளர்களுக்கும் வங்கிக் கணக்கு ஒன்றைத் திறப்பதற்கான திட்டம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஆகஸ்ட் 28 ஆம் திகதி இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. முதல் நாளே ஒன்றரைக் கோடி வங்கிக் கணக்குகள் திறக்கப்பட்டிருந்தன. அடுத்த வருடம் ஜனவரி மாத முடிவிற்குள் ஏழரைக் கோடி வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கு ஏதுவாக 600 திட்டங்களும் 77852 முகாம்களும் இந்தியா பூராவும் முன்னெடுக்கப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

எவ்வாறெனினும், எதிர்பார்ப்புகளுடன் ஒப்பிடும்போது, மாற்றத்தை ஏற்படுத்தப்போவதாகக் கூறிக் கொண்டு பதவிக்கு வந்த மோடி பெரிதாக எதையும் சாதிக்கக் கூடியதாக இருக்கவில்லை. அவரது அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது பட்ஜெட் சராசரியான ஒன்றே தவிர, பிரத்தியேகமாக அதில் ஒன்றுமில்லை. சுதந்திர தினத்தன்று செங்கோட்டையில் இருந்து முக்கியமான அறிவிப்புகளை மோடி வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவரது சுதந்திர தின உரையில் பெரிதாக ஒன்றுமில்லை.

## சகல அதிகாரங்களும் ஒருவர் கையில்

பாரதிய ஜனதா கட்சியின் வலிமைமிக்க சகல தலைவர்களினதும் அதிகாரங்களையும் குறைத்து அவர்களை முக்கியத்துவமற்றவர்களாக்கி விட்டு அரசாங்கத்திலும் கட்சியிலும் தனக்கென்று ஒரு அணியை வளர்த்துக் கொள்வதில் முழுமூச்சுடன் மோடி இறங்கியிருக்கிறார். இப்போது மோடியே 'சூப்பர் தலைவர்'. அவர் தெரிவிக்கின்ற கருத்துக்களையும் மேற்கொள்கின்ற தீர்மானங்களையும் மறுத்துப்பேச கட்சிக்குள்ளோ அரசாங்கத்திற்குள்ளோ இனிமேல் ஆள் இல்லாமற் போகும். மோடி முதலமைச்சராக இருந்தபோது குஜராத் அமைச்சரவையில் அங்கம் வகித்தவரும் அவரது நம்பிக்கைக்குரியவருமான அமித்ஷா பாரதிய ஜனதாவின் தேசியத் தலைவராக்கப்பட்டிருக்கிறார். அடல் பிஹாரி வாஜ்பாய், அத்வானி, முரளி மனோஹர் ஜோஷி போன்ற பெருந் தலைவர்கள் அலங்கரித்த ஆசனத்தில் இப்போது ஷா அமரவைக்கப்பட்டிருக்கிறார். அவர் ஒரு இளந்தலைவர், நல்ல ஒரு அமைப்பாளர் என்று கூறப்படுகிறது. பாரதிய ஜனதாவின் பிரதமர் வேட்பாளராக மோடியின் பெயர் அறிவிக்கப்பட்டதும், அவர் செய்த முக்கியமான முதல் காரியங்களில் ஒன்று உத்தரப் பிரதேசத்தின் தேர்தல் பிரசாரப் பணிகளுக்கான பொறுப்பை ஷாவிடம் ஒப்படைத்ததாகும். உத்தரப் பிரதேசம் 80 லோக்சபா தொகுதிகளைக் கொண்டதாகும்.

கட்சியின் அதிகாரங்களைத் தன்கையில் எடுத்துக்கொண்டுவிட்ட மோடி, கட்சியின் ஆட்சி மன்றக் குழுவில் (Parliamentary Board) இருந்து அத்வானி, முரளி மனோஹர் ஜோஷி போன்ற மூத்த தலைவர்களை நீக்கியிருக்கிறார். ஆட்சிமன்றக் குழுவில் அங்கம் வகிக்கக்கூடியவர்களின் கூடுதல்பட்ச வயதெல்லையை 75 ஆக நிர்ணயித்து கட்சிக்கென்று புதிய ஒழுங்குவிதிகளைக் கொண்டு வந்திருக்கிறார் மோடி. இந்தத் தீர்மானம் பழைய தலைவர்கள் சகலருக்கும் வெறுப்பை ஏற்படுத்தியிருக்கிறது. நிகழ்வுப் போக்குகள் கடுமையாகப் போகுமேயானால், சகலருமே மோடி மீதே பாய்வார்கள். ஆனால், அவர் தந்திரமான அரசியல்வாதி, அத்தகைய சூழ்நிலை ஏற்பட அனுமதிக்கக் கூடியது சாத்தியமில்லை. ஆனால், அரசியலில் திட்டவட்டமாக எதையும் கூறிவிட முடியாது. எதையும் நிராகரித்தும் விட முடியாது. அதனால், அண்மையில் சில மாநிலங்களில் இடம்பெற்ற இடைத்தேர்தல்களில் பாரதிய ஜனதாவுக்கு ஏற்பட்ட பின்னடைவுகளை மோடி அக்கறையுடன் நோக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

எவ்வாறாயினும், இடைத்தேர்தல்களில் ஏற்பட்ட பின்னடைவு பாரதிய ஜனதாவுக்கு விடுக்கப்பட்ட அபாய அறிவிப்பேயாகும். சகல மாநிலங்களிலும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதென்பது சுலபமான காரியம் அல்ல. பொதுத் தேர்தலில் மோடி கண்ட பிரமிக்கத்தக்க வெற்றி எதிரணித் தலைவர்களை ஐக்கியப்பட வைத்திருக்கிறது. இவ்வாறு இப்போது ஐக்கியப்பட்டிருக்கும் தலைவர்களில் சிலர் முன்னர் தங்களுக்குள் கடுமையாக முரண்பட்டுக் கொண்டவர்களாவர். புதிதாக ஏற்பட்ட ஐக்கியம் அவர்களுக்குச் சில வெற்றிகளைக் கொண்டு வந்திருக்கிறது. பீஹார் மாநிலத்தில் ராஷ்டிரிய ஜனதா தள தலைவர் லல்லு பிரசாத் யாதவும் ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவர் நிதிஷ் குமாரும் மோடியை எதிர்த்து நிற்க ஒன்றுபட்டிருக்கிறார்கள். காங்கிரஸின் உதவியுடன் அவர்கள் 6 சட்டசபை ஆசனங்களை வென்றெடுத்திருக்கிறார்கள். பாரதிய ஜனதாவுக்கு 4 ஆசனங்களே கிடைத்திருக்கின்றன. உத்தர காண்ட் மாநிலத்தில் இடைத்தேர்தல் நடைபெற்ற 3 சட்டசபைத் தொகுதிகளையும் காங்கிரஸே கைப்பற்றியிருக்கிறது.

**இப்போது மோடியே பாரதிய ஜனதாவுக்குள் சூப்பர் தலைவர். அவரது கருத்துகளையும் தீர்மானங்களையும் மறுத்துப்பேச கட்சிக்குள்ளேயோ அரசாங்கத்திற்குள்ளேயோ இனிமேல் ஆளில்லாமல் போகும்**

பிரதமராக மோடி வருவதை விரும்பியே மக்கள் வாக்களித்தார்களே தவிர பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாக அல்ல என்பதையே இது உணர்த்துகிறது. சிறப்பான அபிவிருத்தியைக் காண்பதற்கு மாநிலங்களிலும் பாரதிய ஜனதாவைத் தெரிவு செய்யக் கூடியதாக மக்கள் மத்தியில் மோடியினால் நம்பிக்கையுணர்வை ஏற்படுத்த முடியுமா? அது ஒரு சவால்மிக்க பணியாகும்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



## காணாமல் போனோர் பிரச்சினை

# இலங்கையில் தொடரும் அவலமும் அவமானமும்



கிஷாலி பின்டோ ஜயவர்தன

மன்னார் பகுதியிலும் மத்திய மலைநாட்டின் மாத்தளையிலும் அண்மையில் மனிதப்புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை இலங்கையில் கடந்த காலத்தில் தொடரப்பட்ட நீதி விசாரணைமுறைக்கு அப்பாலான கொலைகள், காணாமல் போதல் ஆகிய கோர நிகழ்வுகளின் சாட்சியமாக வெளிப்பட்டன. மன்னார் சிறுபான்மை இனக்குழுவினரான தமிழர் வாழும் வடமாகாணத்தில் உள்ளவொரு இடம். மாத்தளை பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர் வாழும் இடம். இந்த நாட்டில் எல்லாப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் நீதி கிடைக்கவில்லை என்பதையும் நீதித்துறையில் குறைபாடு உள்ளதையும் பகிரங்கப்படுத்தியுள்ள இம் மனிதப் புதைகுழிகள், நீதித்துறையின் இக்குறை நாடு முழுமைக்கும் பொதுவானது என்பதை எடுத்துக் காட்டியுள்ளது.

வடபகுதியில் நிகழ்ந்த இனக்குழும யுத்தம் தென்பகுதியில் நிகழ்ந்த சிவில் யுத்தமும் கிளர்ச்சியும் என்பனவற்றின் போது கொல்லப்பட்டோருக்கும், அடையாளம் தெரியாமல் செத்துமடிந்த ஆயிரக்கணக்கானோரின் உறவினர்களுக்கும் இலங்கை அரசு பொறுப்புக் கூற முடியாமல் இருப்பது வெளிப்படை, குறிப்பாக மாத்தளைப் புதை குழிகள் 1980 களில் நடைபெற்ற படுகொலைகள் காணாமல் போதல்களுடன் சம்பந்தப்பட்டவை. இன்னொரு அரசாங்க ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தவை. இவை யாவும் சேர்ந்து இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு எதிர்நோக்கும் பொறுப்புக்கூறல் பிரச்சினையின் தன்மை பூதாகரமானது என்பதை இவை காட்டுகின்றன.

இலங்கையில் காணாமல் போனோர் பிரச்சினை 2009 இறுதியுத்தம் தொடர்பான அரசின் பொறுப்புக்கூறல் என்பதற்கும் அப்பாற்பட்டதாகவும் உள்ளது. அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மோதலின் போது பொது மக்கள் கொலை செய்யப்பட்ட விடயம் மட்டும் பொறுப்புக் கூறலுக்கு உரியதாய் உள்ளது என்று கொள்ள முடியாது. அதற்கும் அப்பால் அரசின் பொறுப்புக்கூறல் விரிந்து செல்கிறது. ஒரு அரசாங்கம் அல்லாமல் பல அரசாங்கங்கள் இதில் பங்குகொள்கின்றன. குறிப்பிட்ட ஒரு அரசியல் காலப்பகுதிக்கு என கட்டுப்படுத்தப்படாது பல காலப்பகுதிகளுக்கு விரிகிறது. தண்டனையின் பிடியில் இருந்து விடுபட்டு குற்றமிழைக்கும் நிலை நீண்டகாலம் தொடர்ந்தது. தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் இயங்கும் செயற்பாட்டாளர்களும், பொது மக்களும் நன்கு அறிந்து வைத்திருக்கும் அடிப்படையான உண்மை இதுவாகும்.

பலவந்தமாக காணாமல் போதல் என்ற குற்றச் செயலை சர்வதேச சட்டம் சுருக்கமாகவும் தெளிவாகவும் பின்வருமாறு விளக்கியுள்ளது.

‘கைது செய்தல், தடுத்துவைத்தல், ஆட்கடத்தல் அல்லது வேறுவகைச் செயல்கள் மூலம் அரசின் முகவர்கள் அல்லது அரசின் அதிகாரத்துடன் செயற்படும் தனிநபர்கள் அல்லது குழுக்கள் அரசின் ஆதரவுடனும் இணக்கத்துடனும் செயற்படுதலையும், ஆளொருவர் காணாமல் போனமையையும், அவரது சுதந்திரம் பறிக்கப்பட்டதையும் கண்டு கொள்ளாதிருப்பதும், அதனை மறைப்பதும் காணாமல் போனவர் சட்டத்தின் பாதுகாப்புக்கு அப்பால் தடுத்து வைக்கப்பட்ட இடத்தை மறைப்பதையும் பலவந்தமான காணாமல் போதல் குறிப்பிடுகின்றது’.



ரோம் உடன்படிக்கையில் மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்தில் குறிப்பிடப்படாத மேலதிக விடயம் ஒன்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி குற்றப் பொறுப்பு அரசுக்கு மட்டுமன்றி அரசியல் அமைப்புகளுக்கும் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. காணாமல் போனோர் தொடர்பான செயற்குழு (Working Group) ரோம் உடன்படிக்கையின் குறிப்பிட்ட உறுப்புரையை விளக்கி வியாக்கியானம் செய்துள்ளது. பலவந்தமாகக் காணாமல் போதல் என்பது அரசுகள் என்ற செயலிகளாலும் (State actors) தனிப்பட்ட நபர்களாலும், தனிப்பட்ட ஒழுங்கமைப்புடைய குழுக்களாலும் நடத்தப்படுவது. இத்தனிநபர்களும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களும் (உ+ம் துணைப்படைகள்) அரசின் சார்பாக செயற்படுபவை, அல்லது அரசின் ஆதரவுடன் செயற்படுபவை. இவ்வாதரவு நேரடியாகவோ மறைமுகமாகவோ இருக்கலாம். அரசாங்கத்தின் வெளிப்படையான சம்மதம் வழங்கப்பட்டிருக்கலாம் அல்லது மறைமுகமாக அரசு இணங்கியிருக்கலாம் என்றவாறு இச்செயற்குழு வியாக்கியானம் செய்தது. ரோம் உடன்படிக்கையின் 4(1) உறுப்புரை வருமாறு.

### உறுப்புரை 4(1)

‘பலவந்தமான காணாமல் போதல் தொடர்பான எல்லாக் குற்றச் செயல்களும் குற்றவியல் சட்டப்படி தண்டனைக்குரியவை. அக்குற்றச் செயல்களின் தீவிரத்தைக் கவனத்தில் கொண்டு பொருத்தமான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்’.

உறுப்புரை 4 குறித்து செயற்குழு விளக்கம் கூறுகையில் அரசுகள் தத்தம் குற்றக்கோவை சட்டங்களில் பலவந்தமான காணாமல் போதல் பற்றிய வரையறையை முழுமையாக உட்படுத்தாதவிடத்தும் பலவந்தமான காணாமல் போதல் என்ற குற்றச் செயல் அதனோடு தொடர்புடைய பிற குற்றச் செயல்களான ஆட்கடத்தல் போன்றவற்றில் இருந்து வேறுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும் எனக்கூறியது.

செயற்குழு இன்னொரு அம்சத்தையும் குறிப்பிட்டது. பலவந்த ஆட்கடத்தல் என்ற குற்றச் செயல் பற்றி ஐ.நா. பிரகடனத்தின் படி கைது ,தடுத்துவைத்தல் அல்லது ஆட்கடத்தல் என்பனவற்றில் ஆரம்பிக்கிறது. இதன் அர்த்தம் யாதெனில் பலவந்தமான காணாமல் போதலின் தொடக்கம் சட்டவிரோத தடுத்து வைத்தல் அல்லது கைது அல்லது தடுத்து வைத்தல் என்பனவற்றுடன் ஆரம்பிக்கின்றது. பலவந்தமாக காணாமல் போனவரின் சுதந்திரத்தின் பறிப்புடன் அவரைப் பாதுகாக்கும் தேவை உண்டாகிறது. அக்குற்றம் சட்டபூர்வமற்ற முறையில் சுதந்திரத்தைப் பறித்தல் என்பதுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் கூறப்பட்டது. சர்வதேச சட்ட ஆவணங்களிலும் காணாமல் போகச் செய்தல் ஒரு குற்றமாக கணிக்கப்பட்டுள்ளது என்பதும் கவனத்திற்குரியது.

### சர்வதேசச் சட்டத்தின் கீழ் இலங்கைக்கு உரியதான கடப்பாடுகள்

சிவில் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசச் சமவாயத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ள காரணத்தால் அவ்வுடன்படிக்கையினால் தடைசெய்யப்பட்டுள்ள பலவந்தமான காணாமல் போதல் தொடர்பான கடப்பாடுகள் நேரடியாகவே அரசின் மீது சுமத்தப்படுகின்றன. பலவந்தமான காணாமல் போதல் இவ்வுடன்படிக்கையின் ஏனைய உறுப்புரைகளையும் மீறும் தன்மையுள்ள குற்றச் செயலும் ஆகும். சுதந்திரத்திற்கான உரிமை ஆளொருவரின் பாதுகாப்பு உரிமை (உறுப்புரை 9) சித்திரவதைக்கு உள்ளாகாமல் இருக்கும் உரிமை. கொடிய மனிதத் தன்மையற்ற இழிவான நடத்துதலுக்கும் தண்டனைக்கும் ஆளாக்கப்படாதிருக்கும் உரிமை (உறுப்புரை 7) சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒருவர் மனிதாபிமான முறை



யிலும் மனிதர் என்ற முறையில் ஒருவருக்குள்ள மதிப்போடும் நடத்தப்படவேண்டும் (உறுப்புரை 10) ஆகியனவற்றையும் பலவந்தமான காணாமல் போதல் என்ற குற்றச் செயல் மீறுவதாக உள்ளது. அத்தோடு வாழ்வதற்கான உரிமை (உறுப்புரை 6) என்பதற்குப் பெரியதொரு அச்சுறுத்தலாகவும் இக்குற்றச் செயல் விளங்குகிறது.

செயற்குழுவினதும், ஐக்கிய அமெரிக்காவின் மனித உரிமைகள் நீதிமன்றத்தினதும் (INTER AMERICAN COURT OF HUMAN RIGHTS) சட்டவியல் முடிவுகளின்படி அரசுத் தரப்பு பலவந்தமான காணாமல் போதல்கள் பற்றி முழுமையான விசாரணைகளை நடத்தும் கடப்பாட்டை உடையது. அத்தகைய காணாமல் போதல்களுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவதும், பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தவர்களுக்கு நட்டஈடு வழங்குவதும் அரசுத் தரப்பின் கடப்பாடாகும்.

செயற்குழுவின் விசாரணை ஒன்றின் போது இலங்கை அரசுக்கு எதிராக அது தெரிவித்த கருத்து பற்றிக் குறிப்பிடுதல் பொருத்தமானது. பாதிக்கப்பட்ட தமிழர் ஒருவர் பலவந்தமான காணாமல் போதல் தொடர்பான வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். இராணுவம் அரசின் ஒரு அங்கம் என்பதும் இராணுவத்தின் உறுப்பினர் ஒருவர் செய்யும் செயலுக்கு அரசு செய்த குற்றச் செயலாகக் கருதப்படும் என்பதும் மிகத்தெளிவாக செயற்குழுவால் இவ்வழக்கு விசாரணையின்போது எடுத்துக் கூறப்பட்டது. மனுதாரர் இவ்வழக்கில் அரசுத் தரப்பு குறித்த காணாமல் போதல் பற்றி முழுமையான விசாரணையை நடத்தத் தவறியது என்பதைக் குறிப்பிட்டிருந்தார். அரசு தன்பொறுப்பையும் சம்பந்தப்பட்ட தனிநபர்களுக்கு இக்குற்றம் தொடர்பாக இருந்த பொறுப்பையும் சந்தேக நபர்கள் இக்குற்றத்தை இழைத்தமை தொடர்பான நேரடியான பொறுப்பையும் விசாரணை மூலம் வெளிக்கொணரத் தவறிவிட்டது எனச் செயற்குழு குறிப்பிட்டது. காணாமல் போதல் நிகழ்ந்து பத்து வருடங்கள் கழிந்த பின்னர்தான் விசாரணை தொடங்கப்பட்டது ஏன் என்பது பற்றி எந்தவொரு விளக்கத்தையும் கூறவில்லை எனவும், காணாமல் போனமை நிகழ்ந்த உடனேயே அரசுதரப்புக்கு அறிவிக்கப்பட்டும் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் கீழ்நிலை உத்தியோகத்தருக்கு விடுக்கப்பட்ட கட்டளை தொடர்பான சரியான தகவல்கள் வழங்கப்படவில்லையென்றும் குறிப்பிடப்பட்டது. தேடுதல் நடவடிக் கையை நடத்தும் போது பின் பற்றப்பட வேண்டிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கு முறையான வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டது பற்றிய தகவல்களோ கட்டளை அதிகாரச் சங்கிலித் தொடர் (CHAIN OF COMMAND) குறித்த தகவல்களும் வழங்கப்படவில்லை எனச் செயற்குழு குறிப்பிட்டது.

விசாரணை வேறும் பல வழிகளில் குறைபாடு உடையதாய் இருந்ததைச் செயற்குழு எடுத்துக்காட்டியது. கட்டளைகள் வழங்குதல், பயிற்சி, அறிக்கையிடும் நடவடிக்கை முறை, வேறு வகையான கண்காணிப்பு ஒழுங்குகள், கீழ்நிலையில் உள்ள படைவீரர்கள் எவ்வாறு கண்கரணிக்கப்பட்டார்கள் என்ற தகவல்களையும் விசாரணை வழங்கவில்லை. அத்தகைய தகவல்கள் மேல்நிலை உத்தியோகத்தர்கள் குறித்த கட்டளைகளை கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கு கொடுத்தார்களா இல்லையா என்பதையும் கீழ்நிலை உத்தியோகத்தர்களின் நடவடிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை அவர்கள் தெரிந்திருந்தார்களா இல்லையா என்பதையும் எடுத்துக்காட்டியிருக்கும். அரசு தரப்பு சேகரித்த தகவல்களில் வெளிப்படையான பல குறைபாடுகள் இருந்தன என்று கூறப்பட்டது. 1990களில் நடைபெற்றுக் கொண்டிருந்த சுற்றிவளைப்பு, தேடுதல்கள் எவை, அவற்றின் போது தடுத்துவைக்கப்பட்டவர்களின் விபரங்கள் பற்றிய பதிவேடுகள் இருந்தனவா என்ற கேள்வியும், அது பற்றிய தகவல்கள் விசாரணையின் போது சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும் எடுத்துக்காட்டப்பட்டது. கீழ்நிலை இராணுவ உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக குற்றப் பத்திரம் வழங்கப்பட்டது. ஆயினும் அவரது குற்றத்தை எண்பிப்பதற்கான முக்கிய சாட்சிகளான தனிநபர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. வழக்காளி தரப்பில் முக்கிய சாட்சியங்களாக இருக்க வேண்டிய இந்நபர்களது சாட்சியங்கள் முன்பு அதிகாரிகளால் பெறப்பட்டிருந்தன. ஆனால் இந்த முக்கிய சாட்சிகளை விசாரணையின் போது விசாரணைக்குட்படுத்தவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

அரசாங்கம் மேற்குறிப்பிட்டவற்றிற்குத் தெரிவித்த விளக்கம் திருப்தியானதாக இருக்கவில்லை. கீழ்நிலை உத்தியோகத்தர் ஒருவரின் எழுந்தமானமான செய்கையால் இது நடந்தது என்றும், இதுவோர் தனிமைப்படுத்தப்பட்ட நிகழ்வு என்றும், உயர்நிலை அதிகாரிகள் இவ்விடயம் பற்றி அறிந்திருக்கவில்லை என்றும் மேல் நிலை அதிகாரிகளுக்கு இதில் உடந்தையோ சம்பந்தமோ கிடையாது என்றும் அரசு குறிப்பிட்டது. அரசின் இந்த நிலைப்பாட்டைச் செயற்குழு நிராகரித்தது. உடன்படிக்கையின் உறுப்புரை 4 (2) இன் படி 'அரசுத்தரப்பானது நல்ல நோக்கத்தோடு விசாரணையை நடத்த வேண்டிய கடப்பாடு உடையது. தனக்கு எதிராகவும் தன்னால் அதிகாரமளிக்கப்பட்டவர்களுக்கு எதிராகவும் கூறப்படும் உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் கடப்பாடு அரசுக்கு உள்ளது' அரசுத் தரப்பு காணாமல் போதலுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் மீதான குற்றவியல் வழக்குகளின் விசாரணைகளைத் துரிதப்படுத்த வேண்டும், கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களின் விசாரணைகள் விரைவுபடுத்தப்படவேண்டும் என்றும் செயற்குழு கேட்டுக்கொண்டது. பாதிக்கப்பட்டோருக்கு விரைவான நிவாரணத்தை வழங்க வேண்டும். காணாமல் போனவர்களின் நிலை என்ன அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை விசாரித்தறிவதோடு உயிரோடு இருந்தால் அவர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும் என்றும் செயற்குழு குறிப்பிட்டது.



விசாரணையின் பயனாகப் பெற்ற தகவல்களை வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கும் அவர்களது குடும்பத்தவர்களுக்கும் போதிய நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் செயற்குழு குறிப்பிட்டது.

செயற்குழுவின் முடிவின் முக்கியமான விடயம் யாதெனில் உடன்படிக்கையின் உறுப்புரை 7இன் மீது கவனத்தை திருப்பியதாகும். பலவந்தமான காணாமல் போதல் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படாதிருக்கும் உரிமை கொடிய, மனிதாபிமானமற்ற, இழிவான நடத்துகைக்கு உட்படுத்தப்படாதிருக்கும் உரிமை என்பன வற்றை மீறியதற்கு சமனாகும் என்று செயற்குழு கூறியது.


உறுப்புரை 7 ஐ மீறிய செய்கையானது காணாமல் போனோரின் தாய் - தந்தையருக்கு மிகுந்த வேதனையும் மன அழுத்தத்தையும் தருகின்ற விடயமாகும். தம்பிள்ளைகள் காணாமல் போனமையினால் பெற்றோர் தொடர்ந்து துன்பத்திலும் நிச்சயமற்ற நிலையிலும் வருந்தினர். உடன்படிக்கையின் படி காலத்திற்குக்காலம் முன்னேற்ற அறிக்கைகளை அனுப்ப வேண்டியிருந்தது. அரசு அனுப்பிய முன்னேற்ற அறிக்கைகளில் குற்றவாளிகளை அடையாளம் காண்பதில் இலங்கை அரசின் இயலாமையும் அதன் செயலின்மையும் வெளிப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களும் முறைப்பாடுகளைச் செய்வதிலே நடவடிக்கைகளைத் தொடருவதோ பயனில்லை என்று விரக்தியடைந்தவர்களாய் இருந்தனர். இதன் விளைவாக 'குற்றம் செய்பவர்கள் தண்டனை கிடைக்கும் என்ற பயமின்றிச் செயற்படும் கலாசாரம்' நாட்டில் உருவாகியது என்று செயற்குழு சுட்டிக்காட்டியது.

## காணாமல் போதல் என்ற குற்றச்செயல் என்ற ஒன்று சட்டப்புத்தகத்தில் இல்லை

காணாமல் போதல் அல்லது போகச் செய்தல் என்றொரு குற்றச்செயல் சட்டப்புத்தகத்தில் இல்லை என்பதால் இக்குற்றம் இழைப்போரை நீதி விசாரணைக்கு உட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தி தண்டிக்கும் செயல்முறை சிக்கலானது. சில பத்து வருடங்களாக நடைபெற்று வரும் குற்றங்களான ஆட்களைப் பெரும் தொகையில் ஒன்றாகக் கொல்லுதல், பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தல், ஆட்களின் நடமாடும் பௌதிக சுதந்திரத்தைப் பறித்தல் நீதி விசாரணைகளைச் சிக்கலாக்கி உள்ளன. இப்பிரச்சினைகளின் மத்தியில் இருவழக்குகள் மட்டும் வெற்றிகரமாக நடத்தப்பட்டன. ஒன்று எம்பிலிப்பிட்டிய வழக்கு மற்றது கிரிசாந்தி குமாரசாமி வழக்கு. இப்புள்ளி விபரங்கள் அதிர்ச்சியைத் தருவன. இலங்கையின் நீதித்துறை, அதன் குற்றவியல் சட்டம், வழக்குத் தொடுத்தல் செயல்முறை, ஒட்டுமொத்தமான நீதிமுறைமை எத்தகைய அவல நிலையில் உள்ளன என்பதையும் இப்புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.



அடிப்படையான பிரச்சினை ஒன்று தீர்க்கப்பட வேண்டியுள்ளது. சட்டங்களை மீறுவதற்கும், மனித உரிமைகளை மீறுவதற்கும் அரசியல் யாப்பு நிறைவேற்று ஜனாதிபதிக்கு பாதுகாப்பு வழங்குகிறது. இது ஒழிக்கப்பட வேண்டும். இலங்கையில் பொதுத்துறைக் கண்காணிப்பு நிறுவனங்களான தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு (NARC) தேசிய பொலிஸ் ஆணைக்குழு (NPC) ஆகிய இரண்டும் இன்று பலமிழந்து, செயலிழந்து உள்ளன. இவற்றின் சுதந்திரம் மீண்டும் நிலைநாட்டப்படவேண்டும்.

வாழ்வதற்கான உரிமை சட்டத்திற்கு அப்பாற்பட்ட வழிகளில் ஆட்களைக் கொலைசெய்தல், காணாமல் போக வைத்தல் என்பன அரசியல் யாப்பில் குறிப்பிடப்படவேண்டிய விடயங்களாகும். பலவந்தமாகக் காணாமல் போகச் செய்தல் தொடர்பான ஐ.நா.சமவாயம், சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கை போன்ற சர்வதேச சட்டங்களை இலங்கை ஏற்று அங்கீகரிப்பதோடு உள்நாட்டில் அவற்றினை பிரயோகிப்பதற்கு வழிவகை செய்யப்படுதல் வேண்டும். அவை தொடர்பான மேற்பார்வைப் பொறிமுறைகளையும் பாதிக்கப்பட்ட தனிநபர்களுடனான தொடர்பாடல் முறைகளையும் இலங்கைக்குள் வலுப்படுத்த வேண்டும்.

காணாமல் போகச் செய்தல் என்பது ஒரு குற்றச் செயல். அக்குற்றச் செயலுக்கு எதிராகச் சட்டப்படி வழக்குத் தொடரக் கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

தனிநபர்களின் சுதந்திரத்தைப் பறிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் (PSO, PTA) போன்ற சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்படல் வேண்டும். சாட்சிகளை பாதுகாப்பதற்கான முறைமையைக் கொண்டியக்குவதற்கு பொலிஸ் சேவையில் இருந்து வேறுபட்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட நிர்வாக அலகு உருவாக்கப்படுதல் மிக அவசியமானது. ■

---

***(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

தமது கிளைகளைத் திறந்து செயற்பட ஆரம்பித்த நிலையில் வங்கிகளுக்கிடையிலான போட்டித்தன்மை துரிதமடைந்தது. இதனால் ஒவ்வொரு வங்கியும் கடன் வழங்குவதில் நான் முந்தி நீ முந்தியெனப் போட்டிபோட்டுப் பொதுவாகக்கடன் வழங்குவதிலுள்ள கட்டுப்பாட்டு நடைமுறைகளைத் தளர்த்தி இலகுபடுத்தியமுறையில் கடன்களை வழங்கத் தொடங்கின.

இதனால் ஒரு நபருக்கு பல வங்கிகள் கடன் வழங்கியிருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. கடனாளிகள் ஓரிரு தவணைகள் ஒழுங்காகத் தவணைக்கட்டணங்களைச் செலுத்திய பின்னர் தவிர்க்க முடியாத சில காரணங்களால் (தொழிற்பாதிப்பு, வருமான இழப்பு) கடனைத்திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்குள்ளாவதுடன், தமது இயலுமைக்கு மிஞ்சிய கடன்சுமையைத் தாங்கிக் கொள்ளும் நிலையுமேற்பட்டுள்ளது. இந்நிலை அநேகமான வடபுலத் தமிழர்களுக்கு சேமிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்துவிட்டது.

சேமிப்பு முதலீடாகும். முதலீட்டு வருமானமாகும் என்ற எளிய சூத்திரம் இவர்களைப் பொறுத்தவரை தலைகீழாகிவிட்டது. எதிர்காலத்தில் இம்மாய வலைக்குள் சிக்காமலிருப்பதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியமாகின்றது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தத்துவம்

# மூன்றாம் உலக நாடுகளில் இடதுசாரிகள் தேங்கிப் போனது ஏன்?

### மூன்றாம் உலக நாடுகள்

மூன்றாம் உலகம் என்ற சொல்லுக்கு இன்னும் நியாயம் இருக்கிறதென்றே நம்புகிறேன். மேற்கத்திய முதலாளிய நாடுகள் முதலாம் உலகத்தைச் சேர்ந்தவை. கியூபா, வியட்நாம், சீனா போன்ற நாடுகளை சோசலிச நாடுகள் எனப் பட்டியலிட்டு அவற்றை இரண்டாம் உலக நாடுகள் எனலாம். மேலே கூறியவற்றைத் தவிர்த்த ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் எனப்படும். 1956 பாண்டுங் மகாநாட்டுக்குப் பிறகு இந்த நாடுகளில் பல தம்மைக் கூட்டுச் சேராநாடுகள் என அறிவித்துக் கொண்டன. நாடுகளின் எண்ணிக்கையில், மக்கள் தொகை எண்ணிக்கையில், நிலப்பரப்பில் இன்னும் எத்தனையோ கணக்கெடுப்புகளின்படி மூன்றாம் உலக நாடுகளே அளவில் மிகப்பெரியவை, பிரம்மாண்டமானவை. இந்த நாடுகள் எல்லாமே சுமார் 200-300 ஆண்டுகளுக்குக் குறையாமல் ஐரோப்பிய நாடுகளின் காலனிகளாக இருந்தன என்பது அவற்றின் பொதுத் தன்மையாகும். இந்த நாடுகள் அனைத்துமே வரலாற்று ரீதியாக மிகப் பழைமையானவை என்பதும் குறிப்பிடத்தக்கது. தொன்மையான நாகரிகங்கள், பண்பாட்டு மரபுகள் இந்நாடுகளுக்குச் சொந்தமானவை.

இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் இந்நாடுகள் விடுதலை பெற்றன. விடுதலைக்குப் போராடிய சந்தர்ப்பங்களிலும் விடுதலை பெற்ற பிறகும் இந்நாடுகளில் பல சோவியத் யூனியன் முதலான சோசலிச நாடுகளுக்கு நெருக்கமாக இருந்தன. இதையொட்டியே இந்நாடுகளில் இடதுசாரி அரசியலுக்கு குறிப்பிடத்தக்க ஓர் இடம் இருந்தது. நாட்டு விடுதலை இயக்கங்களிலும் இடதுசாரிகள் முக்கிய பங்காற்றினர். ஆயின் 70-80 களுக்குப் பிறகு மூன்றாம் உலக நாடுகளில் இடதுசாரி அரசியலுக்கு மிகப்பெரிய தேக்கம் ஏற்பட்டுள்ளது. இடதுசாரி அரசியல் என்பது உழைக்கும் மக்கள் பகுதியினரின் நலன் சார்ந்தது என்பது மட்டுமன்றி அதன் கோட்பாட்டு ஆற்றலும் கனிசமானது என்பதைச் சொல்லியாக வேண்டும். எனவே இடதுசாரி அரசியலின் தேக்கம் ஒரு நாட்டின் சனநாயக அரசியலின் வீழ்ச்சியைக் குறிப்பதாகும். அது குறித்தே இங்கு நாம் பேச விழைகிறோம்.

சோவியத் யூனியன் முதலான நாடுகளில் சோசலிசம் வீழ்ச்சியடைந்து விட்டது, எனவே இந்த நாடுகளிலும் இடதுசாரிகள் செல்வாக்கை இழந்தனர் என்று ஒரு முடிவுக்கு நாம் வரலாம். ஆயின் இன்னும் கூடுதலாக சில காரணங்கள் குறித்துப் பேச வேண்டியுள்ளது. மேற்கு நாடுகளில் மையம் கொண்டிருந்த முதலாளியம்/ சோசலிசம் என்ற போட்டி அரசியலின் இடுக்குகளுக்குள் மூன்றாம் உலக நாடுகள் சிக்கிக்கொண்டுவிட்டன என்ற ஒரு விடயம் குறித்து நாம் கவனம் கொள்ள வேண்டியுள்ளது. அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய புவிப் பரப்புகள் சார்ந்த அரசியலுக்குள் சிக்கிக் கொண்டிருந்த அந்த வேளைகளில் நாம் நமது சொந்தப் பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தவறிவிட்டோம் என்பதே நாம் கூடுதலாகச் சொல்ல விழையும் செய்தியாகும்.

### கறுப்பின மக்களின் பிரச்சினைகள்

இடதுசாரிகள், ஐரோப்பிய அரசியல் சொல்லாடல்களுக்குள் மூழ்கிப்போய் எமது சொந்தப் பிரச்சினைகளைப் பேசத்தவறிப் போய்விட்டனர் என்ற வாதத்தை முதலில் சொன்னவர்கள் ஆபிரிக்க மற்றும் மேற்கிந்திய கறுப்பின மக்கள் ஆவர். மார்க்சியம் அதன் வரலாற்று அனுபவம் சார்ந்து ஐரோப்பாவை மையமிட்டுள்ளது என்பதை கறுப்பினச் சிந்தனையாளர்களே முதலில் எடுத்துரைத்தனர். நிறவேறுபாடுகளை வர்க்க வேறுபாடுகளுக்கு இணையாக முதலில் இவர்கள் முன்வைத்தனர். மிக விரைவில், நிறவேறுபாடே முதன்மையான பிரச்சினை எனக் குறிப்பிட்டனர். முதலாளியச் சுரண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர்
ந.முத்து மோகன்

லால் நிறவெறி உண்டாக்கப்படவில்லை, மாறாக நிற வெறி, காலனிய அடிமைப்படுத்தல் ஆகியவற்றின் விளைவாகவே முதலாளியம் உருவானது என இவர்கள் வாதிட்டனர். வெள்ளைத் தொழிலாளர்களின் அந்நியமாதலை விட கறுப்பின மக்களின் அந்நியமாதல் ஆழமானது, அடிப்படையானது என இவர்கள் எடுத்துக்காட்டினர். ஆலைத் தொழிலாளர் வர்க்கம் மட்டுமே புரட்சிகரமானது என்ற சூத்திரத்தைத் தாண்டி விவசாயிகள், பழங்குடிகள் என்ற ஆபிரிக்க எதார்த்தம் நோக்கி கறுப்பினச் சிந்தனையாளர்கள் பயணித்தனர். வெள்ளை நிற உணர்வுகளிலிருந்து விடுபடாத ஐரோப்பிய சிந்தனையால் கறுப்பின விடுதலை குறித்து எப்படிப்பேச இயலும்? என்ற கேள்வியை இவர்கள் எழுப்பினர். நிற உணர்வை விஞ்சி வர்க்க ஓர்மை செயல்படுமா? என்ற கேள்வியும் இவர்களால் எழுப்பப்பட்டது. மார்க்சியத்தில் முதலாளியமல்லாத சமூக முரண்களை எதிர்கொள்ள இடமிருக்கிறதா? என்ற கேள்வியின் முன்வடிவங்கள் இவை. மார்க்சியத்தின் இடைவெளிகளை இட்டு நிரப்ப இருத்தலியம், பிராய்டியம் போன்ற தத்துவங்களைக் கறுப்பினச் சிந்தனையாளர்கள் எடுத்தாண்டனர். ஆபிரிக்க விடுதலை இயக்கத் தலைவர்கள் மட்டுமன்றி புலம் பெயர்ந்து வாழ்ந்த ஆபிரிக்கச் சிந்தனையாளர்களும் இக்கருத்தியலுக்குப் பங்களித்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய நிகழ்வு சோசலிசப் புரட்சி என்ற வரையறையை இவர்கள் மீறிச் சென்றனர். வெள்ளையர் அல்லாத (ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க) பிறநிறத்தவரின் எழுச்சிகளே இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரும் நிகழ்வுகள் என்று கறுப்பினச் சிந்தனையாளர்கள் அறிவிக்கின்றனர். ஆயின் இடதுசாரிகள் இதனை அங்கீகரிப்பதில்லை எனக் குற்றம் சாட்டுகின்றனர். கடந்த நூறு-நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேலாக மூன்றாம் உலக நாடுக

**பல விவாதங்கள் இடதுசாரிகளின் பங்கேற்பின்றி அவர்களைக் கடந்து சென்று விடுகின்றன. இவ்விவாதங்கள் எல்லாம் ஐரோப்பிய மையத்தை விட்டு விலக முயற்சிப்பதை குறிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். இந்நிலையில் மூன்றாம் உலக நாடுகளின் இடதுசாரிகள் புதிய இடதுசாரிகளாக, தமது நாடுகளின் சொந்த பிரச்சினைகளை சொந்த மொழியில் பேசுபவர்களாக பரிணமிப்பது ஒன்றே சரியான தீர்வாக அமையும்**

ளில் கருக்கொண்டு உருவெடுத்துவரும் புரட்சிகர சக்திகளை அவதானித்து அடையாளப்படுத்தும் ஆற்றல் இல்லாதவர்களாக மார்க்சியர்கள் ஆகிப்போய்விட்டனர், அவ்வகை இயக்கங்கள் தன்னிச்சையாகத் தோன்றி மார்க்சிய ஆதரவு, அரவணைப்பு, பேணுதல், அனுசரணை எதுவுமின்றி அவை தாமாகவே அடுத்தகட்ட நிலைகளை நோக்கி நகர்ந்து விடுகின்றன என்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மூன்றாம் உலக நாடுகளின் இடதுசாரிகள் கறுப்பின மக்களின் பிரச்சினைகளிலிருந்து அந்நியமாகி நின்றனர் என்பதையே மேற்குறித்த வாதங்கள் தெரிவிக்கின்றன.

### தேசிய இனப் பிரச்சினைகள்

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் விடுதலைக்காகப் போராடிய போது சோவியத் சோசலிசம் அந்த நாடுகளின் விடுதலைச் சக்திகளுக்கு ஆதரவாக நின்றது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டை மார்க்சியம் மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கியது என்பது அதன் சாதனையாகும். இருந்த போதிலும், இந்த நாடுகள் விடுதலை பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு, தேசிய இனப் பிரச்சினைகளைக் கையாளுவதில் அந்தந்த நாடுகளின் இடதுசாரிகள் தேங்கிப் போய்விட்டார்கள் என்பதும் உண்மை. பர்மிங்காம் பல்கலைக் கழகப் பேராசிரியர் சச்சிதானந்தன் சுகிர்தராஜா எனது நண்பர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர், மார்க்சியம் இப்போது படைப்பாற்றல் இல்லாத கோட்பாடாகிவிட்டது என்று ஒருமுறை கூறியது இங்கு நினைவுக்கு வருகிறது.

கார்ல் மார்க்சிடம் தேசியம் குறித்து அநேகமாக மூன்றுவிதமான கருத்துகள் உள்ளன. ஒன்று, மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தோற்றம் பெற்ற தேசியம் குறித்தது. பூர்ஷ்வாக்கள் அல்லது முதலாளிகளின் அரசியல் கருத்தியல் அது என்று மார்க்ஸ் குறிப்பிடுவார். இரண்டாவது, போலந்து, அயர்லாந்து போன்ற நாடுகள் பெரிய நாடுகளால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த போது, அந்நாடுகளின் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களை மார்க்ஸ் விடுதலைச் சக்திகளாகப் பார்த்தார். மூன்றாவதாக, இந்தியா, சீனா மற்றும் சில அராபிய நாடுகளின் சமூக அமைப்புகளைப் பற்றி மார்க்ஸ் வாசித்தறிந்தபோது, அவை ஐரோப்பிய சமூக வரலாற்றிலிருந்து வேறுபட்டு அமைவதை அவர் உணர்ந்தார். அந்நாடுகளின் சமூக அமைப்புகளை அவர் ஆசிய உற்பத்தி முறை என்ற சொல்லின் வழியாக அடையாளப்படுத்தினார். அந்நாடுகளில் பல கூட்டுக்குழும வடிவங்கள் வழக்கில் உள்ளன என்பதை மார்க்ஸ் சுட்டிக்காட்டினார். பழஞ்சமூகங்களில் வழக்கில் இருந்துவரும் இவ்வகைக் கூட்டு வடிவங்கள் காலனியம், நவீனம், முதலாளியம் ஆகியவற்றுடன் பொருதி அவற்றுக்குத் தமது எதிர்வினையாக தமது தேசிய அடையாளங்களை உருவாக்கிக் கொள்கின்றன என்பதைக் காண முடிகிறது.

தேசியம் குறித்த மார்க்சின் மூன்று கருத்தாக்கங்களுமே நமக்கு முக்கியமானவை என்ற போதிலும், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க சமூக அமைப்புகளின் தனித்தன்மைகள் சார்ந்த கோட்பாட்டு உருவாக்கமே மார்க்சின் கருத்துகளைப் படைப்பு ரீதியாக முன்னெடுத்துச் செல்வதாக அமைந்திருக்க முடியும். மூன்றாம் உலக நாடுகளுக்கான ஒரு தேசியக் கோட்பாடு இங்கு உருவாக்கப்பட்டிருக்க முடியும், உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அதனை அவர்கள் செய்ய இயலாமல் போனதையே தேக்கநிலை என்று குறிப்பிடுகிறோம். தேசியங்களாக, பழங்குடிகளாக, சாதிகளாகப் பிளவுண்டு கிடக்கும் நமது சொந்த எதார்த்தத்திலிருந்து நமக்கான மார்க்சியத்தை உருவாக்க நாம் தவறியிருக்கிறோம்.

### சாதி அமைப்பு குறித்தான பிரச்சினைகள்

மூன்றாம் உலக நாடுகளில் தெற்கு ஆசியத் துணைக் கண்டத்தின் பிரத்தியேகமான சமூக வடிவம் அதன் சாதி அமைப்பு ஆகும். தனிமனிதன், குடும்பம், சமூகம், அரசியல், பண்பாடு, சமயம், பொதுவாழ்வு, அந்தரங்க வாழ்வு என எல்லாவற்றையும் பீடித்து நிற்கும் அமைப்பு இதுவாகும். இத்தனை வலுவான, வரலாற்று ரீதியாக மிக நீண்ட இருப்பு இதற்கு உள்ளதென நாம் அறிந்திருந்தும் இதனை இன்னும் நாம் வெளிப்படையாக அங்கீகரிப்பது கிடையாது. சாதி அமைப்பு ஊருக்கு ஊர், வட்டாரத்துக்கு வட்டாரம் சில அம்சங்களில் வேறுபட்டு இருந்தபோதும் அது தெற்கு ஆசியாவின் எல்லாப் பகுதிகளிலும் உள்ளது என்பதில் சந்தேகம் கிடையாது.

> தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டை மார்க்சியம் மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கியது என்பது அதன் சாதனையாகும். இருந்த போதிலும் இந்த நாடுகள் விடுதலை பெற்ற பிறகு தேசிய இனப்பிரச்சினைகளைக் கையாள்வதில் அந்தந்த நாடுகளின் இடது சாரிகள் தேங்கிப் போய்விட்டார்கள் என்பதும் உண்மை

நல்லவேளையாக அம்பேத்கர் என்ற ஒருவர் காத்திரமாகச் செயல்பட்டதால், சாதி அமைப்பு குறித்த அக்கறை நம்மிடையில் ஓரளவேனும் தொழில்பட்டு வருகிறது. இந்திய விடுதலை இயக்க வேலைத்திட்டத்தின் பிரிக்கவொண்ணாத ஒரு பகுதியாகச் சாதி ஒழிப்பைச் சேர்க்க வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பியிருக்கலாம். அதுபோலவே, இந்தியப் புரட்சிக்கான வேலைத் திட்டத்தின் பிரிக்கவொண்ணாத ஒரு பகுதியாக அவர் சாதி ஒழிப்பைச் சேர்க்க வேண்டும் என விரும்பியிருக்கலாம். இந்த இரண்டில் ஒன்று நடந்திருந்தால் கூட தெற்கு ஆசியா மிகப்புரட்சிகரமான சமூக மாற்றத்தைச் சாதித்த ஒரு பகுதியாக உலக வரலாற்றில் இடம்பெற்றிருக்கும். ஆனால் அவரது இரண்டு ஆசைகளுமே நிறைவேறவில்லை.

அம்பேத்கர் ஏராளமாக மார்க்சியக் கருத்தாக்கங்களைத் தனது எழுத்துக்களிலும் பேச்சுகளிலும் பயன்படுத்தினார். மார்க்சின் வர்க்கப் போராட்டம் என்ற கருத்தாக்கத்திற்கு அதிகம் பொருந்தக்கூடிய நாடு இந்தியா தான் என்கிறார். செய்யவேண்டியவைகளைச் சரியாகச் செய்தால், ரஷ்யாவைவிட எளிதாக இந்தியாவில் ஒரு புரட்சியை நிகழ்த்திவிட முடியும் என்று எழுதுகிறார். சாதி என்ற சொல்லுக்குப் பதிலாகப் பல இடங்களில் வர்க்கம் என்ற சொல்லையே அவர் பயன்படுத்தியுள்ளார். பண்டைய இந்தியாவில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும் என்ற தலைப்பிட்ட அவரது நூல் ஒன்றில் சாதிக்கு எதிராக பௌத்தம் நடத்திய போராட்டங்களையும் அவற்றை முறியடித்து சாதி அமைப்பு நிறுவப்பட்ட வரலாற்றையும் எடுத்துரைக்கிறது. பொருளாதாரம், சமூகம், சமயம், பண்பாடு ஆகிய பல வட்டாரங்களுக்கிடையில் அம்பேத்கரின் இயங்கியல் சொல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டல்கள் மிக எளிதாக ஒன்றிலிருந்து இன்னொன்றாகத் தாவிச் செல்கின்றன.

இந்தியாவிற்கு அரசு சோசலிசம் என்ற அமைப்பு பொருத்தமாக இருக்கும் என்று அவர் எழுதுகிறார். பொதுத்துறை தொழில்மயமாக்கம், விவசாயத்தில் கூட்டுறவு, வங்கிகள்-இன்சூரன்ஸ் போன்ற நிதி நிறுவனங்கள் அரசுடைமையாக்கம் ஆகியவற்றை அவர் முன்மொழிகிறார். மார்க்சுக்கு இணையாக புத்தரை முன்மொழிந்து அவர் தனது விவாதங்களை முன்னெடுத்துச் செல்கிறார்.

இடதுசாரிகள் இந்தியாவிலும் இலங்கையிலும் சாதிக் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்திருக்கிறார்கள், போராடியிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆயின் இந்தியச் சமூக அமைப்பின் அல்லது தமிழ்ச் சமூக அமைப்பின் அடிப்படை அலகுகள் சாதிகளே என்பதைக் கோட்பாட்டுரீதியாக அவர்கள் ஒப்புக்கொள்வதில்லை. சாதி அமைப்பு குறித்து இடதுசாரிகளுக்கிடையில் ஒரு நீண்ட நெடிய அல்லது ஆழமான விவாதம் எப்போதுமே நடந்ததாகத் தெரியவில்லை. தெற்கு ஆசிய சமூகங்களை எப்படியாவது வர்க்க அணுகுமுறையில் விளக்கிவிட வேண்டும் என்றே அவர்கள் முயற்சித்து வந்துள்ளார்கள். தமது சொந்த சமூகத்தின் உள் அமைப்பை மேற்கு ஐரோப்பிய வரலாற்றில் விளைந்த கருத்தாக்கங்களைக் கொண்டு விளக்க முயற்சிப்பது எப்படி நியாயமாகும்? ஆசிய உற்பத்தி முறை போன்ற கருத்தாக்கங்களைப் பயன்படுத்தி யோசியுங்கள் என்று மார்க்ஸே அடியெடுத்துக் கொடுத்த பிறகும் கூட நம்மவர்கள் இவ்வளவு பிடிவாதமாக இருப்பதை எப்படிப் புரிந்து கொள்ள?

## இடதுசாரிகளும் மதமும்

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் என்பன உலகஅளவில் மிக அடர்த்தியான பண்பாட்டுப் பரப்பைக் கொண்டனவாகும். புராதனப் பழங்குடிப் பண்பாடுகள், நாகரிகங்கள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், மதங்கள் ஆகியன இந்நாடுகளில் விரிந்து கிடக்கின்றன. இவற்றுக்கிடையில் இடதுசாரிகள் பல வேளைகளில் இன்னும் அந்நியர்களாக அல்லது நவீன மனிதர்களாகவே காட்சியளிக்கின்றனர். அதாவது இப்பண்பாடுகளின் சொந்தக்காரர்களாக அவர்கள் இன்னும் காட்சிதரவில்லை, இப்பண்பாடுகளை அவர்கள் இன்னும் சுவீகரித்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் உலகின் எல்லா மதங்களுமே உள்ளன. இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம், இந்து, யூதம், பார்சி என எல்லா மதத்தவர்களையுமே இங்கு சந்திக்க முடியும். இருப்பினும் நிறுவனப்பட்ட இம்மதங்களைப் பின்பற்றுபவர்களை விட கிராமம் சார்ந்த, இயற்கை சார்ந்த நாட்டுப் புற வழிபாட்டாளர்களே இந்நாடுகளில் அதிகமாக இருப்பர். இந்த மக்களிடையில் இடதுசாரிகள் தனிப்பட்ட முறையில் நாத்திகர்களாக அல்லது மதநம்பிக்கைகளோடு தொடர்பற்றவர்களாகவே காட்சி தருகின்றனர். இன்னொரு புறம், மூன்றாம் உலக நாடுகளிலுள்ள இடதுசாரி அரசியல் கட்சிகள் அந்நாடுகளிலுள்ள மதங்கள் குறித்து தமது நிலைப்பாடுகளை வெளிப்பட அறிவித்துக்கொண்டது கிடையாது. இஸ்லாம், இந்துமதம், சீக்கியம், பௌத்தம் ஆகிய மதங்கள் குறித்த மார்க்சிய மதிப்பீடுகளைக் கண்டறிவது அவ்வளவு எளிதல்ல.

> இந்தியாவிலும் இலங்கையிலும் இடதுசாரிகள் சாதிக்கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுத்திருக்கிறார்கள், போராடியிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனாலும் இந்திய சமூக அமைப்பின் அல்லது தமிழ்ச் சமூக அமைப்பின் அடிப்படை அலகுகள் சாதிகளே என்பதை கோட்பாட்டு ரீதியாக அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை. சாதி அமைப்புக்குறித்து இடதுசாரிகளுக்கு இடையில் நீண்ட, நெடிய, ஆழமான விவாதம் எப்போதுமே நடந்ததாகத் தெரியவில்லை

மூன்றாம் உலக நாடுகளில் இப்போதெல்லாம் மதங்கள் நேரடி அரசியலில் ஈடுபடுகின்றன. அரசியல் திரட்சிகளுக்கு மதம் ஓர் அற்புதமான கருவி என்பதை அரசியல்வாதிகள் இப்போது புரிந்து கொண்டுவிட்டனர். இடதுசாரிகளால் இவ்வகை அரசியலுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. சமய நம்பிக்கைகள் கொண்ட மக்களிடையில் நேரடியாக நாத்திகமும் பேசமுடியாமல், சமய அரசியலுக்குள்ளும் நுழைய முடியாமல் இரண்டுங்கெட்டானாக அவர்கள் திணறுகின்றனர். சமய நம்பிக்கைகள் கொண்ட மக்கள் பகுதியினர் இடதுசாரிகளின் கண்களில் மதவெறி கொண்டோராகக் காட்சியளிக்கின்றனர். சமயச் சொல்லாடல்களை ஊடறுத்துச் சென்று அம்மக்களை எட்டிப்பிடிக்கும் வித்தையை அறியாதவர்களாகவே இன்னும் இடதுசாரிகள் உள்ளார்கள்.

அரபு நாடுகளில் தேச விடுதலை இயக்கங்கள் தொழில்பட்டு வந்த காலங்களில் முஸ்லிம்களுக்கிடையில் இடதுசாரி மற்றும் தீவிரவாத இயக்கங்கள் பல உருவாகியிருந்தன. பௌத்த மதத்தினரிடையில் வியட்நாம் போன்ற தென்கிழக்கு நாடுகளில் இடதுசாரிகள் தோன்றியிருந்தனர். பஞ்சாப்பில் சீக்கிய விவசாயிகளுக்கிடையில் கம்யூனிஸ்டுகள் செல்வாக்குப் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். ஆனால் சமய உணர்வு கொண்ட அச்சாதாரண மக்கள் பகுதியினரை இடதுசாரிகளால் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ள முடியாமல் போயிற்று. ஏன்? ஏனெனில், சமயச் சொல்லாடல்களை ஊடறுத்துச் செல்லும் கலையை இடதுசாரிகள் கற்றுக்கொள்ளவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம் என்பதை அபின் என்றும், ஆளும் வர்க்கத்தின் கருத்தியல் என்றும், உலகம் குறித்த தலைகீழ்ச் சித்திரம் என்றும் மார்க்ஸ் சொல்லியிருக்கிறார், உண்மைதான். ஆயின் அதே மார்க்ஸ், மதம் என்பது இதயமில்லாத உலகின் இதயம் என்றும் கூறியிருக்கிறார்; சமயத் துயரம் என்பது எதார்த்த துயரத்தின் வெளிப்பாடு, அதற்கு எதிரான விமர்சனமும் கூட என்றும் சொல்லியிருக்கிறார். இம்மாதிரியான சொற்கள் மூன்றாம் உலகின் பழஞ்சமூகங்களுக்கு அதிகப் பொருத்தம் உடையவை. ஐரோப்பிய நவீன யுகத்தின் ஆக்கிரமிப்புகளை எதிர்கொள்ளவும் அதன் பண்பாட்டுப் படையெடுப்புகளுக்கு எதிராக மக்களைத் திரட்டவும் மூன்றாம் உலக நாடுகளின் மதங்கள் உதவத்தான் செய்கின்றன. இடதுசாரிகள், மதவாதிகளாகவோ பழமை வாதிகளாகவோ மாறிப்போய்விடாமல் அதேவேளையில் மத இயக்கங்களின் போராட்ட அனுபவங்களை மதிக்கத் தெரிந்துகொள்ளவேண்டும். அடித்தள மக்களின் வாழ்வியல் நம்பிக்கைகளின் கடைசிப் புகலிடமாக விளங்கும் ஆற்றல் மதங்களு க்கு உள்ளது. கூட்டுணர்வுப் பண்பு தொழில்படும் ஒரு பழைய வடிவமாக மதம் உள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் மதங்கள் குறித்த விவாதங்கள் நமக்குப் போதாது.

### பின்னைக் காலனியச் சூழல்

மூன்றாம் உலக நாடுகளின் இன்றைய நிலை பின்னைக் காலனியம் என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. இந்நாடுகளில் பெரும்பாலானவை சென்ற நூற்றாண்டின் ஐம்பதாம் ஆண்டுகளில் விடுதலை பெற்றன என்று முன்பு குறிப்பிட்டோம். இந்நாடுகளின் ஐரோப்பிய எஜமானர்கள் அப்போது வெளியேறினார்கள். ஆயின் 200-300 ஆண்டுகால காலனிய ஆட்சி ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் பண்பாட்டில், வாழ்க்கை முறையில் ஏராளமான புது விடயங்களை அறிமுகப்படுத்தியது. ஆட்சியாளர்கள் வெளியேறிய பிறகும் அவர்கள் அப்போது ஏற்படுத்திய மனோபாவங்கள் வெளியேறிவிடவில்லை. மிகக் குறிப்பாக, மூன்றாம் உலக மக்களிடையில் ஐரோப்பியர்கள் ஏற்படுத்திய தாழ்வு மனப்பான்மை, தமது சொந்தப் பண்பாட்டைப் பற்றி இவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட இழிவுணர்ச்சி ஆகியவை இன்னும் அகலவில்லை. ஆக, காலனிய ஆட்சிக்காலத்தில் நம்மில் செயற்கையாகப் புகுத்தப்பட்ட கற்பிதங்களை மறுபரிசீலனை செய்யுமாறு பின்னைக் காலனியச் சிந்தனை கோருகிறது.

1976இல் எட்வர்ட் சையது என்ற பாலஸ்தீனச் சிந்தனையாளர் கீழைத்தேயவியல் (Orientalism) என்றொரு நூல் எழுதினார். மேற்கு நாடுகளின் கல்விப் புலங்களில், அறிவாளிகளின் உலகில் கீழைநாடுகளின் நாகரிகங்கள் குறித்து உருவாக்கப்பட்ட கற்பிதங்களை இந்நூல் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாக்கியது. காலனிய அதிகாரமும் ஐரோப்பிய உயர்வு மனப்பான்மையும் கீழைத்தேய அறிவு என்ற பெயரில் அவர்களால் பரப்பிவிடப்பட்டன என்று எட்வர்ட் சையது எழுதினார். ஐரோப்பியர்களால் உருவாக்கப்பட்ட இத்தகைய கீழைத்தேய அறிவு, கீழைநாடுகளில் முளைத்தெழுந்த புதிய மேட்டுக்குடியினராலும் அறிவுத்துறையினராலும் உள்வாங்கப்பட்டன என்ற விடயத்தையும்

**மூன்றாம் உலக நாடுகளில் இப்போதெல்லாம் மதங்கள் நேரடி அரசியலில் ஈடுபடுகின்றன. அரசியல் திரட்சிகளுக்கு மதம் அற்புதமான கருவி என்பதை அரசியல்வாதிகள் இப்போது புரிந்து கொண்டு விட்டனர். இடதுசாரிகளால் இவ்வகை அரசியலுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. சமய நம்பிக்கை கொண்ட மக்களிடையில் நேரடியாக நாத்திகமும் பேச முடியாமல் சமய அரசியலுக்குள்ளும் நுழைய முடியாமல் அவர்கள் திணறுகின்றனர்**

சையது தனது நூலில் விரிவாகப் பேசியிருந்தார். ஐரோப்பிய நாடுகள் உலகின் பின்தங்கிய நாடுகள் அனைத்தையும், குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளை, நாகரிகப்படுத்தி வருகிறது என்ற மிகப்பெரிய கற்பிதத்தை எட்வர்ட் சையது தீவிர விமர்சனத்திற்கு உள்ளாக்கினார். நேரடியான காலனிய ஆட்சி அகற்றப்பட்ட பிறகும் ஐரோப்பிய நாகரிகத்தைக் கொண்டாடும் மனோபாவம் ஒன்றினுள் மூன்றாம் உலக நாடுகளின் மக்கள் வாழ்ந்துவருவதை அவர் சுட்டிக்காட்டுகிறார். பண்பாட்டு வாழ்வில் காலனிய நீக்கம் (Decolonizing) தேவைப்படுகிறது என்பதைப் பின்னைக் காலனியம் குறித்து நிற்கிறது.

70-80ஆம் ஆண்டுகளில் கொல்கொத்தா, டில்லி ஆகிய நகரங்களை மையமாகக் கொண்டு ரணஜித் குகா தலைமையில் ஓர் இளம் அறிஞர் குழு உருவானது. அடித்தள மக்கள் வரலாறு (Subaltern History) என்ற ஒரு சிந்தனைப் போக்கை இவர்கள் உருவாக்கினார்கள். மூன்றாம் உலக நாடுகளின் வரலாறுகளை எழுதுவதில் காலனிய (ஐரோப்பிய) அறிஞர்கள், அந்தந்த நாடுகளைச் சேர்ந்த தேசியவாத அறிஞர்கள் என்ற இரண்டு அணியினர் முனைப்புடன் ஈடுபட்டு வருவதாக இவர்கள் சுட்டிக்காட்டினர். காலனிய அறிஞர்களின் அணுகுமுறை காலனிய ஆட்சியைக் கொண்டாடும் பண்பு கொண்டதாக உள்ளது. இன்னொருபுறம், தேசியவாதிகளின் அணுகுமுறை காலனியவாதிகளுக்கு எதிரானது போன்ற தோற்றத்தைக் கொண்டிருந்தபோதும் உண்மையில் உள்நாட்டு மேட்டுக்குடிகளின் பார்வையினைக் கொண்டிருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஐரோப்பியக் காலனியவாதிகளுக்கு எந்தவிதத்திலும் குறைவுபடாத உள்நாட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனியக் குணாம்சம் கொண்டவர்களாக இவர்கள் உள்ளனர். இவர்களது தேசியவாதமே ஐரோப்பியச் சூழல்களிலிருந்து வருவிக்கப்பட்ட ஒன்றாக (Derivative Nationalism) உள்ளது, சொந்த மக்களின் பண்பாடுகளில் அது வேர் கொள்ளவில்லை என்று அடித்தளமக்கள் வரலாற்றாசிரியர்கள் எடுத்துக்காட்டினர். தமிழர், சிங்களவர், பௌத்தர், இந்து, இந்தியர் என்ற சொற்களைச் சுற்றிக்கட்டி எழுப்பப்படும் தேசியவாதங்களை அடித்தளமக்களின் வரலாற்றாசிரியர்கள் மிகத்தீவிரமான சந்தேகங்களுக்கு உட்படுத்தினார்கள். மூன்றாம் உலக நாடுகளில் ஏராளமாகச் சுற்றித்திரியும் இதுபோன்ற தேசியவாதங்களால் இன்னும் தீண்டப்படாதவையாகவே அந்நாடுகளின் அடித்தள மக்களின் தன்னுணர்வுகள் (Autonomous Subaltern Consciousness) சுயாதீனமாக நிலவுகின்றன என்று அவர்கள் எழுதினார்கள்.

முடிவாக,

மூன்றாம் உலக நாடுகளில் கடந்த 50-60 வருடங்களில் ஏராளமான புதிய விடயங்கள் பேசப்பட்டுள்ளன. அப்புதிய விடயங்கள் பெரும்பாலும் அந்நாடுகளின் சொந்தப் பிரச்சினைகள், உள்ளுக்குள்ளிருந்தே எழுந்து வருபவை. மிக நீண்ட கால அந்நாடுகளின் பழம் வரலாற்று அடுக்குகளோடு அவை தொடர்பு கொண்டனவாகவும் உள்ளன. எடுகோள்களாக இல்லாமல் மிக இயல்பாக அம்மக்களின் தன்னுணர்வுகளில் கலந்தனவாக அவை உள்ளன. இந்த விவாதங்களில் இடதுசாரிகள் கலந்து உறவாடாமல் தனித்துப் போயிருப்பதே அவர்களின் தேக்கத்தைத் துலக்கமாக எடுத்துக்காட்டுகிறது எனக் கருதுகிறேன். பல விவாதங்கள் இடதுசாரிகளின் பங்கேற்பின்றி அவர்களைக் கடந்து சென்றுவிடுகின்றன. இவ்விவாதங்கள் எல்லாமே ஐரோப்பிய மையத்தை விட்டு விலக முயற்சிப்பதைக் குறிப்பாகக் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்நிலையில் மூன்றாம் உலக நாடுகளின் இடதுசாரிகள் புதிய இடதுசாரிகளாக, தமது நாடுகளின் சொந்தப் பிரச்சினைகளைச் சொந்த மொழியில் பேசுபவர்களாகப் பரிணமிப்பது ஒன்றே சரியான தீர்வாக அமையும். ■

***(முத்துமோகன் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் மெய்யியல் துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்)***

---

***(33ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

மாகாண சபை உறுப்பினர்களில், 33 பேர் அந்தக் கடிதத்தை ஆமோதித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அந்த 33 பேரில், கிழக்கு மாகாணத்தில் இருந்து 11 கூட்டமைப்பு உறுப்பினர்களில் ஐந்து பேர் மட்டுமே அந்தக் கோரிக்கையை ஆதரித்துள்ளனர். கையெழுத்துப் போட்ட மீதமுள்ள 28 பேரும் வட மாகாணத்தைச் சேர்ந்த கூட்டமைப்பு உறுப்பினர்கள். அதாவது, வட மாகாண சபையில் உள்ள 30 கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர்களில், 28 பேர் இத்தகைய முடிவிற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றே பொருள். முதலமைச்சர் விக்னேஸ்வரனும், மாகாண சபைத் தலைவர் சி.வி.கே சிவஞானமும் மட்டுமே விடுபட்டுப் போன மாகாண சபை உறுப்பினர்கள். அவர்களில் நால்வர் மாகாண சபையில் அமைச்சர்களும் கூட.

இதில் இருந்து தெரிவது என்ன? ஒன்று, உள்நாட்டில் வீணாக அரசியல் மற்றும் அரசியல்சாசனம் தொடர்பான பிரச்சினைகளில் விழுந்து விட நினைக்காத கூட்டமைப்புத் தலைமை, அத்தகைய தீர்மானம் மாகாண சபையில் முன்வைக்கப்படுவதற்கான முயற்சியை இல்லாமல் செய்வதில் வெற்றியும் பெற்றுள்ளது. அதே சமயம், அதுவே வரிவடிவமாக ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் கவனத்திற்குச் செல்வது தடுக்கப்படவில்லை. அல்லது, அந்த முயற்சியைத் தடுக்க முடியவில்லை.

இந்த இரண்டில், கூட்டமைப்புத் தலைமையின் நிலைப்பாடு எதுவாக இருந்தாலும், அதன் பின்விளைவுகள் நன்மை தரும் விடயமல்ல. அதிலும், கட்சித் தலைமையின் அறிவுறுத்தலுக்கும் அப்பால் சென்று, குறிப்பாக வட மாகாண சபை உறுப்பினர்கள் 28 பேர் அத்தகைய கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள் என்றால், அது முதல்வருக்கும், கூட்டமைப்புத் தலைமைக்கும் விடப்பட்ட சவால் என்றே கூற வேண்டும்.

தற்போதைய புதுடில்லி விஜயத்தின் போதும் சரி, அதற்கு முன்னரும் சரி, 'ஐக்கிய இலங்கை' நாட்டிற்குள் அரசியல் தீர்வு என்ற நிலைப்பாட்டையே கூட்டமைப்புத் தலைமை தொடர்ந்து எடுத்து வந்துள்ளது. ஆனால், புதிய கோரிக்கையின் பின்னால் உள்ள கூட்டமைப்பின் சில இரண்டாம் கட்டத் தலைவர்கள், 'தனிநாடு' கோரிக்கையை முழுமையாகக் கைவிட்டுவிடவில்லை என்பதே உண்மை. அவர்களின் கோரிக்கையின் உண்மையான ஆழத்தை அளந்து நோக்காமலே இந்த 28 பேரும் அதற்கு ஆதரவு தெரிவித்திருக்க முடியாது.

அவ்வாறானால், அதிகம் படித்தவர்கள் உள்ள வடக்கு மாகாண சபை, கூட்டமைப்பு உறுப்பினர்களின் அதிகப்படியானோரின் சித்தமும் சிந்தனையும் தான் என்ன? அவ்வாறானால், எதிர்வரும் காலங்களில், இலங்கை அரசோ அல்லது இந்திய அரசோ ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தால், அந்தத் திட்டத்தை தமிழ்ச் சமூகத்தினரிடையே கொண்டு சென்று அதற்கான ஆதரவைப் பெறுவதில், கூட்டமைப்புத் தலைமை எவ்வளவு தூரம் வெற்றி பெறும்? அது குறித்த சந்தேகங்கள் இப்போதே இரு அரசுகளின் மனதிலும் விதைக்கப்படுமேயானால், அதனால் கூட்டமைப்புத் தலைமையோ, அல்லது அவர்களது மிதவாத கொள்கைக்கு எதிர்மறை அரசியல் செய்யும் தமிழ் அடிப்படைவாதிகளோ, அப்பாவித் தமிழ் மக்களுக்கு பெற்றுத் தரப் போகும் அரசியல் தீர்வு தான் என்ன? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### தமிழக அரசியலில் அதிர்வு அலைகளை ஏற்படுத்தும்

# செப்டெம்பர் 20

## வருமா அதிரடி மாற்றம்?

ஆடிப்பட்டம் தேடி விதை என்று விவசாயிகள் மத்தியில் ஒரு பழமொழி சொல்வார்கள். ஆனால் இப்போது அரசியல்வாதிகள் மத்தியில் ஆவணி மாத அதிர்ச்சி தேடி வருகிறது. தமிழக அரசியலை மையம் கொள்ளும் ஆவணிப் புயல் எந்தத் திசையில் வீசப் போகிறது என்பதை தமிழக அரசியல் தலைவர்கள் பரபரப்புடனும், உன்னிப்புடனும் உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆவணியின் ஆங்கில மாதம் செப்டெம்பர். அந்த மாதம் 20ஆம் திகதி 17 வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயல



## சென்னை மெயில்



முத்தையா காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்குத் தீர்ப்பு வெளிவருகிறது. அதற்கு முன்பாகவே செப்டெம்பர் 3-ஆம் திகதி மீண்டும் டெசோ ஆர்ப்பாட்டம் தொடங்கியது தி.மு.க.விற்கும், மத்திய அரசுக்கும் உள்ள நிர்வாக ரீதியான தொடர்பு முற்றிலும் அகன்றுவிட்ட சூழ்நிலையில் நடந்த டெசோ ஆர்ப்பாட்டம் ஈழத்தமிழர் பிரச்சினையில் தி.மு.க. தனது புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் காலமாக மாறுகிறது. இதுவரை பிரமாண்டமான மகாநாடுகளைப் போட்டு அண்ணா பிறந்த நாள் விழாவை அதாவது திராவிட இயக்கங்களின் முப்பெரும் விழாவைக் கொண்டாடிய வைகோ, இந்தமுறை வெறும் பொதுக்கூட்டமாக நடத்துகிறார். அந்த நிகழ்ச்சி செப்டெம்பர் 15ஆம் திகதி திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறுகிறது. செப்டெம்பர் மாத நிகழ்ச்சிகள் பல இப்படி களைகட்டியிருந்தாலும், தமிழக அரசியல்வாதிகள் மட்டுமின்றி தமிழக மக்கள் மற்றும் இந்திய அளவிலேயே உள்ள அனைவரின் கவனத்தையும் கவர்ந்திருப்பது முதல்வர் ஜெயலலிதா மீது போடப்பட்டுள்ள சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்புத்தான்.

முதல்வர் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய நான்கு பேரும் 66 கோடி ரூபாய்க்கு சொத்துக் குவித்ததாக 18.9.1996 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதுவும் செப்டெம்பர் மாதம் தான். அந்த வழக்கு இப்போது தீர்ப்புக்கு வந்திருக்கிறது. இடையில் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் சார்பிலும், வழக்கைத் தொடுத்தவர்கள் சார்பிலும் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் என்று பல்வேறு மனுக்கள் போடப்பட்டு, இறுதியில் இந்த வழக்கு விசாரணை ஆகஸ்ட் 28ஆம் திகதி முடிவுக்கு வந்தது. தீர்ப்புத் திகதியை அறிவித்துள்ளார் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் குன்ஹா. இதற்கிடையில் பிரதான வழக்கில் உள்ள கூட்டுச் சதி (Criminal conspiracy) குற்றச்சாட்டிற்கு இலஞ்ச ஒழிப்புத்துறை போதிய ஆதாரங்களைக் கொடுக்கவில்லை. அதனால் அதை ரத்துச் செய்யுங்கள் என்று சிறப்பு நீதிமன்றத்தின் முன்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அதன் மீதான தீர்ப்பு பிரதான வழக்குடன் சேர்த்து வழங்கப்படும் என்று நீதிபதி அறிவித்துவிட்டார். அதையும் எதிர்த்து கர்நாடக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார் முதலமைச்சர் ஜெயலலிதா. ஆனால் வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க மறுத்த கர்நாடக உயர்நீதிமன்றம், அதன் மீதான மேல் விசாரணையை செப்டெம்பர் 2ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டது. இது போன்ற சூழ்நிலையில் இப்போது வருகின்ற 20ஆம் திகதி தீர்ப்பு என்று விசாரணை நீதிமன்ற நீதிபதி அறிவித்துள்ளார். ஆகவே கர்நாடக உயர்நீதிமன்றம் முதல்வர் ஜெயலலிதா அளித்துள்ள மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதும் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. எது எப்படியோ 20 ஆம் திகதி தீர்ப்பு என்பது தமிழக அரசியலில் அதிர்வு அலைகளை ஏற்படுத்தி வருகிறது.

சட்டமன்றத்தில், உள்ளாட்சித் தேர்தலில், இப்போது நாடாளுமன்றத் தேர்தலில் என்று அடுத்தடுத்து பிரமாண்டமான வெற்றியைப் பெற்று உயர்ந்து நிற்கிறது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். ஏறக்குறைய 16 வருடங்களுக்குப் பிறகு அகில இந்திய அளவில் மூன்றாவது பெரிய கட்சியாகத் திகழும் அ.தி.மு.க.விற்கு இந்திய நாடாளுமன்றத்தில் துணை சபாநாயகர் பதவி கிடைத்திருக்கிறது. அக்கட்சியின் சார்பில் டாக்டர் மு.தம்பித்துரை துணை சபாநாயகராகியிருக்கிறார். காங்கிரஸ் துணை சபாநாயகர் பதவியை வாங்க மறுத்ததால், அ.தி.மு.க.விற்கு இப்பதவி கிடைத்திருக்கிறது என்றாலும், இந்த ஏற்பாடு மத்திய அரசுக்கும், அ.தி.மு.க.விற்கும் உள்ள நெருக்கத்தை படம்பிடித்துக் காட்டுகிறது. நீதிபதிகள் நியமனம் தொடர்பான ஜூடிஷியல் அப்பாயின்மென்ட் கமிஷன் மசோதா விடயத்தில் நாடாளுமன்றத்தில் வாக்களிக்காமல் வாக்கெடுப்பைப் புறக்கணித்த அ.தி.மு.க., ராஜ்ய சபையில் அந்த மசோதாவிற்கு ஆதரவாக வாக்களித்தது. மேடம் ஜெயலலிதா ஜீக்கு நன்றி என்று நாடாளுமன்றத்திலேயே இந்திய சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் பிரகடனப்படுத்தியிருக்கிறார். பிரதமர் பதவி என்ற விடயத்தில் பிரதமர் மோடிக்கும், அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவிற்கும் போட்டி

> ஜெயலலிதா மீது சொத்துக் குவிப்பு வழக்கில் எப்.ஐ.ஆர் போட்டது: 18.9.1996
>
> பிறகு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பால் முதலமைச்சர் பதவி விலகியது: 21.9.2001
>
> ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை சென்னையிலிருந்து பெங்களூருக்கு மாற்றப்பட்டது: 10.9.2004
>
> பிறகு வழக்கு விசாரணை நடைபெற்ற போது, ஜெயலலிதா வேண்டுகோளை ஏற்காமல் சிறப்பு நீதிமன்ற நீதிபதி பால கிருஷ்ணா பதவி விலகியது: 30.9.2013
>
> இப்போது இறுதியில் சொத்துக் குவிப்பு வழக்குத் தீர்ப்பு என்று அறிவிக்கப்பட்டுள்ள திகதி: 20.9.2014.

இருந்தாலும், அ.தி.மு.க.விற்கும், பா.ஜ.க.விற்கும் நெருங்கிய உறவு இருப்பது போன்ற தோற்றத்தை அ.தி.மு.க.வில் சிலரும், பா.ஜ.க.வில் மோடி தவிர்த்த மற்றவர்களும் உருவாக்கி வருகிறார்கள் என்பதுதான் மிக எதார்த்தமான நிலைமை. அதன் இன்னொரு அம்சம்தான் பெங்களூரில் சொத்துக் குவிப்பு வழக்கின் மீது செப்டெம்பர் 20ஆம் திகதி தீர்ப்பு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், இந்திய சட்ட அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் வேறு ஒரு நிகழ்ச்சியில் சென்னையில் கலந்து கொண்டார். அப்படியே முதல்வர் ஜெயலலிதாவையும் சந்தித்து 40 நிமிடத்திற்கும் மேல் பேசிக் கொண்டிருந்தார்.

பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கு தீர்ப்புத் திகதி வெளிவந்த நேரத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்புப் பற்றி தி.மு.க. தலைவர் கருணாநிதியிடம் செய்தியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகமாக கேள்வி எழுப்பிய போது, மோடி தலைமையில் பணியாற்றுகின்ற சட்ட அமைச்சர் எந்த விதமான இழுக்கும் மத்திய அரசுக்கு ஏற்படாமல் நடந்து கொள்வார் என்று நான் நம்புகிறேன் என்று கருத்துக் கூறியிருக்கிறார். ஆனால் கலைஞர் கருணாநிதியின் அந்த பதில் வெளிவந்த தி.மு.க.வின் அதிகாரபூர்வ நாளிதழான முரசொலியின் இரண்டாவது பக்கத்தில் செப்டெம்பர் 20 சொத்துக் குவிப்பு வழக்கில் தீர்ப்பு என்று அரைப்பக்கச் செய்தியை வெளியிட்டுள்ளார்கள். அந்தச் செய்திக்குள்ளேயே ஒரு பெட்டிச் செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். அதில், ஜெயலலிதாவின் முன்னாள் வழக்கறிஞர் மத்திய அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் ஜெயலலிதாவுடன் சந்திப்பு. பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசியதாகவும், சந்திப்பு பலனுள்ளதாக இருந்ததாகவும் பேட்டி என்று அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்கள். இதைத்தான் தமிழகத்தில் குசும்பு என்று கூறுவார்கள். அதாவது நேரடியாகச் சொல்ல விரும்பாத கருத்தை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவது. இந்தச் செய்தியின் சுருக்கம், சட்ட அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்தது தி.மு.க.விற்கு பிடிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

இந்த வழக்கின் தீர்ப்பு எப்படியிருக்கப் போகிறது என்பது பற்றி ஒவ்வொரு பக்கத்திலும் விவாதங்கள் தொடங்கி விட்டன. அ.தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் ஆட்சியிலிருக்கும் கட்சி. ஆகவே எம்.எல்.ஏ.க்கள் அனைவருமே முதல்வரின் விசுவாசிகள். சசிகலாவும் அவரது உறவினர்களும் கட்சிக்குள் ஓரங்கட்டப்பட்டு விட்டார்கள். இது போன்ற சூழ்நிலையில் ஆகஸ்ட் 29ஆம் திகதியன்று அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளராக ஜெயலலிதா போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார். இதன் மூலம் தீர்ப்பு எப்படி வந்தாலும், அ.தி.மு.க. ஜெயலலிதாவின் தலைமையின் கீழ் அசைக்க முடியாத கோட்டையாக இருக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. கட்சிக்குத் தலைவர் அவர்தான். அதில் எந்தச் சந்தேகமும் வரப்போவதில்லை. யாரும் போட்டிக்கும் வரப் போவதில்லை.

ஆனால் ஆட்சிக்குத் தலைவர் யார் என்பதில்தான் கேள்வி எழும். ஏனென்றால் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 8(1)ன் கீழ் இலஞ்ச ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு விட்டது. இந்தப் பிரிவின் அடிப்படையில் இலஞ்ச ஊழல் வழக்கில் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு, வெறும் அபராதம் விதிக்கப்பட்டால் கூட போதும். தீர்ப்பு வெளிவந்த திகதியிலிருந்து ஆறு வருடம் தேர்தலில் போட்டியிட முடியாது. இலஞ்ச ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை இல்லாவிட்டாலும் தேர்தலில் நிற்க முடியாது என்பதுதான் 2002ஆம் வருடம் பிரதமராக வாஜ்பாய் இருந்த போது கொண்டு வந்த மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட திருத்தத்தின் முக்கிய நோக்கம். அதனால் இந்த வழக்கு நிரூபணமானது என்று தீர்ப்பு வருமேயானால், ஜெயலலிதா முதலமைச்சர் பதவியில் தொடருவதில் சிக்கல் ஏற்படும். ஏனென்றால் ஏற்கனவே ஜெயலலிதாவின் வழக்கிலேயே தேர்தலில் போட்டியிடத் தகுதியில்லாதவரை முதல்வராக நியமிக்கக்கூடாது என்று கூறி 2001ஆம் வருடம் ஜெயலலிதாவின் முதல்வர் நியமனத்தை இதே இந்திய உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன பெஞ்ச் ரத்துச் செய்துள்ளது. அதுபோன்ற சூழ்நிலையில், வேறு ஒரு முதல்வர் நியமிக்கப்படுவாரா அல்லது நாடாளுமன்ற வெற்றியுடன், வழக்கு விவகாரத்தில் கிடைக்கும் அனுதாபத்தையும் வைத்து சட்டமன்றத் தேர்தலை முன்கூட்டியே அ.தி.மு.க. சந்திக்குமா என்பதெல்லாம் செப்டெம்பர் 20ஆம் திகதி வரப்போகின்ற தீர்ப்பைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இன்றைய திகதியில் சட்டமன்றத் தேர்தலை உடனே சந்திக்கும் திறன் அ.தி.மு.க.வைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சிக்கும் தமிழகத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அம்மா இந்த வழக்கிலிருந்து விடுதலை ஆவார் என்று அ.தி.மு.க.வினர் கூறுவது போல் நடந்தால், ஆட்சியும், கட்சியும் சாட்சாத் முதல்வர் ஜெயலலிதா கையிலேயே பத்திரமாக இருக்கும்.

## தூசு தட்டி தி.மு.க. எடுக்கும் டெசோ!



அ.தி.மு.க.வின் நிலை இப்படியென்றால் தி.மு.க.விற்கு இருக்கின்ற ஒரே நம்பிக்கை பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கு. இந்த வழக்கின் தீர்ப்பு ஜெயலலிதாவிற்கு எதிராகப் போனால் மட்டுமே தங்களுக்கு அரசியல் எதிர்காலம் என்று அக்கட்சி கருதுகிறது. அதற்காகவோ என்னவோ இப்போதே மாநிலம் முழுவதும் மாவட்ட வாரியாக கட்சித் தொண்டர்களின் கருத்துக் கேட்பு நிகழ்ச்சியை நடத்தி வருகிறார் தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின். அதே நேரத்தில் காங்கிரஸுடன் தி.மு.க. இருந்த நேரத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையை மையப்படுத்தி எப்படி தி.மு.க.வின் இமேஜை அ.தி.மு.க.வும், மற்றக் கட்சிகளும் சீர்குலைத்தனவோ அதே மாதிரியான ஆயுதத்தை இப்போது தி.மு.க. தலைவர் கருணாநிதியும் கையில் எடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் டெசோ. ஆகஸ்ட் 26ஆம் திகதி டெசோவின் அவசரக் கூட்டம் ஒன்றை நடத்தி அதில் நான்கு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார். ஈழத்தமிழர்கள் விரும்பும் தீர்வு கனிந்து வர மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கையிடமிருந்து மீட்க மத்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும். ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் ஐ.நா. வின் மனித உரிமைகள் விசாரணைக்குழுவை இலங்கைக்குள் நுழைய விட மறுக்கும் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு வருகின்ற 25.9.2014 அன்று ஐ.நா. சபையில் பேசும் உரிமையை மறுக்க வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய விசாரணை அதிகாரிகள் இந்தியாவிற்குள் வர விசா வழங்க வேண்டும்- இந்த நான்கு தீர்மானங்கள்தான் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், இத்தீர்மானங்களை வலியுறுத்தி செப்டெம்பர் 3ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தியது தி.மு.க. இலங்கையிலிருந்து இந்தியா வந்து பிரதமர் நரேந்திரமோடியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்து விட்டுப் போனது பற்றி தமிழக முதல்வர் ஜெயலலிதா எந்தக் கருத்தும் சொல்லாமல் இருக்கிறார். அதைப் பயன்படுத்திக் கொண்டுள்ள தி.மு.க. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுடனான பேச்சுவார்த்தையையும், பிரதமர் நரேந்திர மோடி எடுக்கும் முயற்சிகளையும் பாராட்டியிருக்கிறது.

பா.ஜ.க.வுடன் நட்பாக இருப்பதாலேயே ஜெயலலிதா ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி ஆர்வம் காட்ட மறுக்கிறார் என்ற தோற்றத்தை உருவாக்க தி.மு.க. முயற்சிக்கிறது. அது மட்டுமின்றி, தமிழகத்தில் பிற கட்சிகளைக்காட்டிலும் (ம.தி.மு.க., பா.ம.க., தே.மு.தி.க.) தி.மு.க.தான் எப்போதும் ஈழத்தமிழர் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கிறது என்பதையும் வலியுறுத்த விரும்புகிறது தி.மு.க. தலைமை என்பது நடந்த டெசோ ஆர்ப்பாட்டமும், நடத்தப்பட்டுள்ள டெசோ அவசரக் கூட்டமும் அச்சுப்பிசகாமல் அரங்கேற்றியிருக்கிறது.

ஏர்செல்-மேக்ஸி விவகாரத்தில் தங்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யக்கூடாது என்று தயாநிதி மாறன் உச்சநீதிமன்றத்தில் 28ஆம் திகதி தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதுபற்றி கலைஞர் கருணாநிதியிடம் கேள்வி கேட்ட போது, நீங்கள் சொல்லித்தான் இந்தச் செய்தியே எனக்குத் தெரியும். இதில் கருத்துக் கூற விரும்பவில்லை என்று சொல்லிவிட்டார். அதாவது தயாநிதிமாறனின் பிரச்சினைகளுக்கும் தி.மு.க.விற்கும் சம்பந்தமில்லை என்பதை இதைவிட திட்டவட்டமாக வேறு வடிவில் அறிவிக்க முடியாது. தயாநிதிமாறன் மற்றும் கலாநிதி மாறன் ஆகியோருக்கு எதிராக நடக்கும் சி.பி.ஐ. விசாரணை, அவர்களின் கேபிள் டெலிவிஷனுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமம் ரத்து போன்ற நடவடிக்கைகளை மத்திய அரசு துரிதப்படுத்தினாலும், அதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்பது போல், தங்களுடைய கட்சி அரசியலை மட்டும் தி.மு.க. ஜரூராகச் செய்து வருகிறது.

## பொதுக்கூட்டமாக மாறிய ம.தி.மு.க. மகாநாடு!

மூன்றாவதாக வைகோ. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ஏன் சேர்ந்தோம் என்ற மனக்கவலையில் இருக்கிறார் வைகோ. அது மட்டுமன்றி, ம.தி.மு.க.வில் உள்ள அனைவருமே தொடர்ந்து 21 வருடங்களாக கட்சிக்காக



உழைத்து ஓடாய் தேய்ந்து விட்டார்கள். எப்போதுமே மகாநாடு, கூட்டம், போராட்டம் என்று மட்டும் நடத்திக் கொண்டிருக்கும் அக்கட்சி தேர்தல் நேரத்தில் பெரும்பாலும் தவறான யுக்திகளையே கடைப்பிடிக்கிறது. ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் போல் பா.ஜ.க. இருக்காது என்ற நம்பிக்கையில் அக்கட்சியுடன் நாடாளுமன்றத் தேர்தலில் கை கோர்த்தார் வைகோ. ஆனால் பிரதமர் மோடி தன் பதவியேற்பு விழாவிற்கே ஜனாதிபதி ராஜபக்ஷவை அழைத்தது பேரதிர்ச்சியாக அமைந்தது.

அதன் பிறகு இலங்கை பிரச்சினையில் பா.ஜ.க.வின் அணுகுமுறை, டாக்டர் சுப்ரமணியம்சுவாமிக்கு அக்கட்சியில் இந்தப் பிரச்சினை பற்றிப் பேச அளித்திருக்கும் கருத்துச் சுதந்திரம் எல்லாம் வைகோவிற்கு கலக்கத்தை ஏற்படுத்திவிட்டது. அதனால் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுடன் நெருங்கிச் சென்று தன் கட்சித் தொண்டர்களை உற்சாகமாக வைத்துக்கொள்ள முடியாத இக்கட்டான சூழலில் இருக்கிறார் வைகோ.

இதன் வெளிப்பாடுதான் இந்த முறை அண்ணா பிறந்த நாளை செப்டெம்பர் 15 அன்று மாபெரும் மகாநாடாக நடத்தாமல் (மகாநாடு என்றால் கருத்தரங்கு இருக்கும். பல கருத்துச் சொற்பொழிவுகள் நடக்கும். இறுதியில் பொதுக்கூட்டம் நடைபெறும்), வெறும் பொதுக்கூட்டமாக நடத்துகிறார். அவரைப் பொறுத்தமட்டில் அடுத்த கட்சியை எப்படி வளர்ப்பது? திடீரென்று தேர்தல் வந்தாலோ, அல்லது முறைப்படி 2016இல் சட்டமன்றத் தேர்தல் வந்தாலோ யாருடன் கூட்டணி வைப்பது போன்ற சிக்கலான கேள்விகளுக்கு பதில் காண முடியாமல் இருக்கிறார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய கிழக்கு நெருக்கடி

# சமாதானத்துக்கு அஞ்சும் ஹமாஸ் இயக்கமும் இஸ்ரேலியத் தலைவர்களும்



இஸ்ரேலிய பிரதமர்
பென்ஜமின் நெதான்யாஹூ

இஸ்ரேல், பாலஸ்தீனம் இரண்டும் தார்மிக ரீதியில் ஓர் படுகுழிக்குள் வீழ்ந்துவிட்டன. இதற்குள் இருந்து மீண்டெழுவது இவற்றுக்கு இயலாத விடயமாகப் போய்விட்டது. அவை சமாதானத்தைக் காண்பதற்கும் அது வந்துவிடுமோ என்றும் அஞ்சுகின்றன. இவை சமாதானத்தை ஒரு ஆபத்தாகப் பார்க்கின்றன.

'ஆபத்து' என்ற சொல்லை நான் அழுத்திக் கூறுகிறேன். மத்திய கிழக்கின் தலைவர்களுக்கு 'சமாதானம்' என்றால் 'ஆபத்து' என்ற மனநிலையே ஏற்பட்டுள்ளது. இந்நிலை இன்று நேற்றல்ல; நீண்டநாட்களாகவே இருந்து வந்துள்ளது.

1990 களின் முற்பகுதியில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசிர் அரபாத்தும் இஸ்ரேலியப் பிரதமர் யிற்சக் றபினும் ஒருவரை ஒருவர் வெறுப்போடு நோக்கினார்கள். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. ஆயினும் இருவரும் சமாதானம் வேண்டும் என்ற நோக்கோடு செயற்பட்டார்கள். எதிர்காலச் சந்ததியினருக்குப் போரை விடச் சமாதானம் தான் நன்மையைத் தரும் என்று அவர்கள் நம்பினார்கள். சமாதானத்திற்கான முயற்சி வீண் முயற்சி என்று அவர்கள் கருதவில்லை.

அந்தக் காலத்தைப் பொற்காலம் என்று கூறவரவில்லை. ஆனால் அன்று சமாதானம் சாத்தியமானது என்ற நிலை இருந்தது. இப்போது இருதரப்பினதும் மனப்பாங்கும் போக்கும் மாறிவிட்டது. இன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அமி வில்லெண்ட்ஸ்

**இஸ்ரேலுக்குள்ளும் காசாவுக்குள்ளும் இயங்கும் அரசியல் தலைவர்கள் மிதவாதத்தை ஏற்பதோ மதிப்பதோ கிடையாது. இணக்க அரசியலை அவர்கள் வெறுக்கிறார்கள். எதிரிகளுடன் கைகுலுக்குவதற்கு அஞ்சுகிறார்கள். சமாதானம் நோக்கிச் செல்லக்கூடிய எல்லா விடயங்களையும் தவிர்க்கிறார்கள்**



*ஹமாஸ் இயக்கத்தில் காசா தலைவர்கள்*

தலைவர்களுக்கு தூரநோக்கு, சிந்தனை என்பன கிடையாது. அவர்கள் அன்றாடப் பிரச்சினைகளுக்கு எதிர்வினையாற்றுபவர்களாக இருக்கிறார்கள். சமாதானத்தை முன்னெடுக்கும் ஆற்றல் அவர்களிடம் இல்லை. சமாதானம் என்ற பாதை எவ்வளவு ஆபத்தானது என்பதை அரபாத்தும் றபினும் நன்றாக அறிந்திருந்தனர்.

இப்போது இரு பக்கத்து ஆட்சியாளர்களும் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு கொடிய யுத்தம், குழப்பம், திரிபுகள் நிறைந்த வரலாற்றைக் கடந்து வந்துள்ளார்கள். அவர்களால் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப முடியுமா? தள்ளாடுகின்ற அக்கதிரைகளில் அமர்ந்து பேசுவதென்பது ஆபத்தான அச்சம் தரும் விடயமாகப் போய்விட்டது.

இவ்வாறு நாம் கூறுவதன் பொருள் பத்து ஆண்டுகளாகச் சிந்தப்பட்ட இரத்தத்திற்கு இஸ்ரேல், பாலஸ்தீன் என்ற இரு தரப்பினரும் சமதையான பொறுப்பு உள்ளவர்கள் என்பதல்ல. ஹமாஸ் இயக்கம் நடந்து கொள்ளும் விதம் பொறுப்பற்றது, கேவலமானது. இஸ்ரேல் எப்படி நடந்து கொண்டது? காசாவை விட்டுப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டே அதனை ஆக்கிரமிப்புச் செய்கிறது. ஒரு தேசத்தின் மக்களைக் கைதிகளாகவே வைத்துக் கொண்டு அவர்கள் மீது குண்டுகளை வீசுகிறது. அதன் செய்கைகள் மன்னிக்க முடியாதவை.

எவ்வாறிருப்பினும் யுத்தம் இறுதியில் சமாதானத்தை நோக்கிச் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். இடையறாத செல் வீச்சுகள், படை வீரர்களைக் கடத்திச் செல்லுதல், இளம் பருவத்துச் சிறுவர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்படுதல், மக்கள் குடியிருப்புகளை குண்டு வீசி அழித்துத் தரைமட்டமாக்குதல், விளையாடிக்கொண்டிருக்கும் சிறுவர்கள் மீது குண்டு வீசிக் கொலை செய்தல் என்பன எவ்வளவு காலம் தொடரப்போகிறது.

இஸ்ரேலில் சமாதானம் வந்தால் ஆபத்துகள் உள்ளன. இஸ்ரேலிய மக்கள் சமாதான காலத்தில் முன்னரை விட கிளர்ச்சி மனப்பாங்குடன் செயற்படுவார்கள். தமது அன்றாடப் பிரச்சினைகள் பற்றிச் சிந்திப்பார்கள், கேள்வி கேட்பார்கள். இவற்றுக்கு அரசாங்கம் முகம் கொடுக்கவேண்டும். சமாதானம் அங்கு தனிநபர் வாதத்தை உருவாக்கும். அதனால் அரசியல் போராட்டங்கள் வலுவடையும். போர் தொடர்ந்தால் இந்தப் பிரச்சினைகள் இருக்காது. போரின் போது மக்களின் குழுச் சிந்தனை தான் செயற்படும். தனிநபர் சிந்தனைக்கு அங்கு இடமில்லை. இராணுவத்திற்கும் இஸ்ரேலியப் பிரதமருக்கும் தேவைப்படுவது மக்களின் குழுச் சிந்தனையே (Group think). குழுச் சிந்தனை கண்ணை மூடிக் கொண்டு இராணுவ நடவடிக்கைகளை ஆதரிக்கச் செய்யும். போரை வேண்டி நிற்கும் இராணுவத்திற்கும் பிரதமருக்கும் குழுச்சிந்தனைதான் தேவையானது.

பாலஸ்தீனத்தில் (காசா என்று பொருள் கொள்க) சமாதானப் பாதையைத் தேர்ந்து கொள்வதென்பது ஒரு தேசத்தை எப்படி நடத்துவது, பொருளாதாரத்தை எப்படிக் கட்டியெழுப்புவது, சாதாரண மக்களின் குடும்ப வாழ்க்கையை மீளக் கொண்டுவருவது என்பன பற்றிய விடயங்களோடு தொடர்புடையது. சமாதானம் பொது மக்கள் உள்ளத்தில் இஸ்ரேல் மீது உள்ள வெறுப்புணர்வை வேறு திசையில் மாற்றம் செய்யும். இம்மக்கள் குழுச் சிந்தனையைக் கைவிடுவார்கள். யுத்தம் தொடர்ந்தால் மக்கள் தமது அரசியல் தலைவர்கள் தமக்கு நல்லதைச் செய்தார்களா?திறமையாகச் செயற்படுகிறார்களா? என்ற கேள்விகளைக் கேட்கத் தூண்டாது. அவர்கள் அவை பற்றி அக்கறைப்படமாட்டார்கள்.

மிதவாதிகள் தான் சமாதானத்தை விரும்புவார்கள். இஸ்ரேலுக்குள்ளும் காசாவிற்குள்ளும் இயங்கும் அரசியல் தலைவர்கள் மிதவாதத்தை ஏற்பதோ மதிப்பதோ கிடையாது. இணக்க அரசியலை அவர்கள் வெறுக்கிறார்கள். எதிரிகளுடன் கைகுலுக்குவதற்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். பேச்சுவார்த்தை உட்பட சமாதானம் நோக்கிச் செல்லக்கூடிய எல்லா விடயங்களையும் தவிர்த்துக் கொள்கிறார்கள். அரசியல் தலைவர்களை வெளியாரினால் தான் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துச் செல்ல முடியும். போர் இத்தலைவர்களுக்கு இலகுவான பாதை. பாலஸ்தீன அரசியலில் இஸ்ரேல் வெறுப்பு ஒரு கருவியாக மாறிவிட்டது. இதே போல் இஸ்ரேலில் நடைபெறும் தேர்தல்களில் ஹமாஸ் இயக்கத்தின் மீதான வெறுப்பு முக்கியமான பங்கைப் பெறுகிறது.

இஸ்ரேல் என்ற நாட்டின் தோற்றமே யுத்தம் என்ற புனைவுடன் சம்பந்தப்பட்டது. இதேபோன்று பாலஸ்தீனியர்களின் அடையாளம் ‘இன்டிபதா’ (INTIFADA) என்ற எதிர்ப்பியக்கத்தோடு பிணைப்புடையது. யுத்தத்தைத் தொடர்ந்தால் இஸ்ரேலிய மக்கள் அரசின் பின்னால் செல்வர். இன்டிபதா எதிர்ப்பியக்கம் தொடர்ந்தால் பாலஸ்தீனியர்கள் போராளிகளின் பின்னால் ஒன்று சேர்வார்கள்.

காசாவில் அண்மையில் நடந்த படுகொலைகளுக்குப் பின்னர் இஸ்ரேலியர்கள் மத்தியில் பிரதமர் பெஞ்சமின் நெதான் யாஹூவிற்கு ஆதரவு கூடியுள்ளது. காசாப் பகுதியை இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்திருக்கும் போதும் அங்குள்ள மக்களை குண்டு வீசிக் கொலை செய்து வரும் போதும் காசா மக்கள் மேலும் மேலும் ஹமாஸ் இயக்கத்தின் ஆதரவாளர்களாய் மாறுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை என்பதையும் யாவரும் அறிவர். இஸ்ரேலின் நடவடிக்கைகள் காரணமாக காசாவில் மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த மக்கள் வன்முறை எதிர்ப்பு என்ற வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டு விட்டார்கள். இதனால் ஹமாஸ் இயக்கத்திற்கு ஆதரவு பெருகியுள்ளது. அங்கு ஒரு தேர்தல் நாளை நடத்தப்பட்டால் ஹமாஸ் அமோகமான பெரும்பான்மையுடன் வெற்றி பெறும் என்பதில் ஐயமில்லை.

இருதரப்பினர்களதும் நிலைப்பாடு நன்கு தெரிகிறது. இஸ்ரேல் அரசாங்கம் நிரந்தரமான யுத்தம் ஒன்றினைத் தொடரும் நிர்ப்பந்தத்தை உணருகிறது. ஹமாஸ் இயக்கம் சுரங்கப் பாதைகளை புதிதாக அமைக்கிறது; நீண்டதூர தாக்குதலுக்கான ஆயுதங்களை உபயோகிக்கிறது. அதற்குப் பதிலடி கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறது. காசாவிற்குள் மக்களைச் சிறைப்படுத்திக்கொன்று குவிக்கும் இஸ்ரேலினை எதிர்த்தாக்குதல் மூலம் தடுத்து நிறுத்துவதை விட வேறு வழியில்லை என்று ஹமாஸ் கருதுகிறது. இரு பகுதி மக்களுக்கிடையே ஏற்பட்ட நோய்க்கூறான உறவு முறையின் விளைவுகளை காசாவில் காண்கிறோம். இது முற்றிய பித்து நோய் என்பதை எந்தவொரு உளப்பகுப்பாய்வாளனும் கண்டுகொள்வான். இந்த நடத்தையை மாற்றவும் முடியாது. இருபக்கத்து அரசியல் தலைவர்களுக்கும் தாம் எத்தகைய சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளோம் என்பது விளங்குகிறது.

இஸ்ரேல், காசா யுத்தம் அண்ணன் தம்பி சண்டை போன்றது. இச்சண்டையில் இஸ்ரேல் என்ற அண்ணனின் நிலை வரவர மேலுமாகிச் செல்கிறது. கோபம் தாளாமல் அவன் தன் சகோதரனை விளாசிக் கொண்டிருந்தான். இப்போது தம்பி உசாராகிவிட்டான். திருப்பி அடிக்கிறான். அவன் தன் பலத்தை உணர்ந்தவனாக வெகுண்டெழுந்து தாக்குகிறான். அவனுக்கு உதவிகளும் தாராளமாகக் கிடைக்கின்றன. போராயுதங்களும் அதி நவீன சாதனங்களும் ஹமாஸ் கையில் குவிகின்றன. ஹமாஸ் இஸ்ரேலிய புலனாய்வுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துறையை ஏய்ப்பதற்கும் கற்றுக் கொண்டுள்ளது. பாலஸ்தீனியர்கள் செத்துமடியும் தொகை அதிகரிக்கும் போது சர்வதேச சமூகத்தின் அக்கறை கூடுகிறது. அங்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வந்து போகிறார்கள். ஹமாஸ் இதை நல்லதொரு தந்திரோ பாயமாகக் கொள்கிறது. எம் மக்கள் செத்துமடிகிறார்கள். நாம் மடிந்து வீழ் கிறோம். அதேசமயம் வெற்றி எமக்கே என்ற பாணியில் ஹமாஸ் செயற்படுகிறது.

காசாவில் சிவிலியன்கள் செத்தும டிவதற்கு ஹமாஸ் இயக்கம் பொறுப் புக்கூற வேண்டிவரும்? தமது வெட் கம் கெட்ட செயலை ஹமாஸ் எப்படி நியாயப்படுத்த முடியும்? தனது முகத்தை பாலஸ்தீனர்களின் பிணங்க ளுக்குள் அல்லவா மறைத்துக் கொள்ள வேண்டியுள்ளது? காசா வில் நிகழும் படுகொலைகள் சர்வ தேச சமூகத்தை அங்கு தலையிடுவ தற்கு நிர்ப்பந்திக்கலாம்.

ஒஸ்லோ சமாதானப் பேச்சுவார் த்தை போன்ற வழிமுறைகளை நாடு வது அர்த்தம் இல்லாமல் போய்விட் டது. ஆயினும் சமாதானம் என்றால் அதன் பொருள் என்ன என்று விளங் கிக்கொள்ள வேண்டும். சமாதானம் இஸ்ரேலுக்கு பாலஸ்தீனத்தில் இயல்பு நிலையைக் கொண்டுவரும் கட்டாயத்தை உண்டாக்கும். மதிப் புக்குரிய உலக நாடுகளுடன், தலை வர்களுடன் உறவு கொள்ளும், பழ கும் தேவை இஸ்ரேல் தலைவர்களு க்கு உண்டாகும். இராணுவப் பாதை யைக் கைவிடும் நிர்ப்பந்தம் உண்டா கும்.

பேச்சுவார்த்தைகளும் சமாதா னமும் தோல்வியில் முடிந்தது ஏன் என்று திரும்பிப்பார்க்க வேண்டும். இருதரப்பிலும் உள்ள மிதவாதிகள் வேட்டையாடப்பட்டார்கள், அழிக் கப்பட்டார்கள். இன்டிபதா எதிர்ப்பி யக்கத்தின் இரண்டாவது கட்டம் ஆரம்பமான போது ஹமாஸ் காசாப் பகுதியை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. சமாதானத்தை விரும்பிய அரபாத்தின் பலஸ்தீன விடுதலை இயக்கம் ஓரம்கட்டப்பட் டது. இஸ்ரேல் காசாவில் எல்லை களை மூடியது. அங்குள்ள விமான நிலையத்தை குண்டுவீசி அழித்தது. காசாவின் இயல்பு நிலையைக் குலைத்த இஸ்ரேல் பாலஸ்தீனியர் களை நாதியற்றவர்களாக ஆக்கியது. அவர்களை வெறுப்பின் உச்ச நிலைக் குக் கொண்டு சென்றது. வேலை யின்மை வீதம் 70-80 வீதமாக இருக்கும் போது அவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள்? இஸ்ரேல் மீதான வெறுப்பும் உயிரைத் துச்ச மாக மதிக்கும் போராட்ட வாழ்வும் தான் அவர்களின் தலைவிதி.

மத்திய கிழக்கு பற்றி நீண்டகால மாக எழுதிவரும் ஊடகவியலாளர் எம்.ஜே. ரோசன் பேர்க் அண்மைய படுகொலைகளைப் பார்த்தபின் எழு தினார். சுருக்கமாகச் சொல்வதா னால், 'நான் இனிமேல் இஸ்ரேல் பற்றி எழுதவோ பேசவோ மாட் டேன். அதைப்பற்றி நான் சிந்திக்க வும் போவதில்லை. ஏனென்றால் இஸ்ரேலின் எதிர்காலம் பற்றிய நம் பிக்கை இப்போது எனக்கு இல்லை'

இவ்வாறான கையறுநிலை பயனுடையதோ என்று கூறமுடி யாது. ஆயினும் மத்திய கிழக்கில் இன்றைய அவலநிலை விரைவில் மாறும் என்ற அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. ■

***(அமி வில்லென்ட்ஸ் அமெரிக்க பத்திரிகையாளர், எழுத்தாளர். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ஆங்கில பேராசிரியராகக் கடமையாற்றுகிறார்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# முன்னரைவிட பயங்கரமான தேசமாக லிபியா



நபிலா ரம்டானி

நம்பகத் தன்மையான பாதுகாப்பு கட்டமைப்புகளும் உருப்படியான அரசியல் நிறுவனங்களுமே இன்று லிபியாவிற்குத் தேவை. ஆனால் அந்த நாட்டை விடுதலை செய்வதாகக் கூறிக்கொண்டு இராணுவ ரீதியில் தலையிட்ட மேற்குலக நாடுகளுக்கு இதைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை.

லிபியாவின் முன்னாள் சர்வாதிகாரி கேணல் மும்மர் கடாபி மறைந்து மூன்று ஆண்டுகள் ஆகப் போகின்றது. அவர் 2011 ஒக்டோபர் 20 ஆம் திகதி சேர்ட்டி என்ற இடத்தில் தனது சொந்த மக்களாலேயே படுகொலை செய்யப்பட்டார். இந்த அநாகரிகமான படுகொலையைப் பார்த்து மேற்குநாட்டு அரசியல்வாதிகள் ஒரு வக்கிரத்தன்மையான மகிழ்ச்சியை வெளியிட்டார்கள். பிரித்தானியாவினதும் பிரான்ஸினதும் யுத்த விமானங்கள் இப்படுகொலைக்கு உதவி புரிந்தன. ஊழல் மலிந்ததும் மனிதாபிமானம் இல்லாததுமான அரசிற்கு முடிவுகட்டப்பட்டது. கிளர்ச்சிக்காரர்கள் அதிகாரத்தில் அமர்ந்தார்கள். தொலைக்காட்சிச் செய்திகள் இதனை ஒரு வெற்றி விழாவாகக்காட்டி கொண்டாடின. 'வேலை முடிந்தது' என்று மனத்திருப்தியோடு கூறப்பட்டது.

பிரான்ஸின் ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோசி நேட்டோ படைகளின் குண்டு வீச்சினை அங்கீகரித்து கடாபி ஒழிக்கப்படுவதை உறுதி செய்தார். அவருக்கு கடாபியின் மறைவினால் அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. பிரதமர் டேவிட் கமரூனுடன் சார்கோசி திரிபோலி நகருக்குச் சென்றபோது விடுதலையை வாங்கித்தந்தவர் என்று சார்கோசி ஆரவாரத்துடன் கொண்டாடப்பட்டார். டேவிட் கமரூன் கடாபியை அழித்தொழிக்கும் முயற்சிக்காக பிரித்தானிய வரியிறுப்பாளர்களின் 900 மில்லியன் பவுண்ஸ்களை விரயம் செய்ததாக மதிப்பீடுகள் கூறுகின்றன.





திரிபோலி விமான நிலையத்தில் ஷெல் தாக்குதலில் சேதமடைந்த விமானம் (2014 ஆகஸ்ட் 24)

கடாபியின் ஆட்சியை நீண்டகாலத்திற்கு முந்தியே ஒழித்துக் கட்டியிருக்க வேண்டும் என்பதில் எவருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. கடாபியின் ஆட்சியில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டன. பத்தாயிரத்திற்கும் அதிகமான அரசியல் கைதிகள் அபுசலிம் சிறைச்சாலையில் வைத்து 1996 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டனர். கடாபி வெளிநாடுகளில் கூட பல் கொடிய குற்றச்செயல்களை செய்வித்தார். இக்குற்றச்செயல்கள் பற்றிய நீண்டபட்டியல் உள்ளது. ஸ்கொட்லாந்தின் லொக்கர்பி என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் பான் AM விமானத்தை 1988 ஆம் ஆண்டு குண்டு வைத்து தகர்த்த போது 270பேர் கொல்லப் பட்டார்கள். 1984ஆம் ஆண்டில் Yvonne Fletcher என்ற பொலிஸ் காரரை மத்திய லண்டனில் வைத்து கடாபி படுகொலை செய்வித்தார். 1973ஆம் ஆண்டு ஐ.நா. தீர்மானம் இராணுவ தலையீட்டுக்கு பச்சைக் கள்; தண்ணீர்,மின்சாரம் என்பவற் றின் வழங்கல் அடிக்கடி தடைப்படுகி றது. லிபியாவின் எண்ணெய் எரி வாயு வள இருப்பு பல்தேசியக் கம்ப னிகளை அந்நாட்டிற்கு வரவழைத் தது. அக்கம்பனிகள் முதலிட்டு லாபம் உழைத்ததோடு, குறிப்பிட்ட அளவு எண்ணிக்கையுடைய கல்வி கற்ற மத்திய தர வகுப்பு ஒன்றின் நாசமாகியது. மறுநாள் திங்கள் இன் னொரு எண்ணெய் இருப்புக்கிடங்கு ரொக்கட் குண்டுத் தாக்குதலால் தீப் பிடித்து எரிந்தது. இச்சம்பவங்கள் யாவும் திரிபோலி விமான நிலையத் தில் இருந்து சிலமைல் தூரத்தில் நடைபெற்றன. விமான நிலையமும் இடைவிடாத தாக்குதலுக்கு உள்ளாகி வருகிறது.



'1973 இன் ஐ.நா.தீர்மானம் குடி மக்கள் மீதான தாக்குதல்களை' முடி வுக்குக்கொண்டு வர வேண்டும் என்றே கூறியது. இன்றோ குடி மக் கள் மீதான தாக்குதல் அன்றாட நிகழ்வு ஆகிவிட்டது. பெங்காசி நக ரில் வைத்து கடந்த ஆனிமாதம் சல்வா புஹாஹிஸ் (Salwa Buga-igh is) என்னும் மனித உரிமைச் செயற்பாட்டாளர் கத்திக் குத்துக்கு ஆளானார். அவரின் தலையைத் துப் பாக்கி ரவைகள் பதம் பார்த்தன; அவர் வீழ்ந்து மடிந்தார். செப்டெம் பர் 2012இல் அமெரிக்கத் தூதர் கிறிஸ் ஸ்ரீவன்ஸ் மற்றும் அமெரிக் கத் தூதரக உத்தியோகத்தர் மூவர் படு கொலை செய்யப்பட்டனர். இவை

கொடி காட்டிய அதேவேளை, ஆட்சி மாற்றத்துக்கு எந்தவகையிலும் அதி காரமளிக்கவில்லை. கடாபி இறந்த பின்பு சமாதானமும் சுபிட்சமும் வலு வான ஜனநாயக எதிர்காலமும் தோன்றுவதற்கான சூழ்நிலை உள்ள தாக கமரூன் பிரகடனம் செய்தார். இன்று திரும்பிப்பார்க்கும் போது இவையெல்லாம் வெற்று வார்த்தை களாக ஒலிக்கின்றன. அண்மையில் திரிபோலி நகரிலிருந்து வெளிநாட்டு இராஜதந்திரிகளும் பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் பிரஜை களும் விமானங்களில் ஏறி வான் வழியாகத் தப்பிச் செல்லும் போது அமெரிக்க ஜெட் விமானங்கள் பாது காப்பு வழங்கின. ஐ.நா.வின் அலுவ லகம் கூட திரிபோலியில் மூடப் பட்டுவிட்டது.



போட்டி திரட்டல் படைகளுக்கு இடையிலான மோதலின் போது தலைநகர் திரிபோலி யின் சாராஜ் பகுதியில் ரொக்கட் தாக்குதலில் தீப்பிடித்து எரியும் கட்டிடம். (2014 ஆகஸ்ட் 23)

கிளர்ச்சிக்காரர்களிடையே உட் சண்டை தீவிரம் பெற்றுள்ளது. லிபி யாவில் எந்த இடத்திலும் பாதுகாப்பு இல்லை. படுகொலைகள் சர்வசாதார ணமாய் நடக்கின்றன. கொள்ளைய டிப்போர் வீதிகளில் சுற்றித் திரிகிறார் தோற்றத்திற்கும் வழிவகுத்தன. இன்று எல்லா வளங்களும் அழிகின் றன. போட்டிக் கிளர்ச்சிக் குழுக்களி டையே நடைபெற்ற மோதலின் போது அண்மையில் மில்லியன் கணக்கான லீற்றர் பெற்றோல் எரிந்து யாவும் 'புரட்சியின் தொட்டில்' என அழைக்கப்பட்ட லிபியாவில் இடை யறாது நடைபெற்றுவரும் சம்பவங் கள்.

(65ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திரை விமர்சனம்

# பண்ணையாரும் பத்மினியும்

## படிம அழகியல்

ச.இராகவன்

இதுவரை வெளிவந்த தமிழ்த் திரைப்படங்களில் இயல்பான படிம அழகியலை வெளிப்படுத்தும் வகையில் புலக்காட்சியேதும் முன் நிலைப்படுத்தப்படாத நிலையில் முதன் முதலாக ஓர் இயல்பான படிம அழகியலை முன்னிலைப்படுத்தி பண்ணையாரும் பத்மினியும் என்ற திரைப்படத்தைத் தந்துள்ள இயக்குநர் அருண்குமார் பாராட்டுக்குரியவர். இதற்கு முன் வெளிவந்திருந்த 'பாகன்' திரைப்படத்தில் படிமம் இடம்பெற்றிருந்த போதிலும் அதுவோர் இயல்பான படிமமாகவோ வலுவான படிமமாகவோ அத்திரைப் படத்தில் இயங்கவில்லையென்பதுடன் அதுவொரு மனோரதியப்பாங்கான படிமமாகவே இடம்பெற்றிருந்தமையால் அதைப்படிம அழகியலாகக் கொள்ள முடியவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.





ஒரு மூன்றாம் ஆளின் பார்வையில் தான் திரைப்படந்தொடங்குகிறது. பற்பசை, பத்தூரிகை, மலசலகூடம், வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி என ஒவ்வொன்றையும் அந்தக்கிராமத்திற்கு அறிமுகப் படுத்தி வைப்பவராகப் பண்ணையார் அறிமுகமாகிறார். இந்தப் பண்ணையார் தனது நண்பன் வீட்டிற்குச் செல்லும் போது அங்கே பிரிமியர் பத்மினி காரைப் பார்க்கிறார். பார்த்த மாத்திரத்திலேயே பத்மினியால் கவரப்படுகிறார். அதன் பின்னர் அவர் கவனமும் பேச்சும் பத்மினி மீதேயிருக்கிறது. வெளியூர் செல்லும் நண்பன் பத்மினியைப் பண்ணையாரிடமே கொடுத்துவிட்டுப் போகிறார். ஊரில் மெதுவாக உழவு இயந்திரமோட்டும் முருகேசனை அழைத்து பத்மினியை ஓட்டும் வேலையைப் பண்ணையார் அவனிடம் கொடுக்கிறார். ஊரில் நடக்கும் நன்மை, தீமை எல்லாவற்றுக்கும் பத்மினியைப் பண்ணையார் கொடுத்து உதவுகிறார். ஆனால் பண்ணையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போது கார் ஓட்டக் கற்றுக்கொள்கி றாரோ அன்றுதான் காரில் ஏறுவேன் என அவரது மனைவி சொல்லி விடுகி றார். இதனால் தமது திருமண நாளு க்கு மனைவியை காரில் அழைத்துச் செல்லத் திட்டமிடும் பண்ணையார் முருகேசனிடம் கார் ஓட்டக் கற்றுக் கொள்வதில் முனைப்பாக இருக்கி றார். ஆனால் அவ்வளவு எளிதாக காரோட்டுவது அவருக்குக் கைவர வில்லை. இதற்கிடையில் பண்ணை யாருக்குப் பத்மினியைக் கொடுத்த நண்பரின் மகள் கைக்குழந்தையோடு பண்ணையார் வீட்டுக்கு வருகின் றாள். அவள் மூலமாக நண்பர் திடீ ரென காலமாகி விட்டது தெரியவருகி றது.

அவளிடம் பண்ணையார் அவளது தந்தை கொடுத்துவைத்திருந்த ஆதன உறுதிகளைக் கொடுக்கிறார். அவளது தந்தை தன்னிடம் பத்மினியைத் தந்து விட்டுப் போனதை முருகேசனுடன் சேர்ந்து பண்ணையார் மறைக்க முனைகிறார். பண்ணையாரின் மனை வியின் தூண்டுதலால் மனம்மாறி நண்பரின் மகளிடம் பத்மினியைத் தன்னிடம் விட்டுச் சென்றதையும் அவர் சொல்ல வேண்டி வருகிறது.

அதற்கவள் அந்தவிடயம் தனக்கு ஏற்கனவே தெரியுமென்றும் தந்தை யின் ஞாபகமாகப் பத்மினியை வைத் திருக்குமாறும் சொல்லிவிட்டுப் போகிறாள். கணவன் வீட்டிலிருந்து ஒவ்வொரு முறையும் பண்ணையார் வீட்டிற்கு வரும் அவரது ஒரே மகள் திரும்பிச் செல்லும் போது அங்கி ருந்து ஒவ்வொரு பொருளைக் கொண்டு செல்கிறாள். இதுபோலவே ஒரு தடவை பத்மினியையும் பண் ணையாரிடமிருந்து எடுத்துச் சென்று விடுகிறாள். பண்ணையாரின் திரும ணநாள் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் அன்றைய தினம் கோயி லுக்குச் செல்வதற்காகப் பத்மினியைக் கேட்டுவரப் பண்ணையாரும், முருகேசனும், வேலையாள் பெருச் சாளியும் பேருந்தில் பண்ணையாரது மகள் வீட்டுக்குச் சென்று பத்மினி யைக் கேட்க அவள் சாக்குப்போக்குச் சொல்லி மறுத்து விடுகிறாள். ஏமாற் றத்துடன் திரும்பும் அவர்களைப் பண்ணையாரின் மனைவி கடிந்து கொள்கிறாள்.

எதிர்பாராத விதமாகப் பத்மினி அடிக்கடி பழுதடைவதைக் காரணங் காட்டித் திரும்பவும் பத்மினியைக் கொண்டுவந்து பண்ணையாரின் திரு மணநாளன்றே அவரது மகள் பண்ணையாரிடங்கொடுத்து விட்டுக் கோபித்துக் கொண்டுபோகிறாள். பண்ணையார் விருப்பப்படியே பத்மி னியை ஓட்டிக்கொண்டு மனைவியு டன் கோயிலுக்குப் போகிறார். சிறுவ யதில் பத்மினியின் முன்னிருக்கையில் உட்கார்ந்து செல்ல ஆசைப்பட்ட ஊர்ச்சிறுவன் இப்போது வளர்ந்து பெரியவனாகி ஒரு காருக்குச் சொந் தக்காரனாகி விட்டபோதிலும் பத்மி னியின் முன்னிருக்கையில் அமர்ந்து செல்லும் தீராத மோகங்கொண்டவ னாகத் தனது காரில் பண்ணையார் வீட்டுப்பக்கம் வருகிறான். அவன் நோக்கிலேயே படப்பிடிப்புக்கதை நகர்த்தப்படுகிறது. இறுதியில் பத்மி னியின் முன்னிருக்கையில் அமர்ந்து செல்லும் அவனது கனவும் நனவாகி றது.

பண்ணையாளராக ஜெயப்பிரகா ஸும் அவர் மனைவியாக துளசியும் முருகேசனாக விஜய்சேதுபதியும் பெருச்சாளியாகப் பாலசரவணனும் பண்ணையாரின் நண்பனாக மகாதே வனும் நண்பனின் மகளாக சிநேகா வும் பண்ணையாரின் மகளாக நீலிமா ராணியும் முன்னிருக்கையில் பய ணம் செய்ய ஆசைப்படுபவனாக தினேஸும் நடித்துள்ளனர். ஜெயப்பிர காஸும் துளசியும் நுணுக்கமாகக் கணவன் மனைவிக்கிடையிலான நேசம், ஊடல், பரிவு என ஒவ்வொரு உணர்வையும் பக்குவமாக வெளிப்ப டுத்தி பிரமிக்க வைத்துள்ளனர். பத் மினி மீதான ஈர்ப்பினைத் தனது ஒவ் வொரு நகர்விலும் ஜெயப்பிரகாஸ் வெளிப்படுத்தும் விதம் வெகு இயல் பானது. ஒரு சிறுவனின் ஆர்வத் தோடு துள்ளுகிறார். விஜய்சேதுபதி முருகேசன் பாத்திரத்திற்கு அச்சு அச லாகப் பொருந்துகிறார்.



பண்ணையாருக்குக் காரோட்டக் கற்றுக் கொடுக்கும் காட்சி குறிப்பிடத் தக்கது. நட்சத்திர அந்தஸ்துள்ள நடிகையான சிநேகா ஒரு காட்சியில் வந்துவிட்டுப் போனாலும் இதுவரை அவர் நாயகியாக நடித்த திரைப்படங் களால் ஏற்படுத்தாத தாக்கத்தை இந்த ஒரு காட்சியில் ஏற்படுத்திவிடுகிறார்.

நீலிமாராணியின் நடிப்பும் படப்பி டிப்புக் கதையை அழுத்தமாக்குவதில் முக்கிய பங்காற்றுகிறது. பாலசரவ ணன் மொழியைக் கையாளும் விதத் தில் இயல்பாகவே நகைச்சுவை வெளிப்படுகிறது. பண்ணையாரும் பத்மினியும் திரைப்படம் அழுத்த மான படிம அழகியலை முன்வைத் துள்ள விதத்தில் ஒரு முக்கியமான வரவு தான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணம் எனும் நிக்காஹ்

## திரை விமர்சனம்

மயூரா

தற்போது தமிழில் வெளிவந்த படங்களுள் 'திருமணம் என்னும் நிக்காஹ்' எனும் படம் மாறுபட்ட கலாசாரப் பின்னணி குறித்து நுணுக்க மாக ஆராய்ந்து எளிமையான காட்சிகளுடன் எடுக்கப்பட்ட படம் புதிய அனுபவங்களைத் தர முற்பட்டு பாதியில் காணாமல் போய்விட்டது. இத் திரைப்படத்தினுடைய இயக்குநர் அனீஸ் கவனம் பெறுகிறார்.

சென்னையில் இருந்து கோவை செல்லும் ரயிலில் சந்திக்கிறார்கள் நாயகனும் நாயகியும். தனது தோழி ஆயிஷாவுக்காக அவள் பெயரில் எடுக்கப்பட்ட ரயில் டிக்கெட்டில் பயணிக்கிறார் பிரியா (நஸ்ரியா). சென்னையில் இருந்து தன் சித்தப்பா வீட்டிற் குச் செல்லும் விஜய ராகவாச்சாரி (ஜெய்) அபூபக்கர் என்ற பெயரில் ஏஜன்டிடம் வாங்கிய பயணச் சீட்டில் பயணிக்கிறார். பிரியாவை ஆயிஷாவாக எண்ணும் ராகவன் முதல்பார்வையிலேயே அவள் மீது விருப்பம் கொள்கிறார். பிரியாவோ இராகவனை அபூபக்கராகவே நினைக்கிறார். இந்த நினைவு முரண் சுவாரஸ்யமாக கதையாடல்களுக் கான பின்புலத்தை விரிவாக்குகிறது.

இருவரும் ஒருவரை ஒருவர் இஸ்லாமியர் என்று நினைத்தே காதலிக்கிறார்கள். ஆச்சார்ய அனுஷ்டானங்களைப் பின்பற்றும் பிராமண குடும்பம் தன்னுடையது என்று இராகவன் உணர்ந்திருந்தாலும் ஆயிஷா மீதான காதலை இராகவனால் தவிர்க்க முடியவில்லை. இதே நிலைமைதான் அபூபக்கர் மீது காதல் கொள்ளும் பிரியாவின் நிலையும். இஸ்லாமியப் பெண்ணை மணப்பதற்கு தன்னை தயார் செய்துகொள்ளும் இராகவன் இஸ்லாமியப் பண்பாட்டை தேடித்தேடி தெரிந்துகொள்கிறான். இதன் மூலம் ஒரு இஸ்லாமியக் குடும்பத்தின் நட்பும் அவனுக்கு கிடைக்கிறது. பிரியாவும் ஒரு இஸ்லாமியரை திருமணம் செய்துகொள்ள தன்னைத் தயார் செய்துகொள்கிறாள். தன்தோழி ஆயிஷாவிடம் இருந்து இஸ்லாமியப் பழக்கவழக்கங்களைத் தெரிந்துகொள்கிறாள்.

இருவர் வீட்டிலும் திருமணப்பேச்சு வரும் போது இனியும் தன் காதலை மறைத்து வைத்திருக்கக் கூடாதென்று முடிவு செய்திருக்கும் தருணத்தில் இருவருக்கும் அவரவர் பற்றிய உண்மை தெரிகிறது. இருவரும் ஒரே மதம் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள். இதை அறியும் போது திருமண விடயத்தில் பிரச்சினை இருக்காது என்ற நிம்மதியல்லவா வரவேண்டும்? ஆனால், இவர்களுக்குள் ஏமாற்றம் தான் வருகிறது. இந்த ஏமாற்றம் இவர்களிடையே மேலும் விலகலை ஏற்படுத்துகிறது. அவரவர் எதிர்பார்ப்புகள் நம்பிக்கைகள் சரிகின்றது. இதற்கிடையில் இராகவனு க்கு நட்பான முஸ்லிம் குடும்பத்தை சேர்ந்த ஒரு பெண் அவன் மீது காதல் கொள்கிறாள். அவளை காதலித்து ஏமாற்றிவிட்டதாக அந்தக் குடும்பத்தினர் இராகவன் மீது கோபம் கொள்கின்றனர்.

பிரியா இராகவன் காதல் என்னானது? முஸ்லிம் குடும்பத்தினரின் காதலை எப்படி சமாளிக்கிறான்? இந்தக் கேள்விகளுக்கான விடைதான் படத்தின் நகர்வுக்கான மையம், படத்தால் காதல் மெல்ல மெல்ல உருப்பெறும் விதம் சுவாரஷ்யமாக காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. கலாசார வேறுபாடுகள் அற்ற நிலையிலும் கலாசார வேறுபா



டுகள் இருப்பதாக அனுமானித்துக் கொண்டு பழகும் விதமும் சுவையாகவுள்ளது. ஆயிஷாவாகவும் அபூபக்கராகவும் காதலித்தவர்கள் உண்மையான அடையாளங்களை பரஸ்பரம் தெரிந்து கொண்ட பிறகு வரும் ஏமாற்றம் தான் இந்தப் படத்தின் எதிர்பாராத சிக்கல். ஆனால் இந்த சிக்கலை ஒரு உளவியல் வெளிப்பாடாக வெளிப்படுவதற்கான காட்சிகள், தருணங்கள் நுட்பமாக அமையவில்லை. ஆனாலும், இந்தப் பிரச்சினையை எப்படி எதிர்கொண்டு சமாளித்தார்கள் என்பது தான் பாதி திரைக்கதையின் சவாலாக அமைந்திருக்க வேண்டும். ஆனால் இந்த சவாலை இயக்குநர் இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தமாக கடந்து செல்வதற்காக காட்சிகளை அமைக்கத் தவறிவிட்டார். ஆழமான உளவியல் அம்சம் கொண்ட இந்த சிக்கலை இன்னும் நுட்பமாகவும் படைப்பு ரீதியாகவும் கையாண்டிருந்தால் படம் வேறு ஒரு களத்திற்குச் சென்றிருக்கும். வித்தியாசமான அனுபவம் தந்திருக்க வேண்டிய இந்தப் படம் பாதிக்கிணறு தாண்டிய நிலையில் நின்றுவிட்டது.

மாறுபட்ட அடையாளத்துடன் ஒருவரை காதலிப்பதில் உள்ள சிக்கல்களை சுவையாக சித்தரித்துள்ள இயக்குநர் ரயில் சந்திப்பில் காதல், வழியில் ரயில் நிற்கும் போது பாடல், கடைசியில் சண்டை என புளித்துப் போன சங்கதிகளை நம்பி திரைக்கதையை அமைத்திருக்கும் பாங்கு சகிக்க முடியவில்லை. இன்றைய தொழில்நுட்ப விரிவாக்க யுகத்தில் அத்துறையில் நகர்ப்புறத்தில் பணியாற்றும் இருவர் பற்றிய தகவல்கள் அறியாது இருக்கும் அப்பாவித்தனம் ஏற்புடையதா? என்ற கேள்வியும் எழுவதில் நியாயமுண்டு. ஆனாலும் மாறுபட்ட கலாசாரப் பின்னணிகள் குறித்து நுணுக்கமாக காட்சிகள் அமைத்த விதம் பாராட்டத்தக்கது. இஸ்லாமிய அரசியல் பல்வேறு சிக்கல்களை முகம் கொடுக்கும் நிலையில் இஸ்லாத்தின் ஆத்ம பலம் இறையியல் தான் என்பதை நிறுவ முற்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

இந்தப் படத்திற்கு வர்ணம் சேர்ப்பதில் முதல் இடம் ஒளிப்பதிவாளர் யோகநாதனுக்குத் தான். அடுத்த இடம் நஸ்ரியாவிற்கு. இவர் தான் வரும் காட்சிகளில் எல்லாம் அழகின் மென் அதிர்வுகளை படரவிடுகிறார். நுட்பமான உணர்வுகளை வெளிப்படுத்துவதிலும் இயல்பைக் காட்டுகிறார். ஆனால் ஜெய் பாத்திரம் இன்னும் செதுக்கப்படவேண்டிய பாத்திரம். திரைக்கதை அமைப்பில் இன்னும் கூடுதல் அக்கறை காட்டியிருக்க வேண்டும். இவையெல்லாத்தையும் மீறி ஜிப்ரானின் இசை படத்திற்கு பெரிய பலம். நுட்பமான விடயத்தை தொட்டிருக்கும் இயக்குநர் இதனைப் படைப்பாக்கத்துடன் கையாண்டிருந்தால் வித்தியாசமான அனுபவம் கிடைத்திருக்கும். ■

---

*(61ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

லிபியப் புரட்சியின் தொடக்க ஆண்டுகளில் அங்கு உட்கட்டமைப்புகள் விரைவாக வளர்ச்சி பெற்றன. வர்த்தக மனப்பான்மையுடைய தொழில் நிபுணர் வர்க்கம் ஒன்று அங்கு உருவாகி வந்தது. சிறந்த நிபுணத்துவம் பெற்ற பொறியியலாளர்கள், எரிசக்தித்துறைப் பணியாளர்கள், வேறு பலதுறைகள் சார்ந்த நிபுணர்கள் அங்கு இருந்தார்கள்.அவர்கள் பூகோள மட்டத்தில் தமது வியாபாரத்தைப் பெருக்கி தம் நாட்டில் ஒரு பெருமாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தார்கள். லிபியாவிற்கு போய் நேரில் பார்த்த எம்மைப் போன்றோர் அன்று பெரு நம்பிக்கை கொண்டிருந்தோம். மேற்கு நாட்டுத் தலைவர்கள் என்ன செய்தார்கள்? அந்நாட்டுக்குள் ஆயுதங்களை கட்டுப்பாடில்லாத குழுக்களின் கையில் போய்ச் சேர இடமளித்தார்கள். ரொக்கட் தாக்குதல் ஆயுதங்களும் வழங்கப்பட்டன. 'WARLORDS' எனப்படும் யுத்தப் பிரபுக்கள் இஸ்லாமியத் தீவிரவாத பயங்கரவாதக் குழுக்களை தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்து வட ஆபிரிக்காவின் பாலைநிலப்பிராந்தியம் முழுவதையும் அராஜகத்திற்கு உட்படுத்தினர். கடாபியின் ஆட்சியின் போது இந்தக் குழுக்கள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட்டிருந்தன. கடாபி இதற்குக் கையாண்ட வழிமுறைகள் ஏற்றுக்கொள்ள முடியாத காட்டுமிராண்டித்தனம் என்பதில் சந்தேகமில்லை. இன்று லிபியாவிற்கு 'விடுதலை' பெற்றுக்கொடுத்தவர்கள் அங்கு அரசியல் நிறுவனங்களை நம்பகத்தன்மையுடன் இயங்க வைப்பதிலோ, அவசரத் தேவையாக உள்ள பாதுகாப்புப் பொறிமுறைகளை ஏற்படுத்துவதிலோ அக்கறையற்றவர்களாக இருக்கிறார்கள்.

சார்க்கோஸி 2007 தேர்தலின் போது 500 மில்லியன் பவுண்களை கடாபியிடம் இருந்து நிதி உதவியாகப் பெற்றுச் செலவிட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சார்க்கோசி ஒரு கிரிமினல் குற்றவாளி. இவர் மீது பிரான்சில் இப்போது விசாரணை நடக்கிறது. அன்று பாரிஸ் நகருக்கு கடாபி என்ற சகோதரத் தலைவரை சார்க்கோஸி வரவழைத்துக் கௌரவித்தது ஏன் என்று கேள்வி எழும்பியுள்ளது. கடாபி அன்று சார்க்கோஸியின் தனிப்பட்ட நண்பன் ஆக இருந்ததன் பின்னணி என்ன? சார்க்கோஸி தம் மீதான குற்றச்சாட்டுகளை மறுக்கிறார். பிரான்ஸின் தற்போதைய சோஷலிஸ்ட் பிரதமர் பிராங்கோயிஸ் ஹொலன்டேயின் போக்கிலும் அலட்சியம் வெளிப்படுகிறது. அவர் லிபியா பற்றியோ பராக் ஒபாமா பற்றியோ பேசுவது இல்லை. ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி ஆரம்பம் தொட்டே லிபியாவில் தலையிடுவதை ஆதரிக்காதவராக நடந்து கொண்டார். லிபியா மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது சில சேவைகளை வழங்கல் செய்தமை தவிர தமக்கு வேறுவகையில் பங்கு இல்லை என்று அமெரிக்கா காட்டிக்கொண்டது.

கமரூன் அன்று லிபியாவிற்கு பெருமையோடு நேரில் சென்று வந்தார். இன்றோ அந்நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பு நிலைபற்றி அவர் அக்கறையற்று இருக்கிறார். கடாபி காட்டு மிராண்டித்தனமான முறையில் கொல்லப்பட்ட வேளையில் லிபியாவில் அடுத்து என்ன நிகழப்போகிறது என்பதைப் பற்றி இத்தலைவர்கள் அறியாமலா போனார்கள்? இத்தலைவர்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் அன்று ஒரு வெளிப்படையான எச்சரிக்கை விட்டுக்கப்படவில்லையா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு முழுமையாக ஐந்தாண்டுகள் கடந்துள்ள நிலையில் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களின் நிதிப்பலத்தினைக் குலைக்கும் மாயவலைக்குள் அவர்களைத் தன்னியல்பாகவே சிக்க வைத்துப் பொருளாதார நிலைத்திருப்பினைக் கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடுகள் துரிதமாகப் பல முனைகளிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகிறது. ஒருவகையில் பார்த்தால் இச்செயற்பாடுகள் ஆயுதமோதலைக்காட்டிலும் மிகமோசமான பின்விளைவுகளைக் கொண்டவையென்று தான் சொல்லத்தோன்றுகிறது.



மு.தனேஸ்வரன்

## மாயவலையும் விழிப்புணர்வும்

பொதுவாகவே வடபுலத் தமிழர்கள் சேமிப்பில் அக்கறையுடையவர்கள். மொத்த, சில்லறை வியாபார நடவடிக்கைகளின் நுணுக்கம் தெரிந்தவர்கள். முப்பது வருடகாலத்திற்கு மேலாக நடைபெற்ற யுத்தத்தினால் வாழ்விட மற்றும் உயிரிழப்புகளை எதிர்கொண்ட போதிலும் தமது பொருளாதார வலுவினால் இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளும் நிலையிலிருப்பவர்கள். இறுதியுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அவர்களுக்கு தமதிருப்பை உறுதிப்படுத்திக்கொள்ளும் ஒரே ஆதாரமாக இருப்பது இந்தப் பொருளாதாரப் பலம்தான்.

எல்லாவிதத்திலும் தமிழ் மக்களை ஒடுக்கி அவர்களது இருப்பைக் கேள்விக் குள்ளாக்கிவரும் பேரினவாத அரசானது தற்போது பொருளாதார ரீதியாகவும் அவர்களை ஒடுக்கிவிடும் வகையில் படிப்படியாக மாயவலையொன்றினுள் சிக்க வைத்து வருகிறது. சுருக்கமாகச் சொன்னால் வருமானத்தை மிஞ்சிய செலவினை ஏற்படுத்தும் பொறிமுறையொன்று திட்டமிட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

2009 மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்ததும் வடபுலத்தை நோக்கி புற்றீசல்கள் போல் நிதி நிறுவனங்கள் படையெடுத்து வந்து தமது கிளைக் காரியாலயங்களைத் திறந்து செயற்பட ஆரம்பித்தன. இதிலும் முக்கியமாகக் குத்தகைக் கம்பனிகள் (லீசிங்) மற்றும் வங்கிகளின் செயற்பாடுகள் உற்று நோக்க வேண்டியவையாகும். முதலில் குத்தகைக் கம்பனியின் செயற்பாட்டை நோக்குவோம். பல்வேறு இயந்திரங்கள் மற்றும் வாகனங்களைத் தவணைக்கட்டண அடிப்படையில் கவர்ச்சிகரமான விளம்பர, மேம்படுத்தல் நடவடிக்கைகள் மூலம் வடபுலத்தில் விற்பனை செய்யும் நடவடிக்கையைத் துரிதமாக முன்னெடுக்க ஆரம்பித்ததுமே மக்கள் பொருளாதார ரீதியாகப் பலவீனமடையத் தொடங்கிவிட்டனர்.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் தனது மகளுக்கு லீசிங்கில் ஒரு ஸ்கூட்டி வாங்கினார். முற்பணமாக ஒரு இலட்சம் ரூபா செலுத்தியதாகவும் மிகுதி ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரத்தை 10 தவணையில் 15,000/= வீதம் கட்ட வேண்டுமெனவும் கூறினார். அவரோ நிரந்தர வருமானமேதுமற்றவர். கடன்வாங்கித்தான் ஸ்கூட்டியை லீசிங்கில் எடுத்ததாகக் கூறினார். உடன்காசுக்கு ஸ்கூட்டியை வாங்குவதானால் இரண்டு இலட்சம் போதுமானது. இந்த நண்பரோ அநியாயவட்டியாக ஐம்பதினாயிரம் செலுத்த வேண்டியவராகவுள்ளார்.

இது ஒரு சின்ன எடுத்துக்காட்டு மாத்திரமே. இதைவிடவும் லீசிங்கில் முச்சக்கர வண்டி (Auto) தொடங்கி பாரவூர்தி வரைக்கும் (lorry) கொள்வனவு செய்பவர்களும் இருக்கிறார்கள். இவ்வாகனங்களின் மூலம் வருமானமீட்டலாம் என்ற தன்னம்பிக்கையுடன் தான் அநேகர் இந்த லீசிங் முறைக்கொள்வனவில் நாட்டங் கொள்கின்றனர். ஆரம்பத்தில் ஓரளவு வருமான மீட்டினாலும் காலப்போக்கில் வருமான இழப்பைச் சந்திக்க நேரும் போது லீசிங் தொகையைக் கட்ட முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.


இதனால் கடன் வாங்கி லீசிங் தொகையைக் கட்டி முடிக்க எத்தனிக்கின்றனர். அதுவும் சாத்தியப்படாதபோது லீசிங்கம்பனிகள் வாகனங்களைப் பறிமுதல் செய்து வருகின்றன. இதனால் கொள்வனவாளர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இந்நிலையில் சேமிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லாத கடனில் மூழ்கிப்போய் மீள முடியாத பரிதாப நிலைக்குள்ளாகின்றனர்.

அடுத்துக் குறிப்பிடவேண்டியிருப்பது வங்கிகளின் செயற்பாடுகளாகும். போர் முடிவுக்கு வந்ததுமே வடபுலத்தில் பல்வேறு வங்கிகளும்

*(45ஆம் பக்கம் பார்க்க...)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com



Available on
www.magzter.com



Feedback and comments : samakalam@expressnewspapers.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org